157899

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

## 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க

## பல்கலைக்கழகங்கள் சட்டம்.

---

[1978, திசெம்பர் மாதம் 21 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

**1978, திசெம்பர் மாதம் 22 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.**

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 3.70 தபாற் செலவு : ரூபா 1.00

# 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

[1978 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆம் தேதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.—ஓ. 60/78
1139

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவொன்றையும், பல்கலைக் கழகச் சேவைகள் மேன்முறையீட்டுச் சபையொன்றையும் தாபிப் பதற்கும் ; வளாகங்கள், துறைகள் ஆகியவற்றுடன் கூடிய பல்கலைக்கழகங்களையும் வேறு உயர் கல்வி நிறுவனங்களையும் தாபிப்பதற்கும், பேணுவதற்கும், நிருவகிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும் ; அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டம் ஆக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், அதன் ஏற்பாடுகள் எல்லாம் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் கசற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அமைச்சர் நியமிக்கக்கூடிய அத்தகைய தேதியில் அல்லது தேதிகளில், நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

## பாகம் I

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தாபிக்கப்படுதல்

2. (1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவொன்று (இது இதனகத்துப்பின்னர் " ஆணைக்குழு " எனக் குறிப்பீடு செய்யப்படும்) தாபிக்கப்படுதல் வேண்டும் ; அது, இச்சட்டத்தின்கீழ் அப்போதைக்கு ஆணைக்குழுவின் உறுப்பினர்களாகவுள்ள ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தாபிக்கப்படுதல்.

(2) ஆணைக்குழு, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித் தொதுக்கப்பட்ட பெயரையும், இடையறு வழியுரிமையையும் ஒரு பொது இலச்சினையையும் கொண்ட இணைக்கப்பட்ட குழுவொன் றுதல் வேண்டும் என்பதுடன், பின்வருவனவற்றைச் செய்வதற் கான முழுத்தத்துவத்தையும் அதிகாரத்தையும் கொண்டிருத் தலும் வேண்டும் :—

(அ) அத்தகைய பெயரில் எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடரவும் அதற்கெதிராக வழக்குத் தொடரப்படவும் ;

(ஆ) அது விரும்பும்போது அவ்விலச்சினையை மாற்றவும் ;

(இ) அசைவுள்ள ஆதனம், அசைவற்ற ஆதனம் ஆகியவற்றைக் கொள்வனவு என்ற வகையாக அல்லது வேறுவகையாகக் கொள்ளவும், அத்துடன் அசைவுள்ள ஆதனம், அசை வற்ற ஆதனம் ஆகியவற்றை வைத்திருக்கவும், குத்த கைக்கு அல்லது வாடகைக்கு எடுக்கவும் அல்லது கொடுக்கவும், ஈடுவைக்கவும், அடகுவைக்கவும், விற்கவும் அல்லது வேறுவகையில் கையாளவும்.

1—ஏ 36615—6, 900 (09/78)

ஆணைக்குழுவின் குறிக்கோள்கள்.

3. ஆணைக்குழுவின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(1) தேசியக் கொள்கைக்கு இணங்கியிருக்கும் வண்ணம் பல்கலைக் கழகக் கல்வி பற்றித் திட்டமிடுதலும் ஒருங்கிணைத்தலும் ;

(2) பல்கலைக்கழகக் கல்வி தொடர்பாக, பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்பட்ட நிதிகளை உயர் கல்வி நிறுவனங் களுக்குப் பகிர்ந்தளித்தலும், அத்தகைய உயர் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றினதும் செலவினத்தைக் கட்டுப் படுத்தலும் ;

(3) உயர் கல்வி நிறுவனங்களில் கல்வித் தரங்களைப் பேணு தல் ;

(4) உயர் கல்வி நிறுவனங்களின் நிருவாகத்தை ஒழுங்கு படுத்துதல் ;

(5) உயர் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றுக்கும் மாணவர்களை அனுமதித்தலை ஒழுங்குபடுத்துதல் ; அத்துடன்

(6) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழு வுக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களை யும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும்.

ஆணைக்குழுவின் அமைப்பு.

4. (1) ஆணைக்குழு, ஒரு தவிசாளரையும், நான்கு வேறு உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும் ; அவர்கள் எல் லோரும் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழு, காலத்துக்குக் காலம், ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களைக் கொண்டனவும் அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் கொண்டவையுமான அத்தகைய நிலையியற் குழுக்களையும், நிமித்தக் குழுக்களையும் நியமிக்கலாம். எவ்வாறாயினும், அத்தகைய ஒவ்வொரு குழுவின் தவிசாளரும் ஆணைக்குழுவின் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களது பதவிக்காலம்.

5. (1) தவிசாளர் உட்பட, ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ் வொருவரும், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து கணிக்கப்பட்டதான ஐந்தாண் டுக் காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், அவர், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீள நியமிக்கப்படுவதற் குத் தகுதியுடையவராதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், உறுப்பினர் எவரும், அவரது பதவிக்காலம் முடிவடைவதன் முன்னரே தமது பதவியை வறி தாக்கினால், அவரை அடுத்துறுபவர், அத்தகைய அடுத்துறுபவர் அவரது பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, அவருக்கு முன்பு இருந்தவரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர், சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் தமது கைப்பட்ட கடிதம்மூலம், தமது பதவியைத் துறக்கலாம் ; ஆனால் அவ்வுறுப்பினரின் பதவிதுறப்பு ஏற்றுக்கொள்ளப்படும்வரை அவர் பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(3) தவிசாளர், அல்லது ஆணைக்குழுவின் வேறு உறுப்பினர் நோய் காரணமாக அல்லது வேறு பலவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறுகாரணத்துக்காக, அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருப்பின், விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய தவிசாளருக்காகச் செயலாற்றுவதற்கென வேறோர் உறுப்பினரை அல்லது அத்தகைய வேறு உறுப்பினரின் இடத்தில் அவருக்குப் பதிலாகச் செயலாற்றுவதற்கெனத் தக்கவோர் ஆளை, சனாதிபதி நியமிக்கலாம்.

(4) அமைச்சர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரோடு கலந்தாலோசித்து நிருணயிக்கும் அத்தகைய ஊதியமும் படிகளும், தவிசாளருக்கும் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்படுதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் கூட்டநடவடிக்கைகள்.

6. (1) ஆணைக்குழுவின் தவிசாளர், ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமைதாங்குதல் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமுகமளிக்காதிருந்தால், அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குவதற்கு, சமுகமாகவுள்ள உறுப்பினர்களிலிருந்து எவரேனும் உறுப்பினரை, அவ்வுறுப்பினர்கள் தெரிவு செய்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் கூட்டங்களுக்கான கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, எவ்வெப்போது தேவைப்படுமோ அவ்வப்போது, எவ்வாறுயினும் ஒவ்வொரு மாதத்திலும் ஒரு முறைக்குக் குறையாமல், ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடிய, அத்தகைய நேரத்திலும் இடத்திலும் கூடுதல் வேண்டும் என்பதுடன், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பில், இச்சட்டத்தின் கீழ் அது ஆக்கக்கூடிய அத்தகைய நடவடிக்கைமுறை விதிகளைக் கடைப்பிடித்தலும் வேண்டும்.

ஆணைக்குழுவின் தவிசாளர்.

7. (1) ஆணைக்குழுவின் தவிசாளர், அவ் ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழு அலுவல்களின் அன்றன்றைக்கான நிருவாகம், ஆணைக்குழுத் தவிசாளரின் கட்டுப்பாட்டில் இருத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, இச்சட்டத்தின் கீழ் அதற்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களுள்ளும், கடமைகளுள்ளும் பணிகளுள்ளும், 15 ஆம், 16 ஆம், 18 ஆம் பிரிவுகளின் கீழான

அத்தகைய தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் தவிர்ந்த, எவற்றையும், தீர்மானத்தின்மூலம், தவிசாளருக்குக் கைய ளிக்கலாம்.

(4) இச்சட்டத்தின் கீழ் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட, அல்லது அவருக்குக் குறித்தொதுக் கப்பட்ட, அல்லது அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங் களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும், அவர் ஆணைக்குழுவின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கு அமைந்த வராதல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவின் தவிசாளர், அவ்வாணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருப்பினும், அவர் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதி உறுப்பினர் அல்லா ரெனக் கருதப்படுதல் வேண்டும்.

ஆணைக்குழுவின பணியாட்டொகுதி.

8. (1) ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியை ஆணைக்குழு, நியமித்தல் வேண்டும்; அப்பணியாட்டொகுதி—

(அ) ஒரு செயலாளரையும் ; அத்துடன்

(ஆ) அதன் அலுவல்களைத் தகுந்தமுறையிலும் திறமை யாகவும் கொண்டுநடாத்துவதற்கு அவசியமானவர் களென ஆணைக்குழு கருதக்கூடிய அத்தகைய வேறு அலுவலர்களையும் ஊழியர்களையும்,

கொண்டதாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைய, ஆணைக் குழு—

(அ) ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினரைகளை நியமிக்க லாம், அவர்களைப் பதவியிலிருந்து நீக்கலாம் அத்துடன், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிர யோகிக்கலாம் ;

(ஆ) அத்தகைய பணியாட்டொகுதியினர்களின் கூலிகளை அல்லது சம்பளங்களை அல்லது வேறு ஊதியத்தை நிருணயிக்கலாம் ;

(இ) அத்தகைய பணியாட்டொகுதியினர்களின் சேவை நியதி களையும் நிபந்தனைகளையும் தீர்மானிக்கலாம் ; அத்துடன்

(ஈ) ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினர்களினது நன்மைக் காக நலன்புரி திட்டங்களையும் தாபித்து, ஒழுங்குபடுத் தலாம் என்பதுடன், அத்தகைய திட்டங்களுக்கு, அத்த கைய பணியாட்டொகுதியினர்கள் தொடர்பில் உதவு தொகைகளையும் வழங்கலாம்.

9. (1) ஆணைக்குழுவின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும், எவ்வமைச்சினால் அல்லது எவ்வமைச்சின்கீழ் அவ்வலுவலர் தொழிலுக்கமர்த்தப்பட்டாரோ அவ்வமைச்சின் செயலாளரதும், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரதும் சம்மதத்தோடு, ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு, அதே போன்ற சம்மதத்தோடு ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலத்துக்கு, தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தி நீங்கலாக, அப்பிரிவின் (3) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளிலுள்ள ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளிலுள்ள ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) அரசாங்கத்தோடு செய்துகொண்டுள்ள ஏதேனும் ஒப்பந்தத்தின்மூலம், குறித்துரைக்கப்பட்ட ஒரு காலத்துக்கு அரசாங்கத்தில் சேவைபுரிவாரென உடன்பட்டுக்கொண்டுள்ளவரான எவரேனும் ஆளை ஆணைக்குழு தொழிலுக்கமர்த்துமிடத்து, அந்த ஆள், ஆணைக்குழுவின் சேவையிலிருக்கும் காலப்பகுதி எதுவும், அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவை ஆற்றிய காலப்பகுதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவின் வேண்டுகோளின்பேரில், ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது வேறு ஊழியர், அந்த அலுவலரினதும் அல்லது ஊழியரினதும், அந்த உயர் கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரினதும் சம்மதத்தோடு, ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு, அதேபோன்ற சம்மதத்தோடு ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய காலப்பகுதிக்கு, தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது ஆணைக்குழுவாலும் அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலராலும் உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடிய அத்தகைய நியதிகளினதும், நிபந்தனைகளினதும் மீது, (ஓய்வூதிய உரிமைகள் அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பான நியதிநிபந்தனைகள் உட்பட) அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது வேறு ஊழியர், ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய பணியாட்டொகுதியிலுள்ள வேறு எவரேனும் உறுப்பினருக்குள்ளதைப் போன்ற அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அவர் அமைந்தவராதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் நிதியம்.

10. (1) ஆணைக்குழு, அதற்கென ஒரு நிதியத்தை வைத்திருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய நிதியத்துக்குப் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் ; அதாவது

(அ) ஆணைக்குழுவின் பயன்பாட்டுக்காகப் பாராளுமன்றத்தால் ஏற்பாடுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) எவ்வகையினதுமான மூலம் எதிலுமிருந்தும் நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியங்கள் என்றவகையாக ஆணைக்குழுவால் பெறப்படக்கூடிய அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும், அத்துடன் ஆணைக்குழுவால் அளிக்கப்பட்ட சேவைகளுக்காக அறவிடப்பட்ட கட்டணங்களும் ; அத்துடன்

(இ) அத்தகைய நிதியத்துக்குச் செலுத்தப்படவேண்டும் என இச்சட்டத்தால் அல்லது இச்சட்டத்தின்கீழ்த் தேவைப்படுத்தப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்,

செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய நிதியத்திலிருந்து பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் ; அதாவது—

(அ) ஆணைக்குழு அதன் அலுவல்களை நடாத்துவதில், அல்லது இந்தச் சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலுள்ள சட்டத்தின்கீழ், அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும், அதனால் உறப்பட்ட செலவினம் எதனையும் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவையான எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய நிதியத்திலிருந்து கொடுக்கப்படவேண்டும் என இச்சட்டத்தால் அல்லது இச்சட்டத்தின்கீழ்த் தேவைப்படுத்தப்படும் எல்லாப் பணத்தொகைகளும்,

செலுத்தப்படுதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் கணக்குகளும் நிதி ஆண்டும்.

11. (1) திறைசேரி, கணக்காய்வாளர் தலைமையதிபதியோடு கலந்தாலோசித்துத் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும், ஆணைக்குழு, அதன் கணக்குகள் வைத்திருக்கப்படும்படி செய்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் கணக்குப்புத்தகங்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(3) அரசாங்கத்தின் நிதியாண்டே ஆணைக்குழுவின் நிதியாண்டாகவும் இருத்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் கணக்குகளைக் கணக்காய்தல்.

**12.** (1) ஆணைக்குழு அதன் கணக்குகளை, ஒவ்வோர் ஆண்டும், கணக்காய்வாளர் தலைமையதிபதியைக் கொண்டு கணக்காய்வித்தல் வேண்டும். அத்தகைய கணக்குகளைக் கணக்காய்வதில் தமக்கு உதவி அளிக்கும் நோக்கத்துக்காக, கணக்காய்வாளர் தலைமையதிபதி, தகைமைபெற்ற கணக்காய்வாளர் எவரையும் அல்லது கணக்காய் வாளர்கள் எவர்களையும் சேவைக்கு அமர்த்தலாம்; இவர்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பணிப்பின்கீழும் கட்டுப் பாட்டின்கீழும் செயலாற்றுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் கணக்குகளைக் கணக்காய்வதில் கணக்காய் வாளர் தலைமையதிபதியினால் உறப்பட்ட செலவைச் சமாளிக்கும் நோக்கத்துக்காக, அமைச்சர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டோடு தீர்மானிக்கக் கூடிய அத்தகைய ஊதியம், ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும். ஆணைக்குழுவிடமிருந்து கணக்காய்வாளர் தலைமையதிபதி பெற்ற ஊதியம் எதுவும், அத்தகைய கணக்காய்வு நோக்கத்துக்காக அவரால் வேலைக்கமர்த்தப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் எவருக்கும் அவர் கொடுத்த பணத்தொகைகள் எவற்றையும் கழித்தபின்னர் திரட்டு நிதியத்தில் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக, " தகைமைபெற்ற கணக்காய் வாளர் " என்னுஞ் சொல்லமைப்பு—

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் ஓர் உறுப்பினராகவிருப்பதோடு, கணக்கா ளராகத் தொழில் புரியவென அந்நிறுவகத்தின் பேரவையால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடைய தனியாள் ஒருவர் என்று பொருள்படும்; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர்கள் குழுமத்தின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருப்பதோடு கணக்காளராகத் தொழில் புரியவென, அந்நிறுவகத் தின் பேரவையால் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழை யுடையவராகவிருக்கின்றனரோ அந்த வரைவுபெற்ற கணக்காளர்கள் குழுமமொன்று என்று பொருள்படும்.

(4) கணக்காய்வாளர் தலைமையதிபதி, ஆணைக்குழுவின் கணக் குகளைப் பரிசோதித்து—

(அ) அவருக்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் விளக் கங்களையும் அவர் பெற்றிருந்தாரா அல்லரா எனக் கூறுவதும் ;

(ஆ) அவரது அறிக்கையிற் குறிப்பீடு செய்யப்பட்ட கணக்குகள், அவ்வாணைக்குழுவின் நிதி நிலைமை பற்றி உண்மையாகவும் நியாயமாகவும் வெளிக்காட்டும் வண்ணம் செம்மையாகத் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதைக் கூறுவதும் ; அத்துடன்

(இ) அந்த ஆணைக்குழுவின் முயற்சிகள், கணக்குகள் ஆகியவை பற்றிய ஏதேனும் பரிசோதனையின்போது, பாராளுமன்றம் அக்கறைகொள்ளக்கூடுமென அவர் அபிப்பிராயப்படும் கணக்குகளிலுள்ள ஏதேனும் விடயத்துக்குக் கவனத்தை ஈர்ப்பதுமான

அறிக்கையொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(5) கணக்காய்வாளர் தலைமையதிபதி, தமது அறிக்கையை ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை, ஆணைக்குழுவாற் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், ஆணைக்குழுவானது, அத்தகைய அறிக்கை அவ்வாணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள், அத்தகைய அறிக்கையிற் சுட்டிக்காட்டப்பட்ட கருமங்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி, கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

(7) ஒவ்வோர் ஆண்டும், ஆணைக்குழு, கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையைப் பெற்றதன்மேல், அத்தகைய அறிக்கையை, அதுபற்றி ஆணைக்குழுவின் (6) ஆம் உட்பிரிவின்கீழான எவையேனும் குறிப்புரைகளோடும் அவ்வறிக்கை தொடர்புபடுத்தும் கணக்குக் கூற்றோடும் சேர்த்து மூன்று மாதங்களுக்குள்ளாக, அமைச்சருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்; அவ்வமைச்சர், அவற்றின் பிரதிகளை, அத்தகைய கணக்குகளும் அறிக்கையும் எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டு முடிவடைவதன் முன்னர், பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கச் செய்தல் வேண்டும் ; அத்துடன், ஆணைக்குழுத் தவிசாளர், பாராளுமன்றத்தின் பகிரங்கக் கணக்குகள் குழு முன்னர் தோன்றி, அவை பற்றி எழும் வினாக்கள் எவற்றுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(8) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், ஆணைக்குழுவின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுதலுக்கும் அதன் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

இச்சட்டம், முதலியவற்றின்கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப் பின்மீது எடுக்கப்படும் நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

13. (1) (அ) இச்சட்டத்தின்கீழ், அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின்கீழ், ஆணைக்குழுவினால் நல்லெண்ணத்தோடு செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக ஆணைக்குழுவுக்கெதிராக ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ், அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின்கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் ஆணைக் குழுவின் அல்லது அதன் பணியாட்

தொகுதியின் உறுப்பினர் எவராலும் நல்லெண்ணத்தோடு செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக, அவருக்கு எதிராக,

துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் இருத்தலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவுக்கு எதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில், ஆணைக்குழுவால் உறப்பட்ட ஏதேனும் செலவு ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் ஆணைக்குழுவுக்குக் கொடுக்கப்பட்ட, அல்லது ஆணைக்குழுவினால் அறவிடப்பட்ட செலவுத்தொகைகள் எவையும், அத்தகைய நிதியத்தில் வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின்கீழ், அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின்பேரில், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில், நீதிமன்றம் எதிலும் அவருக்கு எதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட செலவு எதுவும், அச்செயலானது நல்லெண்ணத்தோடு செய்யப்பட்டதென நீதிமன்றம் கருதினால், (அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில், அத்தகைய செலவானது அவரால் அறவிடப்பட்டாலன்றி) ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவுக்கு எதிராகக் கொணரப்பட்ட வழக்கு எதிலும், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரின் உடலுக்கு அல்லது ஆதனத்துக்கு எதிரான எழுத்தாணையெதுவும் விடுக்கப்படுதலாகாது.

## பாகம் II

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்

**14.** இப்பாகத்தின் அடுத்துவரும் ஏற்பாடுகள், ஆணைக்குழுவுக்கு ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அல்லது பணியை அளிக்கும் அல்லது அதன் மீது சுமத்தும் அல்லது அதற்குக் குறித்தொதுக்கும் இச்சட்டத்தின் வேறு ஏதேனும் பாகத்திலுள்ள ஏற்பாடுகள் நடைமுறையிலிருப்பதைப் பங்கப்படுத்துதல் ஆகாது.

இப்பாகத்தில் அடுத்துவரும் ஏற்பாடுகள் வேறு சில ஏற்பாடுகள் நடைமுறையிலிருத்தலைப் பங்கப்படுத்தலாகாது.

ஆணைக்குழுவின் தத்துவங்கள்.

**15.** ஆணைக்குழு, பின்வரும் தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் கொண்டிருத்தலும் பிரயோகித்தலும் வேண்டும் :—

(i) உயர் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றினதும் நிதித் தேவைப்பாடுகள் பற்றிக் காலத்துக்குக் காலம் விசாரித்தல் அல்லது நுண்ணாயதல் ;

(ii) உயர் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றினதும் பராமரிப்புக்கும் வளர்ச்சிக்குமாக, அல்லது வேறேதேனும் பொதுவான அல்லது சிறப்பான நோக்கத்துக்காக, மூன்றாண்டுக்கொருமுறையான வரவுசெலவுத் திட்டங்களை, அந்நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபையோடு கலந்தாலோசித்து, காலத்துக்குக் காலம், தயாரித்தல் ;

(iii) உயர் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றுக்கும் எத்தன்மையானதும் எத்தொகையினதுமான மானியத்தை வழங்கல் விரும்பத்தக்கது அல்லது அவசியமானது என்பது பற்றிக் காலத்துக்குக் காலம் அமைச்சருக்கு விதப்புரைகள் செய்தல் ;

(iv) அனைத்தடக்கமான கூலிகள், சம்பளங்கள் பற்றிய அரசாங்கக் கொள்கைக்குட்பட்டு, உயர் கல்வி நிறுவனங்களின் பணியாட்டொகுதியிலுள்ள பல்வேறுபட்ட தரங்களில் உள்ளோருக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஊதியத்தின் தொகையையும், அத்தகைய பணியாட்டொகுதியினர்களுக்குக் கிடைக்கவேண்டிய பிற நன்மைகளின் தன்மையையும் அளவையும் பற்றிக் காலத்துக்குக் காலம் தீர்மானித்தல் ;

(v) உயர் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றினதும் ஆளும் அதிகார சபையோடு கலந்தாலோசித்து, அவற்றில் ஏற்பாடு செய்யப்பட வேண்டிய கற்கை நெறிகளையும், வழங்கப்படவேண்டிய பட்டங்களையும், டிப்புளோமாக்களையும், ஏனைய கல்விச் சிறப்புக்களையும் தீர்மானித்தல் ;

(vi) உயர் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றினதும் ஆளும் அதிகாரசபையோடு கலந்தாலோசித்து, ஒவ்வோர் ஆண்டிலும் உயர் கல்விநிறுவனம் ஒவ்வொன்றிலும் அனுமதிக்கப்பட வேண்டிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கையையும், அதிலுள்ள பல்வேறு கற்கைநெறிகளுக்கு அவ்வெண்ணிக்கையினரைப் பகிர்ந்தொதுக்குதல் பற்றியும் காலத்துக்குக் காலம் தீர்மானித்தல் ;

(vii) அனுமதிப்புக் குழுவொன்றுடன் கலந்தாலோசித்து உயர் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றிலும் அனுமதிக்கப்படுவதற்கென மாணவர்களைத் தெரிந்தெடுத்தல்; அனுமதிப்புக் குழுவின் உறுப்பாண்மை அமைப்பும், தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும் ;

(viii) பல்கலைக்கழகம் ஒவ்வொன்றினதும் ஆளும் அதிகார சபையோடு கலந்தாலோசித்து, அப் பல்கலைக்கழகத்தின் அல்லது ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மாணவர்களாக இராதோர், அப்பல்கலைக்கழகத்தின் பட்டங்களையும், திப்புளோமாக்களையும், ஏனைய கல்விச் சிறப்புகளையும் பெறுதலை இயலச் செய்வதற்காக அதனால் நடாத்தப்படவேண்டிய வெளிவாரித் தேர்வுகள் பற்றித் தீர்மானித்தல் ;

(ix) உயர் கல்வி நிறுவனங்களுக்கான பணியாட்டொகுதியினர்களைப் புதிதாகச் சேர்த்தற்கான திட்டங்களையும் அவர்களின் நியமனத்துக்கான நடவடிக்கைமுறைகளையும் வகுத்தல் ;

(x) ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்திலுள்ள மாணவர்களது ஒழுக்காறு பற்றியவையும், அந்த உயர் கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரினால் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வரப்படக்கூடியவையுமான அத்தகைய கருமங்கள் பற்றி, நுண்ணாய்தலும் அல்லது நுண்ணாய்வித்தலும், பரிகார முறையான நடவடிக்கைகள் எடுத்தலும் ; அத்துடன்

(xi) இச்சட்டத்திற் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களுள் எதனையும் பயனுறப் பிரயோகிப்பதற்கும், 3 ஆம் பிரிவில் தரப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு செயல்கள் அல்லது காரியங்கள் எல்லாவற்றையும் செய்தல்.

16. ஆணைக்குழு, அதன் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததன் பின்னர் ஆறுமாத காலம் முடிவடையுமுன், அவ்வாண்டின்போதான அதன் முயற்சிகள் பற்றிய முழு விவரமும் தருகின்ற அறிக்கையொன்றை அமைச்சருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் ; அமைச்சர், அதன் பிரதிகளைப் பாராளுமன்றத்தின் முன்னர் சமர்ப்பிக்கச் செய்தல் வேண்டும். அத்தகைய அறிக்கையின் பிரதிகள், ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய விலையில் பொது மக்களுக்குக் கிடைக்கக்கூடியனவாக ஆணைக்குழு செய்வித்தல் வேண்டும். ஆணைக்குழுவின் ஆண்டு அறிக்கை

17. இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவுக்குள்ள தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் அது பயனுறப் பிரயோகிப்பதனையும், புரிவதனையும், நிறைவேற்றுவதனையும் இயலச்செய்வதற்கு அவசியமாகக்கூடிய அத்தகைய எல்லாக் கருமங்களோடும் தொடர்புபட்ட எல்லா விவரத்திரட்டுகளையும் அல்லது தகவல்களையும் அறிவித்தலிற் குறித்துரைக்கப்படும் அத்தகைய காலத்துக்குள், ஆணைக்குழுவுக்குக் கொடுத்துதவும்படி அந்த ஆணைக்குழு ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபையை அறிவித்தல் மூலம் தேவைப்படுத்தலாம் ; அத்துடன், அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய ஆளும் அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும். தகவல்கள், விவரத் திரட்டுகள் ஆகியவற்றைக் கோருவதற்கு ஆணைக்குழுவுக்குள்ள தத்துவம்.

கட்டளைச்சட்டங்களை ஆக்குவதற்கு ஆணைக்குழுவுக்குள்ள தத்துவம்.

**18.** (1) ஆணைக்குழு இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பயனுறப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அதனை இயலச் செய்வதற்கு அவசியமானவையென அது கருதக்கூடிய அத்தகைய எல்லாக் கருமங்கள் தொடர்பிலும், கட்டளைச்சட்டங்களை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, பின்வரும் விடயங்கள் எல்லாம் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் ஆணைக்குழு கட்டளைச்சட்டங்களை ஆக்கலாம் :—

(அ) கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படவேண்டிய, எக்கருமங்கள் தொடர்பில இச்சட்டத்தின் வேறேதேனுமோர் ஏற்பாட்டின்மூலம் ஆணைக்குழுவினால் கட்டளைச்சட்டங்கள் ஆக்கப்படலாமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது ஆக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ, அக்கருமங்களெல்லாம் ;

(ஆ) ஆணைக்குழுவினதும் உயர் கல்வி நிறுவனங்களினதும் பணியாட்டொகுதியினர்களது சேவை பற்றிய நியதிகளும் நிபந்தனைகளும் ;

(இ) ஆணைக்குழுவினதும், உயர் கல்வி நிறுவனங்களினதும் பணியாட்டொகுதிக்குப் புதிதாக ஆட்சேர்க்கும் திட்டங்களும், அவர்களின் நியமனத்துக்கான நடவடிக்கை முறையும் ;

(ஈ) பட்டங்கள், திப்புளோமாக்கள், ஏனைய கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை வழங்குவதற்காக, பல்கலைக்கழகங்களில் போதனை முறைத் தரங்களைத் தாபித்தலும், பேணுதலும் ;

(உ) உயர் கல்வி நிறுவனங்களிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள வசதிகளை ஒருங்கிணைத்தல் ;

(ஊ) உயர் கல்வி நிறுவனங்களினால் ஏற்பாடுசெய்து ஒழுங்கமைக்கப்படக்கூடிய விசாலிப்புச் சேவைகளின் தன்மையும் நோக்கெல்லையும் ;

(எ) வெளிநாட்டுப் பட்டங்களையும், திப்புளோமாக்களையும், ஏனைய கல்விச் சிறப்புக்களையும் அங்கீகரித்தல் ;

அத்துடன்,

(ஏ) இதனகத்து முன்னர் கூறப்பட்ட எவற்றேனுடும் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான வேறேதேனும் கருமம்.

(3) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம் ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அதில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் III

### அமைச்சரின் தத்துவங்கள்

**19.** அமைச்சர், பல்கலைக்கழகக் கல்வியினைப் பொதுவாக நெறிப்படுத்துவதற்கும் இச்சட்டத்தை நிருவகிப்பதற்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

அமைச்சரின் பொறுப்பு.

**20.** (1) (அ) அமைச்சர், பல்கலைக்கழகக் கல்விக்கும், இச்சட்டத்தை நிருவகிப்பதற்குமான அவரது பொறுப்பைப் பயனுற நிறைவேற்றுவதற்கு அவரை இயலச்செய்வதற்காக, நிதி, பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்படவேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை, போதனா மொழி ஆகிய விடயங்களில் தேசியக் கொள்கையைப் பின்பற்றிச்செல்வதற்கு அவசியமானவை என அவர் கருதக்கூடிய அத்தகைய எழுத்து மூலமான பொதுப்பணிப்புகளைக் காலத்துக்குக் காலம் ஆணைக்குழுவுக்கு விடுக்கலாம். அத்தகைய பணிப்பு ஒவ்வொன்றும் இயன்றளவு விரைவில் பாராளுமன்றத்தின் முன்னர் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

ஆணைக்குழுவுக்குப் பணிப்புகள் விடுப்பதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.

(ஆ) ஆணைக்குழு அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் என்பதுடன், ஒவ்வோர் உயர் கல்வி நிறுவனத்தினதும் ஆளும் அதிகாரசபையானது, அவ்வாணைக்குழு அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுவதனை இயலச்செய்வதற்கு அவசியமாகக்கூடிய அத்தகைய வசதிகளை ஆணைக்குழுவுக்கு அல்லது அதன் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு, அளித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தகவல்களைக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(2) (அ) அமைச்சர், பல்கலைக்கழகக் கல்விக்கும் இச்சட்டத்தின் நிருவாகத்துக்கும் ஆன அவரது பொறுப்பைப் பயனுற நிறைவேற்றுவதற்கு அவரை இயலச்செய்யும் நோக்கத்துக்காக, அமைச்சர், ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தின் முயற்சிகள் எல்லாவற்றையும் பற்றி அல்லது அவற்றில் எதனையும் பற்றி, அல்லது அதன் நிருவாகம் பற்றி ஆணைக்குழு நுண்ணாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமெனக் காலத்துக்குக் காலம் கட்டளையிடலாம்.

(ஆ) ஆணைக்குழு அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்; அத்துடன், அக்கட்டளை எந்த உயர் கல்வி நிறுவனத்துடன் தொடர்புபட்டதோ அந்த உயர் கல்வி நிறுவனம் எதனதும் ஆளும் அதிகாரசபை, அவ்வாணைக்குழு அத்தகைய ஏதேனும் கட்டளைக்கு இணங்கியொழுகுவதனை இயலச்செய்வதற்கு அவசியமாகக்கூடிய அத்தகைய வசதிகளை ஆணைக்குழுவுக்கு அல்லது அதன் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு, அளித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தகவல்களைக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(3) ஓர் உயர் கல்வி நிறுவனத்தில் நிலவும் நிலைமை, நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்துண்டாக்குகின்றதென அல்லது தேசியக் கொள்கைநெறிக்குத் தீங்குண்டாக்குகின்றதென அல்லது பங்கமுண்டாக்குகின்றதென அமைச்சர் திருப்தியடையுமிடத்து, அத்த

கைய நிலைமையைக் கட்டுப்பாட்டின்கீழ் கொணருவதற்கு அவசியமானவையென அவர் கருதக்கூடிய அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும்படி அவர் ஆணைக்குழுவைப் பணிக்கலாம்.

(4) ஏதேனும் வேலை நிறுத்தத்தினால் அல்லது கதவடைப்பினால் அல்லது வேறு ஏதேனும் காரணத்தால், ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தின் வேலை அல்லது நிருவாகம் பாரதூரமாகச் சீர்குலைந்துள்ளதெனவும் அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தின் அதிகாரிகள் வழமை நிலைமையை மீளக் கொணருவதற்குத் தவறியுள்ளாரகளெனவும் அமைச்சர் திருப்தியடையுமிடத்து, அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தில் வழமை நிலைமையை மீளக்கொணருவதனை உறுதிப்படுத்துவதற்கு அவரை இயலச் செய்வதற்கு அவசியமாகக்கூடிய அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் அமைச்சர் எடுக்கலாம். வழமை நிலைமை மீளக்கொணரப்படும் வரையில், அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய உயர் கல்வி நிறுவனம் பற்றிய பின்வரும் விடயங்கள் எல்லாம் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் அவசியமானவையென அவர் கருதக்கூடிய அத்தகைய எல்லா ஏற்பாடுகளையும் செய்யலாம் :—

(அ) அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தை மூடுதல் ;

(ஆ) இச்சட்டத்தின் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின் கீழான ஏதேனும் தத்துவத்தைக், கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கும் அல்லது புரியும் அல்லது நிறைவேற்றும், நோக்கத்துக்காக அத்தகைய உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் எவரேனும் அலுவலருக்கு, அதிகார சபைக்கு அல்லது வேறு குழுவுக்குப் பதிலாக, எவரேனும் ஆளைத் தகுதிவாய்ந்த அதிகாரியாகப் பெயர்குறித்தோ அல்லது பதவிப்பெயர்குறித்தோ நியமித்தல் ; அத்துடன்

(இ) மேற்சொல்லப்பட்ட கருமங்கள் எவற்றோடும் சம்பந்தப்பட்ட அல்லது அவை தொடர்பான வேறு ஏதேனும் கருமம்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளையெதுவும், அதிற் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும். அத்தகைய கட்டளையெதுவும், அதன் பின்னர், கூடிய விரைவில், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், முன்னரே ஒழிக்கப்பட்டாலன்றி, அதன்பின்னரான மூன்று ஆண்டுகளை விஞ்சாத காலத்துக்கு வலுவிலிருத்தலும் வேண்டும்.

## பாகம் IV

## பல்கலைக்கழகங்கள், வளாகங்கள், பல்கலைக்கழகக் கல்லூரிகள் ஆகியன

**21.** அமைச்சர், ஆணைக்குழுவோடு கலந்தாலோசித்து, கட்டளையொன்றின் மூலம் (இது இதனகத்துப் பின்னர் " பல்கலைக்கழகக் கட்டளை " எனக் குறிப்பீடு செய்யப்படும்)— பல்கலைக்கழகம் ஒன்றைத் தாபித்தல்.

(அ) அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட வேண்டிய வாறான அத்தகைய எல்லாக் கல்விப் பிரிவுகளிலும் உயர் கல்விக்கு ஏற்பாடு செய்து, அதை மேம்படுத்தி, வளர்க்கும் நோக்கத்திற்காகப் பல்கலைக்கழகம் ஒன்றைத் தாபிக்கலாம் ; அப்பல்கலைக்கழகமானது இடையறு வழியுரிமையும் ஒரு பொது இலச்சினையும் கொண்ட இணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய பல்கலைக்கழகத்துக்கு ஒரு பெயரையும் மகுடத்தையும் குறித்தொதுக்கலாம் ;

(இ) அத்தகைய பல்கலைக்கழகம் இருக்கவேண்டிய அமைவிடத்தை அல்லது இடநிலையைக் குறித்துரைக்கலாம் ;

(ஈ) அத்தகைய பல்கலைக்கழகத்துக்கு ஒரு துறையை அல்லது துறைகளைக் குறித்தொதுக்கலாம் ; அத்துடன்

(உ) அத்தகைய வளாகத்தில் அல்லது வளாகங்களில் அடங்கும் கற்கைப் பகுதிகளைக் குறித்துரைக்கலாம்.

**22.** அமைச்சர், ஆணைக்குழுவோடு கலந்தாலோசித்து, கட்டளையொன்றின் மூலம் (இது இதனகத்துப் பின்னர் " வளாகக் கட்டளை " எனக் குறிப்பீடு செய்யப்படும்)— வளாகம் ஒன்றைத் தாபித்தல்.

(அ) பல்கலைக்கழகமொன்றின் வளாகம் ஒன்றைத் தாபிக்கலாம் ;

(ஆ) அத்தகைய வளாகத்துக்கு ஒரு பெயரையும் மகுடத்தையும் குறித்தொதுக்கலாம் ;

(இ) அத்தகைய வளாகம் இருக்க வேண்டிய அமைவிடத்தை அல்லது இடநிலையைக் குறித்துரைக்கலாம் ; (இது வளாகமானது எந்தப் பல்கலைக்கழகத்துக்குச் சேர்ந்ததாகவிருக்குமோ அந்தப் பல்கலைக்கழகத்தின் இருக்கையாக இராத அமைவிடமாக அல்லது இடநிலையாக இருத்தல் வேண்டும்.)

(ஈ) அத்தகைய வளாகத்துக்கு ஒரு துறையை அல்லது துறைகளைக் குறித்தொதுக்கலாம் ; அத்துடன்

(உ) அத்தகைய துறையில் அல்லது துறைகளில் அடங்கும் கற்கைப் பகுதிகளைக் குறித்துரைக்கலாம்.

திறந்த பல்கலைக்கழகம் ஒன்றைத் தாபித்தல்.

23. (1) அமைச்சர், ஆணைக்குழுவோடு கலந்தாலோசித்து கட்டளையொன்றின் மூலம் (இதனகத்துப்பின்னர் " திறந்த பல்கலைக்கழகக் கட்டளை " எனக் குறிப்பீடு செய்யப்படும்)--

(அ) 21 ஆம், 22 ஆம், 24 ஆம், 25 ஆம் பிரிவுகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட நிறுவனங்களுள் எதிலும் மாணவர்களாக இராதோருக்கு உயர் கல்வி வசதிவாய்ப்புகளை ஏற்பாடு செய்யும் நோக்கத்துக்காக திறந்த பல்கலைக்கழகம் ஒன்றைத் தாபிக்கலாம் ; அது இடையறு வழியுரிமையும் ஒரு பொது இலச்சினையும் கொண்ட, இணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய திறந்த பல்கலைக்கழகத்துக்கு ஒரு பெயரையும் மகுடத்தையும் குறித்தொதுக்கலாம் ; அத்துடன்

(இ) அத்தகைய திறந்த பல்கலைக்கழகம் இருக்கவேண்டிய அமைவிடத்தை அல்லது இடநிலையைக் குறித்துரைக்கலாம்.

(2) திறந்த பல்கலைக்கழகத்தின் அமைப்பும், அதன் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் கட்டளைச்சட்டத்தால் விதந்துரைக்கப்படுதல் வேண்டும்.

பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்றைத் தாபித்தல்.

24. அமைச்சர் ஆணைக்குழுவோடு கலந்தாலோசித்து கட்டளையொன்றின் மூலம் (இதனகத்துப் பின்னர் " பல்கலைக்கழகக் கல்லூரிக் கட்டளை " எனக் குறிப்பீடு செய்யப்படும்)—

(அ) அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட வேண்டிய வாறான அத்தகைய எல்லாக் கல்விப் பிரிவுகளிலும் உயர் கல்விக்கு ஏற்பாடு செய்து, அதை மேம்படுத்தி, வளர்க்கும் நோக்கத்திற்காகப் பல்கலைக்கழகக் கல்லூரியொன்றைத் தாபிக்கலாம் ; அந்தப் பல்கலைக்கழகக் கல்லூரி, இடையறு வழியுரிமையும், பொது இலச்சினையும் கொண்ட இணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய கல்லூரிக்கு ஒரு பெயரையும் மகுடத்தையும் குறித்தொதுக்கலாம் ;

(இ) அத்தகைய கல்லூரி இருக்கவேண்டிய அமைவிடத்தை அல்லது இடநிலையைக் குறித்தொதுக்கலாம் ;

(ஈ) அத்தகைய பல்கலைக்கழகக் கல்லூரிக்கு ஒரு துறையை அல்லது துறைகளைக் குறித்தொதுக்கலாம் ;

(உ) அத்தகைய துறையில் அல்லது துறைகளில் அடங்கும் கற்கைப் பகுதிகளைக் குறித்துரைக்கலாம் ; அத்துடன்

(ஊ) அத்தகைய கல்லூரி, எந்தப் பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்படல் வேண்டும் என்பதைக் குறித்துரைக்கலாம்.

**25.** ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் தேர்வுகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிகளை ஏற்பாடு செய்யும் நோக்கத்துக்காக, ஆணைக்குழு, அமைச்சரின் ஒருப்பாட்டோடும், கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாகவும், நிறுவனங்களுக்கு அங்கீகாரமளிக்கலாம்.

*அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிகளை ஏற்பாடுசெய்வதற்காக இப்போதுள்ள நிறுவனங்களுக்கு அங்கீகாரமளித்தல்.*

**26.** ஒவ்வொரு பல்கலைக்கழகக் கட்டளையும், வளாகக் கட்டளையும், திறந்த பல்கலைக்கழகக் கட்டளையும், பல்கலைக்கழகக் கல்லூரிக் கட்டளையும், கசற்றில் வெளியிடப்படுதல் வேண்டும். அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும், அதிற் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும் என்பதுடன், அதன் பின்னர் கூடியளவு விரைவாகப் பாராளுமன்றத்தின்முன்னர் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

*21 ஆம், 22 ஆம், 23 ஆம், 24 ஆம் பிரிவுகளின் கீழான ஒவ்வொரு கட்டளையும், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.*

**27.** (1) ஒரு பல்கலைக்கழகக் கட்டளை, வளாகக் கட்டளை, திறந்த பல்கலைக்கழகக் கட்டளை அல்லது பல்கலைக்கழகக் கல்லூரிக் கட்டளை, ஆணைக்குழுவின் விதப்புரையின்பேரில், அமைச்சரால் திருத்தப்படலாம், வேறுபடுத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம்.

*21 ஆம், 22 ஆம், 23 ஆம் அல்லது 24 ஆம் பிரிவுகளின் கீழான கட்டளையை மாற்றுதல்.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும், கசற்றில் வெளியிடப்படுதல் வேண்டும். அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும், அதிற் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும் என்பதுடன், அதன் பின்னர் கூடியளவு விரைவாகப் பாராளுமன்றத்தின் முன்னர் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

## பாகம் V

## பல்கலைக்கழகத்தின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்

**28.** (1) இருபத்தோராம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட பல்கலைக்கழகக் கட்டளையொன்று வலுவுக்கு வந்ததும், அக்கட்டளையினாற் குறித்தொதுக்கப்பட்ட பெயரும் மகுடமும் கொண்டதும், பின் வருவனவற்றைச் செய்வதற்கான முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதும் ஆன ஒரு பல்கலைக்கழகம் தாபிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் :—

*பல்கலைக்கழகக் கட்டளையும், ஒரு பல்கலைக்கழகத்தின் பொதுவான தத்துவங்களும்.*

(அ) அத்தகைய பெயரில், எல்லாச் சட்ட நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடரவும் வழக்குத் தொடரப்படவும் ;

(ஆ) விரும்பும்போது இலச்சினையை மாற்றவும் ;

(இ) அசைவுள்ள ஆதனம், அசைவற்ற ஆதனம் ஆகியவற்றைக் கொள்வனவு என்ற வகையாக அல்லது வேறுவகையாகக் கொள்ளவும், அத்தகைய எதேனும் கொள்வனவின் பயனால் அல்லது ஏதேனும் வழங்கலால் அல்லது நன்கொடையால், குத்தகையால் மரணசாதன முறை உரித்து மாற்றத்தால், அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாகவரக்கூடிய அத்தகைய ஏதேனும் ஆதனத்தை எடுக்கவும், ஏற்கவும் வைத்திருக்கவும்;

(ஈ) அத்தகைய ஏதேனும் ஆதனத்தை விற்கவும், அடமானம் வைக்கவும், குத்தகைக்கு விடவும், கொடுத்து மாற்றவும் அல்லது வேறுவகையாகக் கையாளவும் :

ஆயின், எப்படியிருப்பினும், அத்தகைய ஏதேனும் ஆதனத்தின், விற்பனை, அடமானம், குத்தகை, கொடுத்து மாற்றல் அல்லது வேறுவகையான கையாளுதல் எதுவும், எந்தச் சட்டத்தால் அல்லது எந்தச் சாதனத்தால் அல்லது எந்தக் கட்டளையால் அத்தகைய ஆதனம் பல்கலைக்கழகத்துக்கு உரித்தாக்கப்பட்டதோ அந்தச்சட்டத்தால், சாதனத்தால் அல்லது கட்டளையால் விதிக்கப்பட்ட ஏதேனும் மட்டுப்பாட்டை, நிபந்தனையை அல்லது தடையை மீறிச் செய்யப்பட்டிருந்தால், அந்த விற்பனை, அடமானம், குத்தகை, கொடுத்துமாற்றல், அல்லது வேறுவகையான கையாளல் செல்லுபடியற்றதாதல் வேண்டும் ; அத்துடன்

(உ) இச்சட்டத்தால் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தால் பல்கலைக்கழகத்துக்கு அளிக்கப்படக்கூடிய, அல்லது அதன்மீது சுமத்தப்படக்கூடிய அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்படக் கூடிய அத்தகைய எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும்.

(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளினால் ஒரு பல்கலைக்கழகத்துக்கு அளிக்கப்பட்ட தத்துவங்கள், இச்சட்டத்தால் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தினால் வேறுவகையாக வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டாலொழிய, அதன் பேரவையால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

ஒரு பல்கலைக் கழகத்தின் தத்துவங்கள்.

29. ஆணைக்குழுவின் தத்துவங்களுக்கும், கடமைகளுக்கும், பணிகளுக்கும் அமைய ஒரு பல்கலைக்கழகம் பின்வரும் தத்துவங்களை உடையதாதல் வேண்டும் :—

(அ) மாணவர்களை அனுமதித்தலும் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கல்விப் பிரிவில் போதலை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தலும் ;

(ஆ) வெவ்வேறு கல்விப் பிரிவுகளில் தேர்ச்சிபெற்றுள்ள ஆட்களின் தேர்ச்சி அளவை அறிந்துகொள்ளும் நோக்கத்துக்காகத் தேர்வுகளை நடாத்துதல் ;

(இ) இப்பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களையொத்த அல்லது கணிசமான அளவு ஒத்த குறிக்கோள்களையுடைய, இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள வேறு பல்கலைக்கழகங்களோடு அல்லது நிறுவனங்களோடு, ஆசிரியர்களையும், மாணவர்களையும், கல்விமான்களையும் பரிமாறுதல் மூலம் அல்லது வேறுவகையாக ஒத்துழைத்தல் ;

(ச) பட்ட வகுப்புக்கு மேற்பட்ட கற்கைநெறிகளை ஏற்பாடு செய்தலும், இந்நோக்கத்திற்காக, இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள வேறு பல்கலைக்கழகங்களோடு அல்லது அதிகாரசபைகளோடு, பல்கலைக்கழகம் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய முறையினும் அத்தகைய நோக்கங்களுக்காகவும், ஒத்துழைத்தலும் ;

(உ) பல்கலைக்கழகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதிலும், அங்கீகரிக்கப்பட்ட கற்கை நெறிகளைப் பயின்று, துணைவிதியினால் விதித்துரைக்கப்பட்டவையான பல்கலைக்கழகத்தின் தேர்வுகளில் தேறியுள்ளவர்களுக்கும் தேறியுள்ளவர்கள் மீதும், பட்டங்களையும், திப்புளோமாக்களையும், வேறு கல்விச் சிறப்புக்களையும் வழங்குதலும் சூட்டுதலும் ;

(ஊ) பல்கலைக்கழகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தில் மாணவர்களாகவிராதோர், பல்கலைக்கழகத்தின் பட்டங்களையும், திப்புளோமாக்களையும், வேறுகல்விச் சிறப்புக்களையும் பெறுவதனை இயலச் செய்வதற்காக ஆணைக்குழுவின் ஒருப்பாட்டோடு வெளித் தேர்வுகளை நடாத்துதல் ;

(எ) பல்கலைக்கழகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தில் மாணவர்களாகவில்லாதிருந்து, பல்கலைக்கழகத்தின் வெளிவாரித் தேர்வுகளில் தேறியுள்ளவர்களுக்கும் தேறியுள்ளவர்கள் மீதும், ஆணைக்குழுவின் ஒருப்பாட்டோடு, பட்டங்களையும், திப்புளோமாக்களையும், வேறு கல்விச் சிறப்புகளையும் வழங்குதலும் சூட்டுதலும் ,

(ஏ) துணைவிதியினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளின்மீது, வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பட்டதாரிகளை அல்லது மாணவர்களை, பல்கலைக்கழகத்திலுள்ள சமமான அல்லது அதேபோன்ற பட்ட வகுப்புக்களில் அல்லது கற்கைநெறி வகுப்புகளிற் சேர்த்துக்கொள்ளுதலும், அவர்களைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளாக அல்லது மாணவர்களாகப் பதிவு செய்தலும் ;

(ஐ) ஒரு பல்கலைக்கழகத்தின் மூதவையினால் விதப்புரை செய்யப்பட்டு, அத்தகைய பல்கலைக்கழகத்தின் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்களுக்குக் கௌரவப் பட்டங்களை அல்லது வேறு கல்விச் சிறப்புகளை வழங்குதல் ;

(ஒ) இந்தப் பல்கலைக்கழகத்தில் அனுமதிகோரும் ஆட்கள் அல்லது இப் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள், வேறு பல்கலைக்கழகங்களில் அல்லது பல்கலைக்கழக அந்தஸ்தைக்கொண்ட வேறு கல்வியிடங்களில் சித்தியடைந்த தேர்வுகளையும், பயின்ற கல்விக் காலங்களையும் அல்லது கற்கைக் காலங்களையும் அங்கீகரித்தலும், அவ்வங்கீகாரத்தை எந்நேரத்திலும் கைமீட்டலும்; மேற்படி தேர்வுகளும் கல்விக் காலங்களும் அல்லது கற்கைக்காலங்களும் துணைவிதிகளால் விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பல்கலைக்கழகத் தேர்வுகளுக்கும்.

அல்லது அவற்றின் பாகத்துக்கும் அத்தகைய கல்விக் காலத்துக்கும் அல்லது கற்கைக்காலத்துக்கும் அல்லது அவற்றின் பாகத்துக்கும் சமமானவையாய் இருத்தல் வேண்டும்.

(ஓ) பல்கலைக்கழகத்தின் நோக்கத்துக்காக, நூலகங்களையும், ஆய்கூடங்களையும், வேறு கட்டிடங்களையும், போதிக்கும் நோக்கத்துக்காகவாயினுஞ்சரி அல்லது வதியும் நோக்கத்துக்காகவாயினுஞ்சரி நிறுவுதலும், வசதிகளை அமைத்தலும், பேணுதலும் ;

(ஔ) பேராசிரியர் பதவிகளையும், இணைப் பேராசிரியர் பதவிகளையும், சிரேட்ட விரிவுரையாளர் பதவிகளையும் அல்லது விரிவுரையாளர் பதவிகளையும், பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பதவிகளையும் ஏற்படுத்தல்;

(க) ஆராய்ச்சிப்படிப்புப் பரிசில்களையும், புலமைப்பரிசில்களையும், புலமைப் பொருளுதவிகளையும், ஏழைக் கல்வியுதவிகளையும், பதக்கங்களையும் வேறு பரிசில்களையும் ஏற்படுத்துதலும் அவற்றை வழங்குதலும்;

(ங) பல்கலைக்கழகத்தின் மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள், வேறு ஊழியர்கள் ஆகியோரின் வதிவிடம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, நல்வாழ்வு என்பவற்றை ஒழுங்குபடுத்தலும், அவற்றிற்கு ஏற்பாடு செய்தலும் ;

(ச) வதிவிட மண்டபங்களைத் தாபித்து முகாமை செய்தலும், மாணவர்களுக்குத் தங்குமிட வசதிகளை அளிக்கும் தங்கு மனைகளுக்கு உரிமம் வழங்குதலும், பல்கலைக்கழக மாணவர்கள் வதிவதற்கு தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வேறு சேவைகளையும் வசதிகளையும் ஏற்பாடு செய்தலும் ;

(ஞ) மாணவர் கடன் பெறும் நோக்கத்துக்காக ஏற்பாடு செய்யும் துணைவிதிகளுக்கு இணங்க வங்கிகளிலிருந்தும் வேறு முகவர் நிலையங்களிலிருந்தும் பல்கலைக்கழக மாணவர்கள் கடன்பெறுவதற்கு உதவுதல் ;

(ட) வியாபாரங்களிலும் கைத்தொழில்களிலுமுள்ள ஊழியர்கள், பாடசாலையைவிட்டுநீங்குநர் ஆகியோர் உட்பட, பொதுமக்களுக்கு அதற்காக ஏற்பாடு செய்யும் ஏதேனும் துணைவிதிக்கு இணங்க விசாலிப்புச் சேவைகளை ஏற்பாடு செய்தல் ;

(ண) கற்கை நெறிகளை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யும் ஏதேனும் துணைவிதிக்கு இணங்க, பல்கலைக்கழகத்துக்கு வெளியேயுள்ள கல்வி நிறுவனங்களில் கற்கை நெறிகளை அல்லது அவற்றின் பாகங்களை நடாத்த ஒழுங்குகள் செய்தல் ;

(த) கட்டணங்களைக் கோரிப் பெற ஏற்பாடு செய்யும் ஏதேனும் ஒழுங்குவிதிக்கு இணங்க, கட்டணங்களைக் கோருதலும் பெறுதலும் ; அத்துடன்

(ந்) பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களை முன்னேற்றுவதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும், காரியங்களையும் அவை மேற்சொல்லப்பட்ட தத்துவங்களுக்கு இடைநேர்விளைவானவையாக விருப்பினுஞ்சரி, அல்லவாயினுஞ்சரி செய்தல்.

30. இருபத்தொன்பது (இ) என்னும் பிரிவினதும், 31 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இலங்கையின் பிரசைகளாகவுள்ள ஆட்களும் இலங்கையில் சட்டமுறையாக உள்ள வேறு ஆட்களும், அவர்கள் ஆணுயிருப்பினுஞ்சரி, பெண்ணுயிருப்பினுஞ் சரி, எந்த இனத்தை, சமயக் கோட்பாட்டை அல்லது வகுப்பைச் சேர்ந்தவர்களாயினுஞ்சரி, பல்கலைக் கழகங்களில் அனுமதிபெறற்குரியவர்களாதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய எவரேனும் ஆள் பல்கலைக்கழகத்தின் ஓர் ஆசிரியராக அல்லது மாணவராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு அல்லது அதில் ஏதேனும் நியமனம் வகிப்பதற்கு அல்லது அதன் பட்டதாரியாவதற்கு அல்லது அதில் ஏதேனும் நலனை அல்லது சிறப்புரிமையை வைத்திருப்பதற்கு, துய்ப்பதற்கு, அல்லது பிரயோகிப்பதற்கு அவரை உரித்துடையவராக்குவதற்கு சமய நம்பிக்கை அல்லது சமய ஒப்புதல் பற்றிய சோதனையெதுவும் மேற்கொள்ளப்படுதலோ அல்லது சுமத்தப்படுதலோவாகாது.

இனம், சமயக் கோட்பாடு, வகுப்பு அல்லது மதம் காரணமாக பாரபட்சம் காட்டுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

31. ஒரு பல்கலைக்கழகத்தில், சமய போதனை பெற விரும்புவோருக்கு, அப்பல்கலைக்கழகத்தின் பேரவையால் அந்நோக்கத்துக்கென அங்கீகாரமளிக்கப்பட்ட ஆட்களைக் கொண்டு துணை விதிமூலம் விதிக்கப்படக்கூடிய ஏதேனும் முறையில் சமய போதனை அளிக்கப்படுதலை, 30 ஆம் பிரிவின் ஏற்பாடுகளிலுள்ள எதுவும், தடைசெய்வதாகக் கருதப்படுதலோ பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

30 ஆம் பிரிவின் ஏற்புடைமை மீதான குறித்த சில மட்டுப்பாடுகள்.

## பாகம் VI

### பல்கலைக்கழகங்களின் வேந்தரும் அலுவலர்களும்

32. ஒவ்வொரு பல்கலைக்கழகத்துக்குமான வேந்தரையும் சனாதிபதி பெயர்குறித்து நியமித்தல் வேண்டும். பல்கலைக்கழக வேந்தரானவர், பல்கலைக்கழகத்தின் தலைவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவர் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்படும் ஐந்தாண்டுக் காலத்துக்குப் பதவிவகித்தலும் வேண்டும் ; அவர் சமுகமாகவிருக்கும்போது, பல்கலைக்கழக மன்றின் ஏதேனும் கூட்டத்திலும், பல்கலைக்கழகத்தின் ஏதேனும் பட்டமளிப்பு விழாவிலும் தலைமைதாங்குதல் வேண்டும்.

பல்கலைக்கழக வேந்தர்.

33. பின்வருவோர் பல்கலைக்கழகத்தின் அலுவலர்களாக இருத்தல் வேண்டும் :—

பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள்.

(i) துணைவேந்தர் ;

(ii) பிரதித் துணைவேந்தர் , எவரேனும் இருப்பின்,

(iii) ஒவ்வொரு வளாகத்தினதும் வளாகத் தலைவர் ; (எவரேனும் இருப்பின்)

(iv) ஒவ்வொரு துறையினதும் துறைத் தலைவர் ;

(v) பதிவாளர் ;

(vi) நூலகப் பொறுப்பாளர் ;

(vii) நிதியாளர் ; அத்துடன்

(viii) எந்தப் பதவியை வகிப்பவர் இந்தப் பிரிவின் நோக்கத்துக்காக அலுவலரொருவராக இருக்கின்றாரோ அந்தப் பதவியெனக் கட்டளைச்சட்டத்தால் வெளிப்படுத்தப்பட்ட பதவி எதையும் வகிப்பவர்.

துணை வேந்த...

**34.** (1) (அ) இப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஒரு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், அப்பல்கலைக் கழக மன்றினால் தெரிவுசெய்யப்பட்டதன்மேல், மூன்றாண்டுக் காலத்துக்கு பல்கலைக்கழக வேந்தரால் நியமிக்கப்படுதல் வேண்டும். அவரது கடைசிப் பதவிக்காலம் முடிவடைந்ததிலிருந்து மூன்றாண்டுக்காலப்பகுதி முடிவடைந்தபின்னர் மீளத் தெரிவுசெய்யப்பட்டாலன்றி, அதே பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக மீள நியமிக்கப்படுவதற்கு அவர் தகுதியுடையவராகார். துணை வேந்தர் தேர்தலுக்கான நடவடிக்கைமுறையானது கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அந்நோக்கத்துக்கெனக் கூட்டப்பட்ட பல்கலைக்கழக மன்றின் விசேடக் கூட்டமொன்றில், அம்மன்றின் மொத்த உறுப்பினர் தொகையில் மூன்றிலிரண்டு பங்குக்குக் குறையாத வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட கண்டனத் தீர்மானத்தின்மேல், ஒரு பல்கலைக்கழகத் துணைவேந்தர், அவரது பதவியிலிருந்து வேந்தரினால் அகற்றப்படுதல் வேண்டும்.

(2) துணை வேந்தர், பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன், பல்கலைக்கழகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும், பிரதான கல்வி அலுவலராகவும் இருத்தலும் வேண்டும். அவர், பல்கலைக்கழக மன்றின் பதவி வழி உறுப்பினராகவும், பேரவை, மூதவை ஆகிய இரண்டினதும் பதவிவழி உறுப்பினராகவும், தவிசாளராகவும் இருத்தல் வேண்டும். பல்கலைக்கழக வேந்தர் சமுகமளிக்காவிடில், மன்றின் கூட்டங்களில் துணைவேந்தர், தலைமைவகித்தல் வேண்டும். துணை வேந்தர் பல்கலைக்கழகத்தின் வேறேதேனும் அதிகாரசபையின் அல்லது வேறு குழுவின் கூட்டம் எதனையும் கூட்டுவதற்கும், அதில் சமுகமளிப்பதற்கும், உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்; ஆனால், அவர் அத்தகைய வேறு அதிகார சபையின் அல்லது வேறு குழுவின் உறுப்பினராகவிருந்தாலொழிய, அத்தகைய கூட்டமெதிலும் வாக்களிக்க உரித்துடையவராகார்.

(3) பேரவையால், அதன் சார்பில் துணை வேந்தருக்குக் காலத்துக்குக் காலம், சட்டமுறையாக இடப்பட்ட அத்தகைய பணிப்புகளுக்கு இணங்க, இச்சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகள் முறையாகக் கடைப்பிடிக்கப்படுதலை உறுதி

செய்தல் அவரது கடமையாதல் வேண்டும்; அத்துடன், அந் நோக்கத்துக்காக அவசியமானவையென அவர் கருதக்கூடிய அத் தகைய எல்லாத் தத்துவங்களையும் அவர் கொண்டிருத்தல் வேண் டும் என்பதுடன், அவர் அவற்றைப் பிரயோகிக்கலாம்.

(4) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பேரவையினதும் மூதவையினதும் முடிவுகளுக்குப் பயனளித்தல், அல்லது பயன ளிக்கப்படுதலை உறுதிசெய்தல், துணைவேந்தரின் கடமையாதல் வேண்டும்.

(5) துணைவேந்தரே, பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டு அலுவல ராக இருத்தல் வேண்டும்.

(6) ஒரு பல்கலைக்கழகவெல்லைக்குள் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட் டைப் பேணுதல் துணைவேந்தரின் பொறுப்பாதல் வேண்டும்.

(7) துணைவேந்தர், அவர் தமது பதவியை முன்னரே வறி தாக்கினாலொழிய, அல்லது இப்பிரிவின் (1) (ஆ) என்னும் உட்பிரி வின் கீழ்ப் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய மூன்றாண்டுக் காலத்துக்கு, அல்லது அவர் அறுபத்தைந்து வயதை நிறைவுசெய் யும்வரையில், இவற்றில் எது முன்னதாக நடைபெறுகின்றதோ அதுவரை, பதவிவகித்தல் வேண்டும்.

(8) துணை வேந்தர், லீவு காரணமாக, சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக, அல்லது வேறு காரணத்துக் காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருப்பின், அத்தகைய இயலாமை நிகழ்ந்து ஏழு நாட் களுக்குள், ஆணைக்குழு, அப்பதவிக்கான கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தக்கதென அது கருதக்கூடிய அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய் யப்படும்வரையில் அப்பதவிக்குரிய வழமைமுறையான கடமைகளைப் பதிவாளர் கொண்டுநடாத்துதல் வேண்டும்.

(9) துணை வேந்தர் பதவியில் வெற்றிடம் எதுவும் ஏற்படின், அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டு ஏழு நாட்களுக்குள், ஆணைக்குழு, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் நிரந்தரமான நியமன மொன்று செய்யப்படும்வரையில், அப்பதவியின் கடமைகளைக் கொண்டுநடாத்துவதற்குத் தக்கதென அது கருதக்கூடிய அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்; அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும் வரையில், அப்பதவிக்குரிய வழமைமுறை யான கடமைகளைப் பதிவாளர் கொண்டுநடாத்துதல் வேண்டும்.

பிரதித்துணை வேந்தர்.

35. ஒரு பல்கலைக்கழகத்தின் பேரவை, அதன் தற்றுணிபின் பேரிலும், ஆணைக்குழுவிடமிருந்து முன்னரே பெற்ற அங்கீகாரத் தோடும், பிரதித் துணைவேந்தர் ஒருவரை நியமிக்கலாம். பிரதித் துணை வேந்தரின் நியமனத்துக்கான நடவடிக்கைமுறையும், அவ ரது தத்துவங்களும், கடமைகளும், பணிகளும், கட்டளைச்சட்டத் தினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

வளாகத்தலைவர்.

**36.** (1) ஒரு வளாகத்தலைவர், அந்த வளாகத்தின் முழு நேர அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வளாகமானது எந்தப் பல்கலைக்கழகத்துக்குச் சேர்ந்ததோ அந்தப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரால் நியமிக்கப்படுதலும் வேண்டும். அவர், தமது பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்படும் மூன்றாண்டுக் காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மேற்சொல்லப்பட்ட காலப் பகுதியை உடனடுத்துவரும் மேலுமொரு மூன்றாண்டுக் காலப்பகுதிக்கு மீள நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவராதலும் வேண்டும்.

(2) வளாகத்தலைவர், லீவு காரணமாக, சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக, அல்லது வேறு காரணமாக, தமது பதவியின் கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருப்பின், அத்தகைய இயலாமை ஏற்பட்டு ஏழு நாட்களுக்குள், துணைவேந்தர், அப்பதவியின் கடமைகளைக் கொண்டுநடாத்துவதற்கு அவர் தகுந்தவரெனக் கருதக்கூடிய அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரையில் பதிவாளர், அப்பதவியின் வழமைமுறையான கடமைகளைக் கொண்டுநடாத்தல் வேண்டும்.

(3) வளாகத்தலைவர், வளாகத்தின் முழுநேர அலுவலராகவும் கல்வித் தலைவராகவும், நிருவாகத் தலைவராகவும் இருத்தல் வேண்டும்.

(4) வளாகத் தலைவர், வளாகச் சபையின் தவிசாளராக இருத்தல் வேண்டும்.

(5) வளாகத் தலைவர், துணைவேந்தரின் பொதுப் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, வளாகத்தில் ஒழுக்காற்றைப் பேணுவதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

பதிவாளர்.

**37.** (1) ஒரு பல்கலைக்கழகத்தின் பதிவாளர் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவர் கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படவேண்டிய உறுப்பாண்மை அமைப்பினைக் கொண்ட தெரிவுக் குழுவொன்றின் விதப்புரையின் பேரில், பேரவையால் நியமிக்கப்படுதலும் வேண்டும். இச்சட்டத்தினால் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தினால் அவருக்கு அளிக்கப்படக்கூடிய அல்லது சுமத்தப்படக்கூடிய அல்லது குறித்தொதுக்கப்படக்கூடிய அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் அவர் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) பல்கலைக்கழகத்தின் பதிவேடுகளினதும் ஆதனத்தினதும் கட்டுக்காவலுக்குப் பதிவாளரே பொறுப்புடையவராதல் வேண்டும்.

(3) பதிவாளரே, பல்கலைக்கழக மன்று, பேரவை, மூதவை ஆகியவற்றின் பதவிவழிச் செயலாளராக இருத்தல் வேண்டும்.

(4) பதிவாளரே, பல்கலைக்கழகத்தின் பிரதிக் கணக்கீட்டு அலுவலராக இருத்தல் வேண்டும்.

(5) பதிவாளர், துணைவேந்தரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, பல்கலைக்கழகத்தின் பொது நிருவாகத்துக்கும், அதன் கல்வித்துறைசாராப் பணியாட்டொகுதியின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

நிதியாளர்.

38. (1) ஒரு பல்கலைக்கழகத்தின் நிதியாளர் கட்டளைச்சட்டத்தால் விதித்துரைக்கப்படவேண்டிய உறுப்பாண்மை அமைப்பினைக் கொண்ட ஒரு தெரிவுக் குழுவின் விதப்புரையின்பேரில் பேரவையால் நியமிக்கப்படுதல் வேண்டும். அவர் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தினால் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தினால் அவருக்கு அளிக்கப்படக்கூடிய அல்லது அவர்மீது சுமத்தப்படக்கூடிய அல்லது குறித்தொதுக்கப்படக்கூடிய அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் அவர் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) நிதியாளர், பதிவாளரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, பல்கலைக்கழக நிதிகளின் நிருவாகத்துக்குப் பொறுப்புடையவராதல் வேண்டும் என்பதுடன், அதன் கணக்குகளைக் கட்டளைச்சட்டத்தால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் பேணுதலும் வேண்டும். பல்கலைக்கழக நிதிகள் அவரது கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்.

நூலகப் பொறுப்பாளர்.

39. (1) ஒரு பல்கலைக்கழகத்தின் நூலகப்பொறுப்பாளர், கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட உறுப்பாண்மை அமைப்பினைக்கொண்ட ஒரு தெரிவுக் குழுவின் விதப்புரையின் பேரில், பேரவையால், நியமிக்கப்படுதல் வேண்டும்; அவர், பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தினால் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தினால் அவருக்கு அளிக்கப்படக்கூடிய அல்லது அவர்மீது சுமத்தப்படக்கூடிய அல்லது குறித்தொதுக்கப்படக்கூடிய அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) நூலகப் பொறுப்பாளர், துணை வேந்தரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, பல்கலைக்கழக நூலகத்தின் அல்லது நூலகங்களின் நிருவாகத்துக்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

## பாகம் VII

### ஒரு பல்கலைக்கழகத்தின் அதிகாரசபைகள்

ஒரு பல்கலைக்கழகத்தின் அதிகாரசபைகள்.

40. ஒரு பல்கலைக்கழகத்தின் அதிகாரசபைகள் பின்வருவனவாதல் வேண்டும்:—

(i) மன்று ;

(ii) பேரவை ;

(iii) மூதவை ;

(iv) வளாகச் சபை அல்லது சபைகள், எவையேனும் இருப்பின் ;

(v) துறை அல்லது துறைகள் ; அத்துடன்

(vi) அத்தகைய அதிகாரசபைகளாக இருக்கவென கட்டளைச் சட்டத்தால் விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வேறு குழுக்கள்.

மன்று.

41. (1) ஒரு பல்கலைக்கழகத்தின் மன்று, (இது இதனகத்துப் பின்னர் "மன்று" எனக் குறிப்பீடு செய்யப்படும்), பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பதவிவழி உறுப்பினர்கள் :—

(i) வேந்தர் ;

(ii) துணைவேந்தர் ;

(iii) பிரதித் துணைவேந்தர் (எவரேனும் இருப்பின்) ;

(iv) பேரவையின் உறுப்பினர்கள் ;

(v) ஒவ்வொரு வளாகத்தினதும் வளாகத் தலைவர் (எவரேனும் இருப்பின்) ; அத்துடன்

(vi) ஒவ்வொரு துறையினதும் துறைத் தலைவர்.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் :—

(i) ஒவ்வொரு துறையிலிருந்தும் ஓர் உறுப்பினர் ; இவர்கள் மூதவையிலும் உறுப்பினர்களாகவுள்ள துறையின் உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும் ;

(ii) பல்கலைக்கழக ஆசிரியப் பணியாட்டொகுதியிலிருந்து, மூதவையில் உறுப்பினர்களாகவில்லாதவர்களான பல்கலைக்கழகத்தின் நிரந்தர ஆசிரியர்கள் எல்லோராலும் தெரிவு செய்யப்பட்ட இரு உறுப்பினர்கள் ;

(iii) இரண்டு உறுப்பினர்கள் ; இவர்களுள் ஒருவர் பல்கலைக்கழக நிருவாகப் பணியாட்டொகுதியினர்களால் தெரிவுசெய்யப்பட்டவராகவும், மற்றவர் பல்கலைக்கழகத்தின் கல்வித்துறை சாராப் பணியாட்டொகுதியினர்களால் தெரிவுசெய்யப்பட்டவராகவும் இருப்பர் ;

(iv) பல்கலைக்கழகத்தின் மாணவர் அவையினால் அதன் உறுப்பினர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட இரு மாணவர்கள் ;

(v) பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களான ஆறு பாராளுமன்ற உறுப்பினர்கள் ; அத்துடன்

(vi) ஆணைக்குழுவால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் உயர்தொழில், கலாசார நிறுவனங்கள் எட்டினுள் ஒவ்வொன்றினதும் அவற்றின் உறுப்பினர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஓர் உறுப்பினர்.

(2) தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் தெரிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்டதான மூன்றுண்டுக்கு மேற்படாதகாலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்; ஆனால் எவ்வாருயினும், அவர் எந்த அந்தஸ்தின் பண்பினுல் அல்லது உறுப்பாண்மையின் பண்பினுல் மன்றின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதிபெற்ருரோ அந்த அந்தஸ்தை அல்லது உறுப்பாண்மையை, அவர் விடாது கொண்டிருக்கும்வரையில் மாத்திரமே பதவிவகித்தல் வேண்டும்.

42. (1) மன்றின் வருடாந்தக் கூட்டம், துணைவேந்தரால் நிருணயிக்கப்பட வேண்டிய தேதியன்று நடாத்தப்படுதல் வேண்டும். மன்றின் கூட்டங்கள்.

(2) துணைவேந்தர், மன்றின் விசேடக் கூட்டமொன்றை, அவர் அவசியமெனக் கருதும்போதெல்லாம் அல்லது அவ்வாறு கூட்டும்படி மன்றின் மொத்த உறுப்பினர் தொகையில் மூன்றிலொரு பங்குக்குக் குறையாத உறுப்பினர்களிடமிருந்து எழுத்திலான வேண்டுதல் அவருக்குக் கிடைத்து இரண்டு வாரங்களுக்குள், கூட்டுதல் வேண்டும்.

(3) மன்றின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண், அதன் மொத்த உறுப்பினர் தொகையில் மூன்றிலொரு பங்கினதாகவிருத்தல் வேண்டும்.

(4) தேர்வுகளோடும் அவை தொடர்பான விடயங்களோடும் தொடர்புபட்ட மன்றின் கூட்ட நடவடிக்கைகளில் 41 (1) (ஆ) (iv) என்னும் பிரிவின்கீழ் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள், பங்குபற்ருதவாறு விலக்கப்படுதல் வேண்டும்; எவ்வாருயினும் அத்தகைய கூட்டம் எதுவும், அத்தகைய விலக்கல் எவ்வாறிருப்பினும் முறையே நடாத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

43. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, மன்று பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :— மன்றின் தத்துவங்களும், கடமைகளும் பணிகளும்.

(அ) நியதிச்சட்டங்களை ஆக்குதலும், அவ்வாறு ஆக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்டத்தைத் திருத்துதலும், அவற்றுக்கு வேறு நியதிச்சட்டங்களைச் சேர்த்தலும், வேறுபடுத்தலும் அல்லது அவற்றை நீக்குதலும்;

(ஆ) துணைவேந்தரைத் தெரிவுசெய்தலும், அது அவசியமெனக் கருதினுல், அவரை அகற்றும்படி வேந்தருக்கு விதப்புரை செய்தலும் ;

(இ) பேரவையால் ஆக்கப்பட்ட துணைவிதிகளை, அத்தகைய துணைவிதிகளின்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி சீர்தூக்கிப்பார்த்தலும், அவசியமாயின் திருத்துதலும் அல்லது இல்லாதொழித்தலும் ;

(ஈ) பல்கலைக்கழகத்தின் ஆண்டு அறிக்கையையும், ஆண்டுக் கணக்குகளையும் சீர்தூக்கிப்பார்த்தலும், அவசியமாயின் திருத்துதலும், அல்லது நிறைவேற்றுதலும் :

எனினும், அத்தகைய திருத்தம் பற்றிப் பேரவையின் அபிப்பிராயத்தை முதலிற் பெற்றிருந்தாலன்றி, அத்தகைய திருத்தம் எதுவும் செய்யப்படுதலாகாது ; அத்துடன்

(உ) இச்சட்டத்தால் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையால், கட்டளைச்சட்டத்தால் அல்லது நியதிச்சட்டத்தால் மன்றுக்கு அதிகாரமளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட வேறேதேனும் செயலைச் செய்தலும் அல்லது வேறேதேனும் கடமையைப் புரிதலும்.

பேரவை.

**44.** (1) ஒரு பல்கலைக்கழகத்தின் பேரவையானது, (இது இதனகத்துப்பின்னர் " பேரவை " எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அப்பல்கலைக்கழகத்தின் நிறைவேற்றுக் குழுவாகவும், ஆளும் அதிகார சபையாகவும் இருத்தல்வேண்டும் என்பதுடன், பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் :—

(i) துணைவேந்தர் ;

(ii) ஒவ்வொரு வளாகத்தினதும் வளாகத் தலைவர், எவரேனும் இருப்பின் ;

(iii) ஒவ்வொரு துறையினதும் துறைத் தலைவர் ;

(iv) மூதவையின் உறுப்பினர்களிலிருந்து மூதவையினால் தெரிவுசெய்யப்பட்ட மூன்று உறுப்பினர்கள் ; அத்துடன்

(v) மேலேயுள்ள (i) ஆம், (ii) ஆம், (iii) ஆம், (iv) ஆம் பந்திகளின் கீழான உறுப்பினர்களின் மொத்தத் தொகையோடு மூன்றைக் கூட்டிவரும் மொத்த எண்ணிக்கைக்குச் சமனாகவுள்ள அத்தகைய எண்ணிகையினரான உறுப்பினர்கள். அத்தகைய எல்லா உறுப்பினர்களும், கல்வி, உயர்தொழில், வணிகம், கைத்தொழில், விஞ்ஞானம், அல்லது நிருவாகம் ஆகிய துறைகளில் சிறப்புமிகு சேவை ஆற்றியுள்ள ஆட்களிலிருந்து, ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) துணைவேந்தரே பேரவையின் தவிசாளராகவிருத்தல் வேண்டும் ; பேரவையின் எல்லாக் கூட்டங்களிலும் அவரே தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர், கூட்டமொன்றில் தலைமை தாங்க இயலாதிருந்தால், உறுப்பினர்கள், அங்கே சமுகமாகவிருக்கும் உறுப்பினர் எவரையும், அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குவதற்குத் தெரிவுசெய்யலாம்.

(3) நான்காம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டுக்காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும் :

எனினும், எவ்வாறுயினும், நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் அவரது பதவிக்காலம் முடிவடைவதன் முன்னர், அவரது பதவியை வறிதாக்கினால், அவரை அடுத்துறுபவர், அவரும் முன்னரே அவரது பதவியை வறிதாக்கினாலொழிய, அவருக்கு முன் இருந்தவரின் முடிவுறுதெஞ்சியுள்ள பதவிக்காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(4) பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், ஆணைக் குழுத் தவிசாளருக்கு முகவரியிட்டனுப்பப்படும் தமது கைப்பட்ட கடிதம் மூலம், தமது பதவியைத் துறக்கலாம்.

(5) எக்காரணத்துக்காகவாயினுஞ்சரி, பேரவையின் அடுத்து வரும் மூன்று கூட்டங்களுக்குச் சமுகமளிக்காதவரான பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், பேரவையின் உறுப்பினரென்ற அவரது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும் ; அதனால் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆணைக்குழு தக்கவோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

(6) பேரவையின் உறுப்பினர் ஒருவர், எந்த ஊதியத்துக்கும் உரித்துடையராதலாகாது ; ஆனால், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைக் கலந்தாலோசித்து, அமைச்சர் தீர்மானிக்கும் அத்தகைய படிகள் (1) (v) என்னும் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினருக்குக் கொடுக்கப்படலாம்.

(7) பேரவையின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் அதன் மொத்த உறுப்பினர் தொகையில் மூன்றிலொரு பங்கினதாக இருத்தல் வேண்டும்.

(8) பேரவை ஒவ்வோர் ஆண்டிலும் அவசியமாகும் போதெல்லாம், கூடுதல் வேண்டும் என்பதுடன், எவ்வாறுயினும் பத்து முறைகளுக்குக் குறையாதவாறு கூடுதலும் வேண்டும்.

(9) பேரவையின் தவிசாளர், அவர் அவசியமெனக் கருதும் போதெல்லாம், அல்லது பேரவையின் மொத்த உறுப்பினர் தொகையின் மூன்றிலொரு பங்குக்குக் குறையாத உறுப்பினர்களிடமிருந்து எழுத்திலான வேண்டுதல் கிடைக்கப் பெறுவதன் மேல் ஒரு கிழமைக்குள் பேரவையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

**பேரவையின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்.**

**45.** (1) இச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு அமைவாக, பேரவை, பல்கலைக்கழகத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும் என்பதோடு, கடமைகளையும் பணிகளையும், புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினால் பேரவைக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றி, பேரவை பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(i) பல்கலைக்கழகத்தின் ஆதனத்தையும், நிதிகளையும் வைத்திருத்தலும், கட்டுப்படுத்தலும், நிருவகித்தலும் ;

(ii) பல்கலைக்கழகத்திற்கென மரபுச் சின்னமொன்றைத் தெரிந்தெடுத்தலும், பல்கலைக்கழகத்தின் பொது இலச்சினையின் வடிவத்தைத் தீர்மானித்தலும், அதன் கட்டுக்காவலுக்கு ஏற்பாடு செய்தலும், அதனைப் பயன்படுத்துமாறு பணித்தலும் ;

(iii) இச்சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கிணங்க, பல்கலைக்கழகத்தோடு தொடர்பான எல்லாக் கருமங்களையும் ஒழுங்குபடுத்தலும், தீர்மானித்தலும் ;

(iv) குறித்த நோக்கங்களுக்காகப் பல்கலைக்கழகத்தின் கையடைவில் வைக்கப்பட்ட நிதிகள் எவற்றையும் நிருவகித்தல் ;

(v) பல்கலைக்கழகத்துக்கு மரணசாதனக் கொடைகள் மூலமும் நன்கொடைகள் மூலமும் வழங்கல்கள் மூலமும் கிடைக்கும் ஆதனங்களை, ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பெற்றுக்கொள்ளுதலும் ஏற்றுக்கொள்ளுதலும் ;

(vi) பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையையும் ஆண்டுக் கணக்குகளையும் பரிசோதனை செய்தலும், அத்தகைய அறிக்கையையும் அத்தகைய கணக்குகளையும் மன்றுக்கும் ஆணைக் குழுவுக்கும் சமர்ப்பித்தலும் ;

(vii) பல்கலைக்கழகத்தின் நிதி மதிப்பீடுகளைத் தயாரித்தலும், அத்தகைய மதிப்பீடுகளை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தலும் ;

(viii) இந்தச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்துக்காக நியதிச்சட்டங்களை, தக்கதெனத் தோன்றும் போது, வரைதலும் அவற்றை மன்றுக்குச் சமர்ப்பித்தலும் ;

(ix) எக்கருமம் தொடர்பில் துணைவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டதோ அக்கருமம் எதற்கும் துணைவிதிகளை ஆக்குதல் ;

(x) பல்கலைக்கழகத்தின் வேறேதேனும் அதிகாரசபையினால் ஆக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படாத அத்தகைய ஒழுங்குவிதிகளை ஆக்குதல் ;

(xi) பல்கலைக்கழகத்தின் வேலையைக் கொண்டுநடாத்துவதற்குத் தேவையான கட்டிடங்கள், வளவுகள், தளபாடங்கள், சாதனங்கள், வேறு பொருள்கள் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்தல் ;

(xii) பல்கலைக்கழகத்துக்கு ஆட்களை நியமித்தலும், பல்கலைக் கழகத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களை நிறுத்திவைத்தலும், வேலை நீக்கஞ் செய்தலும் அல்லது வேறுவகையாகத் தண்டித்தலும் :

ஆயின், அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் விடயத்தில் தவிர, இந்தத் தத்துவங்கள் துணைவேந்தருக்குக் கையளிக்கப்படலாம் ;

(xiii) மூதவையின் விதப்புரைகளைப் பரிசீலனை செய்த பின்னர், பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதியிலிருந்தோ அல்லது வேறெங்கிலுமிருந்தோ தேர்வாளர்களை நியமித்தலும், அத்தகைய தேர்வாளர்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய கட்டணங்கள் எவற்றையும் தீர்மானித்தலும் ;

(xiv) பல்கலைக்கழக மாணவர்களின் பொது நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, மாணவர்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதான நலன்புரிச்சபை ஒன்றை நியமித்தல். அத்தகைய சபையின் உறுப்பாண்மை அமைப்பும், தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும் ;

(xv) பல்கலைக்கழகத்தின் சார்பில் எவையேனும் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், அல்லது இல்லாதொழித்தலும், பயன்படுத்தப்படாத வதேனும் வருமானம் உட்பட, பல்கலைக்கழகத்துக்குச் சேர்ந்த எவையேனும் பணங்களை, நம்பிக்கைப் பொறுப்புகள் கட்டளைச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின்கீழ் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நம்பிக்கைப்பொறுப்புப் பணங்களை எப்பிணைப்பொறுப்புகளில் முதலீடு செய்தல் சட்டமுறையானதோ அப்பிணைப்பொறுப்பு எதிலும் முதலீடு செய்தலும் ; அல்லது ஆணைக்குழுவின் அங்கீகாரத்தோடு, அத்தகைய எவையேனும் பணங்களை, இலங்கையிலுள்ள அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில் முதலீடு செய்தலும் அல்லது முதலீடுகளை வேறுபடுத்தலும், அல்லது உடனடிச் செலவுக்குத் தேவைப்படாததான அத்தகைய பணங்களின் ஏதேனும் பகுதியை, ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் நிலையான வைப்பில் இடுதலும் ;

(xvi) மூதவையைக் கலந்தாலோசித்த பின்னர், பல்கலைக்கழக வேந்தர், அலுவலர்கள், பட்டதாரிகள், மாணவர்கள் ஆகியோரின் கல்வி உடையை அல்லது விருதுச் சின்னத்தை அல்லது அவை இரண்டையும் பற்றித் தீர்மானித்தல் ;

(xvii) (அ) மூதவையோடு கலந்தாலோசித்த பின்னர், பேராசிரியர் பதவிகள், இணைப்பேராசிரியர் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள், வேறேதேனும் கல்வித் துறைசார் பதவி ஆகியவற்றை நிறுவுதல், இல்லாதொழித்தல் அல்லது நிறுத்திவைத்தல் பற்றியும்;

(ஆ) கல்வித்துறைசாராப் பதவியெதனையும் நிறுவுதல், இல்லாதொழித்தல், அல்லது நிறுத்திவைத்தல் பற்றியும் ; அத்துடன்

(இ) பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள், அலுவலர்கள், வேறு ஊழியர்கள் ஆகியோரது தகைமைகளைப் பற்றியும்,

ஆணைக்குழுவுக்கு மதியுரையளித்தல்

(xviii) இச்சட்டத்தினால் அல்லது தோதான சாதனத்தினால், பிரயோகிக்கப்படுவதற்கு வேறுவகையாக ஏற்பாடு செய்யப்படாதவையான பல்கலைக்கழகத்தின் வேறெல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தல் :

எனினும், ஏதேனும் கல்வித்துறைக் கருமம் பற்றி மூதவை, அதன் அபிப்பிராயத்தைப் பதியவும், பேரவைக்கு அறுப்பிவைக்கவும் அதற்கு முதலிற் சந்தருப்பம் அளிக்கப்பட்டிருந்தாலொழிய, அக்கல்வித்துறைக் கருமம் தொடர்பில் தீர்மானமெதுவும் பேரவையால் நிறைவேற்றப்படுதலாகாது.

இப்பிரிவில், "கல்வித்துறைக் கருமம்" என்பது மூதவையின் கட்டுப்பாட்டுக்கும் பொதுவான பணிப்புக்கும் அமைவான ஏதேனும் கருமம் எனப் பொருள்படும்.

மூதவை.

46. (1) ஒரு பல்கலைக்கழகத்துக்கு ஒரு மூதவை இருத்தல் வேண்டும் ; அது, அப்பல்கலைக்கழகத்தின் கல்வி அதிகாரசபையாக இருத்தல் வேண்டும்.

(2) ஒரு பல்கலைக்கழகத்தின் மூதவை, பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) துணைவேந்தர் ;

(ஆ) பிரதித் துணைவேந்தர் (எவரேனும் இருப்பின்) ;

(இ) ஒவ்வொரு வளாகத்தினதும் வளாகத் தலைவர் (எவரேனும் இருப்பின்) ;

(ஈ) ஒவ்வொரு துறையினதும் துறைத் தலைவர் ;

(உ) ஒவ்வொரு கற்கைப் பகுதியினதும் தலைவர் ;

(ஊ) நூலகப்பொறுப்பாளர் ; அத்துடன்

(எ) மேலே (இ),(ஈ),(உ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்டவர்களல்லாதவர்களும், ஒவ்வொரு துறையின் நிரந்தர ஆசிரியர்களால் அவ்வாசிரியர்களுளிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுமான இரண்டு ஆசிரியர்கள்.

(3) தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும், அவர் தெரிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட இரண்டு ஆண்டுக் காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(4) மூதவையின் ஒரு கூட்டத்துக்கான கூட்டநடப்பெண், அதன் மொத்த உறுப்பினர் தொகையில் நானிலொரு பங்கினதாக விருத்தல் வேண்டும்.

(5) பல்கலைக்கழகத்தில் கற்பித்தல், கல்வி, ஆராய்ச்சி, தேர்வுகள் ஆகியவற்றின் கட்டுப்பாட்டையும் பொதுப்பணிப்பையும் மூதவை கொண்டிருத்தல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும், (3) ஆம் உட்பிரிவினால் மூதவைக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றியும், மூதவை பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(i) சம்பந்தப்பட்ட துறையின் அல்லது துறைகளின் அறிக்கைகளை ஆய்ந்தபின்னர், கற்கை நெறிகள், தேர்வுகள் ஆகியவை தொடர்பிலான ஒழுங்குவிதிகளை வரைதலும், அத்தகைய வரைவுகளைப் பேரவைக்கு, அதன் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பித்தலும் ;

(ii) சம்பந்தப்பட்ட துறையின் அல்லது துறைகளின் அறிக்கைகளை ஆய்ந்தபின்னர், தேர்வாளர்களாக நியமிக்கப்படுவதற்கு ஏற்ற ஆட்களின் பெயர்களைப், பேரவைக்கு விதந்துரைத்தல் ;

(iii) பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பதவிகளையும், இணைப் பேராசிரியர் பதவிகளையும், சிரேட்ட விரிவுரையாளர் பதவிகளையும், விரிவுரையாளர் பதவிகளையும், வேறு கல்வித் துறைசார் பதவிகளையும் உண்டாக்குதல், இல்லாதொழித்தல், நிறுத்திவைத்தல் ஆகியன பற்றிப் பேரவைக்கு விதப்புரை செய்தல் ;

(iv) சம்பந்தப்பட்ட துறையின் அல்லது துறைகளின் அறிக்கைகளை ஆய்ந்தபின்னர், பேரவைக்கு—

(அ) இப்போதுள்ள துறைகளையும், கற்கைப் பகுதிகளையும் மறுசீரமைத்தலுக்கும், புதிய துறைகளையும், கற்கைப் பகுதிகளையும் அமைத்தலுக்குமான திட்டங்கள்பற்றியும் ; அத்துடன்

(ஆ) கற்கைப் பாடங்களை, முறையே அவற்றுக்கான துறைகளுக்குக் குறித்தொதுக்குதல்பற்றியும்,

விதப்புரைசெய்தல் ;

(v) ஆராய்ச்சிப்படிப்புப் பரிசில்கள், புலமைப்பரிசில்கள், புலமைப்பொருளுதவிகள், ஏழைக்கல்வியுதவிகள், பதக்கங்கள், வேறு பரிசுகள் ஆகியவற்றுக்கான போட்டியை நடாத்தும் முறைபற்றியும், அதற்கான நிபந்தனைகள் பற்றியும் பேரவைக்கு விதப்புரை செய்தல் ;

(vi) பேரவையால் அங்கீகரிக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகள் மீது, ஆராய்ச்சிப்படிப்புப் பரிசில்களையும், புலமைப் பரிசில்களையும், புலமைப்பொருளுதவிகளையும், ஏழைக் கல்வியுதவிகளையும், பதக்கங்களையும், வேறு பரிசுகளையும் வழங்குதல் ;

(vii) தகுந்ததென மூதவை கருதக்கூடிய அத்தகைய எண்ணிக்கையினவான மூதவைக்கான நிலையியற் குழுக்களை, அல்லது நிமித்தக் குழுக்களை அல்லது சபைகளை

நியமித்தலும் ; அத்துடன், குறிப்பாக, ஆனால் இந்த உட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி—

(அ) நூலகக் குழு ;

(ஆ) அனுமதிப்புக் குழு ;

(இ) ஆராய்ச்சிக் குழு ;

(ஈ) பாடவிதானமும் மதிப்பீடுகளும் பற்றிய குழு ; அத்துடன்

(உ) தகுதிகாண்காலக் கற்கை லீவுக் குழு

ஆகிய குழுக்களை நியமித்தலும் அவற்றின் அலுவல் நியதிகளைக் குறித்துரைத்தலும் ; அவற்றின் அறிக்கைகளை ஆய்தலும் ; அத்தகைய அறிக்கைகளை, திரிபுகளுடனோ அல்லது திரிபுகளின்றியோ ஒன்றில் அங்கீகரித்தலும், அல்லது அத்தகைய அறிக்கைகளை நிராகரித்தலும் ; அத்துடன்

(viii) கற்கை நெறிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளைப் பற்றிப் பேரவைக்கு விதப்புரை செய்தல்.

வளாகச் சபை.

**47.** (1) இதனகத்துப்பின்னர் " வளாகச் சபை " எனக் குறிப்பீடுசெய்யப்படும் ஒரு சபை, ஒரு வளாகத்துக்கு இருத்தல் வேண்டும் ; அதன் உறுப்பாண்மை அமைப்பு, கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(2) வளாகச் சபை—

(i) வளாகத்தின் உள்ளக நிருவாகத்துக்கும் ;

(ii) வளாகத்தைச் சேர்ந்த ஆட்களின் பொதுவான நல்வாழ்வுக்காகவும், அவர்களுக்கு வசதிகளை ஏற்பாடுசெய்வதற்காகவும் ஒழுங்குகளைச் செய்வதற்கும் ; அத்துடன்

(iii) நியதிச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறு வேறெவையேனும் கடமைகளைப் புரிவதற்கும் ;

பொறுப்புடையதாதல் வேண்டும்.

(3) வளாகச் சபை, பேரவையின் அங்கீகாரத்தோடு, வளாகத்தின் உள்ளக நிருவாகம் தொடர்பிலான அல்லது அதன் இடைநேர்விளைவான அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்.

பல்கலைக்கழகத்தின் துறைகள்.

**48.** (1) ஒரு பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு துறையும் பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) தத்தமது நியமனங்களில் உறுதிசெய்யப்பட்டுள்ளவர்களான துறையில் அடங்கியுள்ள கற்கைப் பகுதியைச் சேர்ந்த எல்லாப் பேராசிரியர்களும், இணைப் பேராசிரியர்களும், சிரேட்ட விரிவுரையாளர்களும், விரிவுரையாளர்களும் ;

(ஆ) நூலகப்பொறுப்பாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர் ;

(இ) துறையின் நிரந்தர உதவி விரிவுரையாளர்களுளிருந்து, அவர்களால் தெரிவுசெய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் ;

(ஈ) (அ), (இ) எனனும் பந்திகளில் குறிப்பிடு செய்யப்பட்டோர்கள் நீங்கலாக, துறையில் கற்பிக்கும் நிரந்தரப் பதவியினர்களால் அவர்களுளிருந்து தெரிவுசெய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் ;

(உ) துறையின் மாணவர்களால், அவர்களுளிருந்து தெரிவு செய்யப்பட்ட இரண்டு மாணவர்கள் ; அத்துடன்

(ஊ) துறைக்கு இயைபான கற்கைத்துறைகளில் சிறப்புற்றுள்ள ஆட்களுளிருந்து துறையினால் தெரிவுசெய்யப்பட்ட மூன்று ஆட்கள். இவர்கள் பலகலைக்கழக உறுப்பினர்களாக இருத்தலாகாது.

(2) ஒராம் உட்பிரிவின் (உ) எனனும் பந்தியின்கீழ் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர், அவர் தெரிவுசெய்யப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட ஓர் ஆண்டுக்காலத்துக்கும், வேறு எவரேனும் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் மூன்று ஆண்டுக் காலத்துக்கும், ஓர் உறுப்பினராகப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், அவர் மீளத் தெரிவு செய்யப்படுவதற்கும் தகுதியுடையவராதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஒரு துறை பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(i) அதற்கு மூதவையினால் ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயம் பற்றி ஆய்ந்து அதன்மீது அறிக்கை சமர்ப்பித்தல் ;

(ii) மூதவையின் கட்டுப்பாட்டுக்கு அமைவாக, துறையிலுள்ள கற்கைப் பகுதியில் கற்பித்தல், தேர்வுகள், ஆராய்ச்சி ஆகியவற்றோடு தொடர்புடைய கருமங்களை ஒழுங்குபடுத்தல் ;

(iii) துறையிலுள்ள கற்கை நெறிகளோடும் தேர்வுகளோடும் தொடர்புடைய எல்லாக் கருமங்கள் பற்றியும் விதப்புரைகளும் அறிக்கைகளும் சமர்ப்பித்தல் ;

(iv) ஏதேனும் விசேட விடயம் பற்றி அல்லது எவையேனும் விசேட விடயங்கள் பற்றி ஆய்ந்து, அறிக்கை சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காகக் குழுக்களை நியமித்தல் ; அவற்றில் துறையின் உறுப்பினர்களல்லாத ஆட்களும் உள்ளடங்கலாம் ; அத்துடன்

(v) தேர்வாளர்களாக நியமிக்கப்படுவதற்கு ஏற்ற ஆட்களை மூதவைக்கு விதப்புரைசெய்தல்.

(4) இரண்டாம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின்கீழ்த் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தேர்வுகளோடும், சம்பந்தப்பட்ட கருமங்களோடும் தொடர்புபட்டவையான துறையின் ஏதேனும் கூட்ட நடவடிக்கைகளிலிருந்து விலக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கூட்டம் எதுவும், அத்தகைய விலக்கல் எப்படியிருப்பினும், முறையாக நடாத்தப்பட்டுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.

துறைத் தலைவர்.

49. (1) ஒவ்வொரு துறைக்கும் ஒரு துறைத் தலைவர் இருத்தல் வேண்டும்; அவர், பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலராகவும், அத்துறையின் கல்வித்துறைத் தலைவராகவும், நிருவாகத் தலைவராகவும் இருத்தல் வேண்டும். துறைத் தலைவர், துறையினால், அத்தகைய துறையில் அடங்கியுள்ள கற்கைப் பகுதித் தலைவர்களுள்ளிருந்து தெரிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு தெரிவுசெய்யப்பட்டபோது கற்கைப் பகுதியின் தலைவராக இல்லாதொழிதலும் வேண்டும்.

(2) ஏதேனும் தோதான சாதனத்துக்கு அமைய, தலைவர், அவர் தெரிவுசெய்யப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டுக் காலப்பகுதிக்குப் பதவி வகித்தல்வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய மீளத் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(3) லீவுபெற்றுக் கடமைக்கு வராதிருத்தல் காரணமாக, சுகவீனம் காரணமாக அல்லது வேறு காரணத்துக்காக, ஒரு துறைத் தலைவர், மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு அவரது பதவியின் கடமைகளைப் புரியத் தற்காலிகமாக இயலாதிருக்குமிடத்து, அத்தகைய காலத்தின்போது, துறைத்தலைவராகப் பதிற் கடமையாற்றுவதற்காக, அத்துறையிலுள்ள வேறொரு பகுதித் தலைவரைத் துணைவேந்தர் நியமித்தல் வேண்டும். ஆயினும், துறைத்தலைவர் ஒருவர் ஓய்வுபெறுமிடத்து அல்லது பதவி துறக்குமிடத்து, அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக, மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு அவரது பதவியின் கடமைகளைப் புரிவதற்கு இயலாதிருக்குமிடத்து, அத்துறைத் தலைவரின்பதவி, வறிதாகியுள்ளதெனக் கருதப்படுதல்வேண்டும் என்பதுடன், (1) ஆம் உட்பிரிவுக்கு இணங்க, புதிய துறைத் தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்படுதலும் வேண்டும். அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட ஆள், அவருக்கு முன்னிருந்தவரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

துறைகள் தொடர்பில் பல்கலைக் கழகம் விதப்புரைகள் செய்தல் வேண்டும்.

50. ஒரு பல்கலைக்கழகம், கற்பித்தல், ஆராய்ச்சி, விரிவாக்கல் ஆகியன தொடர்பான அதன் நிகழ்ச்சித் திட்டங்களை வளர்ப்பதற்கு அவசியமானவையென அது கருதக்கூடிய, அத்தகைய துறைகளையும் கற்கைப்பகுதிகளையும் தாபிக்கும்படி ஆணைக் குழுவுக்குக் காலத்துக்குக் காலம் விதப்புரைகள் செய்யலாம்.

**51.** (1) ஒரு கற்கைப் பகுதியின் தலைவர், துணைவேந்தரின் விதப்புரையின்பேரில் பேரவையால் நியமிக்கப்பட்ட ஒரு பேராசிரியராக, இணைப் பேராசிரியராக, சிரேட்ட விரிவுரையாளராக அல்லது விரிவுரையாளராக இருத்தல் வேண்டும். — *கற்கைப் பகுதி ஒன்றின் தலைவர்.*

(2) ஒரு பகுதியின் தலைவர், ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(3) லீவு பெற்றுக் கடமைக்கு வராதிருத்தல் காரணமாக, சுகவீனம் காரணமாக அல்லது வேறு காரணத்துக்காக, ஒரு பகுதியின் தலைவர், மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு அவரது பதவியின் கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருக்குமிடத்து, அத்தகைய காலத்துக்கு பகுதித் தலைவர் பதவியில் பதிற்கடமையாற்றுவதற்காக, அப்பகுதியைச் சேர்ந்த வேறொரு பேராசிரியரை, இணைப் பேராசிரியரை, சிரேட்ட விரிவுரையாளரை, அல்லது விரிவுரையாளரைத் துணைவேந்தர் நியமித்தல் வேண்டும். எவ்வாறாயினும், பகுதித் தலைவர் ஒருவர் ஓய்வுபெறும் அல்லது பதவிதுறக்குமிடத்து, அல்லது வேறு காரணத்துக்காக மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு அவரது பதவியின் கடமைகளைப் புரிவதற்கு இயலாதிருக்குமிடத்து, பகுதித் தலைவர் பதவியானது வறிதாகியுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், (1) ஆம் உட்பிரிவுக்கு இணங்க, புதிய பகுதித் தலைவர் ஒருவர் நியமிக்கப்படுதலும் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், அவருக்கு முன்னிருந்தவரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

**52.** ஒரு பல்கலைக்கழகத்தின் அதிகாரசபைகளென ஆணைக்குழுவால் வெளிப்படுத்தப்பட்டவாறான அத்தகைய வேறு குழுக்களின் அமைப்பும், தத்துவங்களும், கடமைகளும், பணிகளும், அத்துடன் பதவிவழி உறுப்பினர்களைத் தவிர்ந்த ஏனைய உறுப்பினருக்கான உறுப்பாண்மை நியதிகளும், கட்டளைச்சட்டத்தால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும். — *ஆணைக்குழுவால் அதிகார சபைகள் என வெளிப்படுத்தப்பட்ட குழுக்களின் அமைப்பும், தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.*

## பாகம் VIII

### ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா

**53.** (1) ஒரு பல்கலைக்கழகம், பட்டங்கள் வழங்கும் நோக்கத்துக்காக வேந்தரால் அங்கீகரிக்கப்படக்கூடிய அத்தகைய தேதியில் அல்லது தேதிகளில் பட்டமளிப்பு விழாவொன்றை ஆண்டுக்கொருமுறை நடாத்தல் வேண்டும் : — *ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவை நடாத்துதல்.*

எனினும், வேந்தர் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய வேறு காலத்தில் ஒரு பல்கலைக்கழகம் சிறப்புப் பட்டமளிப்பு விழா வொன்றை நடாத்தலாம் :

எனினும், மேலும், பட்டமளிப்புவிழா நடாத்தப்படாமலே முதற் பட்டங்கள் வழங்கப்படலாம்.

(2) பட்டமளிப்பு விழாவொன்றின் நடவடிக்கைமுறை துணை விதியினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(3) சனாதிபதி சமூகமாயிருப்பின் பட்டமளிப்பு விழாவுக்கு அவரே தலைமை வகித்தல் வேண்டும். அவர் சமூகமளிக் காதபோது, வேந்தர் அத்தகைய பட்டமளிப்பு விழாவில் தலைமை வகித்தல் வேண்டும் ; சனாதிபதி, வேந்தர் ஆகிய இருவரும் சமூகமளிக்காதபோது, துணைவேந்தர் அவ்வாறு தலைமைவகித் தல் வேண்டும்.

## பாகம் IX

### பல்கலைக்கழகக் கல்லூரியின் அலுவலர்களும், அதிகாரிகளும், அவர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்

பல்கலைக்கழகக் கல்லூரிக் கட்டளையும் பல்கலைக் கழகக் கல்லூரி யின் பொதுத் தத்துவங்களும்

**54.** (1) இருபத்துநான்காம் பிரிவின்கீழ் ஒரு பல்கலைக்கழகக் கல்லூரிக் கட்டளை வலுவுக்கு வந்ததும், அக்கட்டளையினால் குறித் தொதுக்கப்பட்ட பெயரும் மகுடமும் கொண்டு நிறுவப்பட்ட பல் கலைக்கழகக் கல்லூரியும், அப்போதைக்கு முகாமைச் சபையினது பணிப்பாளரும் உறுப்பினர்களும், கல்விசார் கூட்டவையும், அத்த கைய பெயர்கொண்டும் அத்தகைய பெயரினும், இச்சட்டத்தின் 28 (1) ஆம் பிரிவின்கீழ் ஒரு பல்கலைக்கழகம் செய்வதற்குத் தத்துவமளிக்கப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் காரி யங்களையும் செய்வதற்கு முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளினால் ஒரு பல்கலைக் கழகக் கல்லூரிக்கு வழங்கப்பட்ட தத்துவங்கள், இக்கட்டளைச் சட்டத்தினால் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டாலொழிய, முகா மைச் சபையினாற் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

ஒரு பல்கலைக் கழகக் கல்லூரி யின் தத்துவங் கள்.

**55.** இயைபான பல்கலைக்கழகக் கல்லூரிக் கட்டளைக்கும், ஆணைக்குழுவின் தத்துவங்களுக்கும், கடமைகளுக்கும், பணிகளுக் கும் அமைவாக, ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி, பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) மாணவர்களை அனுமதித்தல் ;

(ஆ) ஆணைக்குழுவின் ஒருப்பாட்டோடு, பல்கலைக்கழகத்தினால் அல்லது அத்தகைய கல்லூரி இணைக்கப்பட்டுள்ள பல் கலைக்கழகங்களில் ஏதேனும் ஒன்றினால் அங்கீகரிக்கப் படக்கூடியவாறான அத்தகைய கல்விப் பிரிவில் அல்லது பிரிவுகளில் கற்பித்தலுக்கு ஏற்பாடு செய்தல் ;

(இ) ஆணைக்குழுவின் ஒருப்பாட்டோடு அத்தகைய பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய கல்விப் பிரிவில் அல்லது பிரிவுகளில் தேர்ச்சியடைந்துள்ள ஆட்களைக் கணித்தறிந்து கொள்ளும் நோக்கத்திற்காக தோதான ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தோடும் தேர்வுகளை நடாத்துதலும், அத்துடன், அத்தகைய தேர்வுகளில் தேறியுள்ளவர்களாகவும், அத்தகைய பல்கலைக்கழகம் துணைவிதியினால் விதிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு நிபந்தனைகளைத் திருப்திசெய்துள்ளவர்களாகவுமிருப்பதோடு, அத்தகைய பல்கலைக்கழகத்தின் பட்டங்களும், திப்புளோமாக்களும், வேறு கல்விச் சிறப்புக்களும் வழங்கப்படுவதற்குத் தகுதியுடையவர்களாகவும் உள்ள அத்தகைய ஆட்களை அத்தகைய பல்கலைக்கழகத்துக்கு விதப்புரை செய்தலும் ;

(ஈ) பல்கலைகழகக் கல்லூரியின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களை அல்லது கணிசமானளவு ஒத்த குறிக்கோள்களைக் கொண்டவையான, இலங்கையிலுள்ள அல்லது வெளிநாடுகளிலுள்ள வேறு பல்கலைக்கழகங்களோடு அல்லது நிறுவனங்களோடு ஆசிரியர்களையும், மாணவர்களையும், கல்விமான்களையும் பரிமாறுதல் மூலமாகவோ அல்லது வேறு வகையாகவோ ஒத்துழைத்தல் ;

(உ) பல்கலைக்கழகக் கல்லூரியின் நோக்கத்துக்காக, நூலகங்களையும், ஆய்வுகூடங்களையும், வேறு கட்டிடங்களையும், (அவை கல்வி கற்பிக்கும் நோக்கத்துக்கானவையாயினுஞ்சரி உறையும் நோக்கத்துக்கானவையாயினும்சரி) நிறுவுதலும், வசதிகளை அமைத்தலும் பேணிவருதலும்;

(ஊ) பேராசிரியர் பதவிகளையும், இணைப் பேராசிரியர் பதவிகளையும், சிரேட்ட விரிவுரையாளர் பதவிகளையும் அல்லது விரிவுரையாளர் பதவிகளையும், பல்கலைக்கழகக் கல்லூரியின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பதவிகளையும் நிறுவுதல் ;

(எ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்களையும், புலமைப் பரிசில்களையும், புலமைப் பொருளுதவிகளையும், ஏழைக் கல்வியுதவிகளையும், பதக்கங்களையும், வேறு பரிசில்களையும் ஏற்படுத்தி வழங்குதல் ;

(ஏ) உறைவிட மண்டபங்களை முகாமைசெய்வதற்கும், தங்குமனைகட்கு உரிமம் வழங்குவதற்கும், பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர்கள் உறைவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு சேவைகளையும் வசதிகளையும் ஏற்பாடுசெய்தல் ;

(ஐ) பல்கலைக்கழகக் கல்லூரியின் அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் ஆகியோரின் உறைவிடத்தையும், ஒழுக்காற்றையும், நல்வாழ்வையும் ஒழுங்குபடுத்துதலும்; ஏற்பாடுசெய்தலும் ;

(ஒ) வங்கிகளிலிருந்தும் வேறு மூலவர் நிலையங்களிலிருந்தும் கடன்பெற பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர்களுக்கு உதவுதலும், அந்நோக்கத்துக்காக, தோதான சட்டங்களை ஆக்குதலும் ;

(ஓ) ஒழுங்குவிதியினால் காலத்துக்குககாலம் விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய கட்டணங்களைக் கோருதலும் பெறுதலும் ; அத்துடன்

(ஔ) பல்கலைக்கழகக் கல்லூரியின் குறிக்கோள்களை அடைவதற்குத் தேவைப்படக்கூடிய அத்தகைய வேறு செயல்களையும், காரியங்களையும், (அவை, மேற்சொல்லப்பட்ட தத்துவங்களுக்கு இடைநேர்விளைவானவையாகவிருப்பினுஞ்சரி, அவ்வாறில்லாதிருப்பினுஞ்சரி) செய்தல் :

ஆயின், எவ்வாறாயினும், கற்பித்தலுக்கான ஏற்பாட்டைப் பாதிக்கும் அல்லது தேர்வுகள் நடாத்துதலைப் பாதிக்கும் அத்தகைய ஏதேனும் செயல் அல்லது காரியம் எதுவும், தோதான பல்கலைக்கழகத்திடம் முன்னரே பெற்ற அங்கீகாரத்தோடல்லாது செய்யப்படுதலாகாது.

**ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் அலுவலர்கள்.**

**56.** பின்வருவோர், ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் அலுவலர்களாக இருத்தல் வேண்டும் :—

(1) பணிப்பாளர்,

(2) ஒவ்வொரு துறையினதும் துறைத் தலைவர்,

(3) செயலாளர்,

(4) நூலகப்பொறுப்பாளர், அத்துடன்

(5) பொருளாளர்.

**பணிப்பாளர்.**

**57.** (1) ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் முதலாவது பணிப்பாளர், அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) பின்னரான பணிப்பாளர் ஒவ்வொருவரும், பல்கலைக்கழகக் கல்லூரியின் முகாமைச் சபையினால் விதப்புரை செய்யப்பட்ட மூன்று ஆட்களைக் கொண்ட குழாத்திலிருந்து ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதல் வேண்டும். ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினரொருவர் பணிப்பாளராக நியமிக்கப்பட்டவிடத்து, அத்தகைய நிறுவனம், அவ்வாறு நியமிக்கப்பட்டவரான அப்பணியாட்டொகுதியின் உறுப்பினரை, பணிப்பாளர் பதவியை அவர் ஏற்றுக்கொள்ளுவதற்காக, விடுவித்தல் வேண்டும்.

(3) ஒரு பணிப்பாளர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய அல்லது இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டுக் காலத்துக்கு அல்லது அவரது அறுபத்தைந்தாவது வயதை எய்தும் வரையில் அல்லது 21 ஆம் பிரிவின் கீழ், அப்பல்கலைக்கழகக் கல்லூரிக்கு, பல்கலைக்கழகக் கூட்டிணைத்தற் கட்டளையொன்றினால் பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்படும்வரையில், இவற்றில் எது முன்னர் நடைபெறுகின்றதோ அதுவரையில், பதவி வகித்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்டவரான முதலாவது பணிப்பாளராகவில்லாதவரான ஒரு பணிப்பாளர், அந்நோக்கத்துக்காகக் கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில் முகாமைச் சபையின் உறுப்பினரது மொத்தத் தொகையில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரால் நிறைவேற்றப்பட்ட கண்டனத் தீர்மானத்தின்பேரில் ஆணைக்குழுவின் தவிசாளரால் பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

(5) பதவிதுறக்கும் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படும் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரிக்குப் பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்படும் காரணத்தால் அவ்வாறு பணியாற்றலியலாதிருக்கும் பணிப்பாளர் ஒருவர், அவர் பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு நேர்முன்னர் ஓர் உயர் கல்வி நிறுவனத்தில் அதன் பணியாட்டொகுதி உறுப்பினராக இருந்திருப்பின், அவர் அறுபத்தைந்தாம் வயதை எய்தியிராதிருப்பின், அவர் அத்தகைய நிறுவனத்தில் அவரது நிலையான பதவியை மீள வகிக்கலாம்.

58. (1) பணிப்பாளர், பல்கலைக்கழகக் கல்லூரியின் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதோடு, அதன் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் கல்வி அலுவலராகவும் இருத்தலும் வேண்டும். அவர், பதவிவழி உறுப்பினராகவும், முகாமைச் சபையினதும், கல்விக் கூட்டவையினதும் தவிசாளராகவுமிருத்தல் வேண்டும் என்பதுடன், முகாமைச் சபையினதும், கல்விக் கூட்டவையினதும் எல்லாக் கூட்டங்களையும் கூட்டுதலும் வேண்டும்; அத்துடன் அவர் பல்கலைக்கழகக் கல்லூரியின் வேறேதேனும் அதிகாரசபையின் அல்லது குழுவின் கூட்டமெதனையும் கூட்டுவதற்கும், அதில் சமுகமாயிருப்பதற்கும், அதில் உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்; ஆனால், அவர் அத்தகைய வேறு அதிகாரசபையின் அல்லது குழுவின் உறுப்பினராக இருந்தாலொழிய, அத்தகைய கூட்டமெதிலும் வாக்களிப்பதற்கு உரித்துடையவராகார். பணிப்பாளரின் கடமைகளும் பணிகளும்.

(2) முகாமைச் சபையினால், அதன்சார்பில், பணிப்பாளருக்குக் காலத்துக்குக் காலம், சட்டமுறையாக விடுக்கப்படக்கூடிய அத்தகைய பணிப்புகளுக்கு இணங்க, இச்சட்டத்தினதும் ஏதேனும் நோதான சாதனத்தினதும் ஏற்பாடுகள் முறையாகக் கடைப்பிடிக்கப்படுவதை உறுதிப்படுத்தல் அவரின் கடமையாதல் வேண்டும்; இந்நோக்கத்துக்காக அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு, அவற்றை அவர் பிரயோகிக்கலாம்.

(3) இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, முகாமைச் சபையினதும், கல்விக் கூட்டவையினதும் முடிவுகளுக்குப் பயனளித்தல், அல்லது பயனளிக்கப்படுதலை உறுதிப்படுத்தல் பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்.

(4) பணிப்பாளர், பல்கலைக்கழகக் கல்லூரியின் கணக்கீட்டு அலுவலராக இருத்தல் வேண்டும்.

(5) பணிப்பாளர், பல்கலைக்கழகக் கல்லூரியின் ஒழுக்காற்றைப் பேணுவதற்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

(6) லீவு காரணமாக, சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக, அல்லது வேறு காரணத்துக்காக, பணிப்பாளர், தமது பதவியின் கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருப்பின், அத்தகைய இயலாமை நிகழ்ந்து ஏழு நாட்களுக்குள், ஆணைக்குழு அப்பதவியின் கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தக்கதென அது கருதக்கூடிய அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரையில், செயலாளர், அப்பதவிக்குரிய வழமைமுறையான கடமைகளைக் கொண்டுநடாத்துதல் வேண்டும்.

(7) பணிப்பாளர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படின் 57(2) ஆம் பிரிவின் கீழ் நிரந்தரமான நியமனம் செய்யப்படும் வரையில், ஆணைக்குழு, அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டு ஏழுநாட்களுக்குள், அப்பதவியின் கடமைகளைக் கொண்டுநடாத்துவதற்கு அது தக்கதெனக் கருதக்கூடிய அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரையில், செயலாளர், அப்பதவிக்குரிய வழமைமுறையான கடமைகளைக் கொண்டுநடாத்துதல் வேண்டும்.

செயலாளர்.

59. (1) பல்கலைக்கழகக் கல்லூரியொன்றின் செயலாளர், கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படவேண்டிய உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக் குழுவொன்றின் விதப்புரையின்பேரில், முகாமைச் சபையால் நியமிக்கப்படுதல் வேண்டும். அவர் பல்கலைக்கழகக் கல்லூரியின் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தினால் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தினால் அவருக்கு அளிக்கப்படக்கூடிய அல்லது அவர் மீது சுமத்தப்படக்கூடிய அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்படக்கூடிய அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) பல்கலைக்கழகக் கல்லூரியின் பதிவேடுகளினதும் ஆதனத்தினதும் கட்டுக்காவலுக்குச் செயலாளர் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

(3) செயலாளர், முகாமைச் சபையினதும், கல்விக் கூட்டவையினதும் பதவிவழிச் செயலாளராகவிருத்தல் வேண்டும்.

(4) செயலாளர், பல்கலைக்கழகக் கல்லூரியின் உதவிக் கணக்கீட்டு அலுவலராக இருத்தல் வேண்டும்.

(5) பணிப்பாளரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, பல்கலைக்கழகக் கல்லூரியின் பொது நிருவாகத்துக்கும், கல்வித்துறைசாராப் பணியாட்டொகுதியின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கும் செயலாளர் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

நூலகப் பொறுப்பாளர்.

60. (1) ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் நூலகப்பொறுப்பாளர், கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படவேண்டிய உறுப்பாண்மை அமைப்பினைக் கொண்டதான தெரிவுக் குழுவொன்றின் விதப்புரையின் பேரில் முகாமைச் சபையினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அவர்பல்கலைக்கழகக் கல்லூரியின் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தினால் அல்லது தோதான சாதனத்

திஞல் அவருக்கு அளிக்கப்படக்கூடிய அல்லது அவர்மீது சுமத்தப் படக்கூடிய அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்படக்கூடிய அத் தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோ கித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) நூலகப் பொறுப்பாளர், பணிப்பாளரின் பணிப்புக்கும் கட் டுப்பாட்டுக்கும் அமைவாக, பல்கலைக்கழகக் கல்லூரியின் நூலகத் தின் அல்லது நூலகங்களின் நிருவாகத்துக்குப் பொறுப்பா யிருத்தல் வேண்டும்.

61. (1) ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் பொருளாளர் கட்டளைச்சட்டத்திஞல் விதித்துரைக்கப்பட வேண்டிய உறுப்பாண்மை, அமைப்பினைக் கொண்ட ஒரு தெரிவுக் குழுவின் விதப்புரையின் பேரில், முகாமைச் சபையிஞல் நியமிக்கப்படுதல் வேண்டும். அவர் பல்கலைக்கழகக் கல்லூரியின் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்திஞல் அல்லது ஏதேனும் தோதான சாதனத்திஞல் அவருக்கு அளிக்கப்படக்கூடிய அல்லது அவர்மீது சுமத்தப்படக்கூடிய அல்லது அவருக்குக் குறித்தொதுக் கப்படக்கூடிய அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணி களையும், பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண் டும். பொருளாளர்.

(2) பொருளாளர், செயலாளரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக் கும் அமைவாக, பல்கலைக்கழகக் கல்லூரியின் நிதிகளின் நிரு வாகத்துக்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும் என்பதுடன், கட்ட ளைச்சட்டத்திஞல் விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத் திலும் முறையிலும் அதன் கணக்குகளைப் பேணுதலும் வேண் டும். பல்கலைக்கழகக் கல்லூரியின் நிதிகள் அவரது கட்டுக்காவ லில் இருத்தல் வேண்டும்.

62. ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் அதிகாரசபைகள் பின் வருவனவாக இருத்தல் வேண்டும் :— ஒரு பல்கலைக் கழகக் கல்லூரி யின் அதிகார சபைகள்.

(1) முகாமைச் சபை ;

(2) கல்விக் கூட்டவை ;

(3) துறை அல்லது துறைகள் ; அத்துடன்

(4) அத்தகைய அதிகாரசபைகளாக இருப்பதற்கெனக் கட்டளைச் சட்டத்தால் விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வேறு குழுக்கள்.

63. (1) முகாமைச் சபை (இது இதனகத்துப்பின்னர் " சபை " எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வரும் ஆட்களைக் கொண்டதாக விருத்தல் வேண்டும் :— முகாமைச்சபை.

(i) பணிப்பாளர் ;

(ii) ஒவ்வொரு துறையினதும் துறைத் தலைவர்; அத்துடன்

(iii) மேலேயுள்ள (i) என்பதன்கீழும், (ii) என்பதன்கீழுமான உறுப்பினர்களின் மொத்தத் தொகையோடு மூன்றைக் கூட்டவரும் எண்ணிக்கையினரான உறுப்பினர்களுக்குச் சமனாகவுள்ள அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்கள். அத்தகைய எல்லா உறுப்பினர்களும் கல்வி, உயர்தொழில், வணிகம், கைத்தொழில், விஞ்ஞானம் அல்லது நிருவாகம் ஆகிய துறைகளில் சிறப்பான சேவை ஆற்றியுள்ள ஆட்களுளிருந்து ஆணைக் குழுவால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் (2) ஆம், (3) ஆம், (4) ஆம், (5) ஆம், (6) ஆம், (7) ஆம், (8) ஆம், (9) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், பின்வரும் திரிபுகளுக்கு அமைவாக, சபைக்கு ஏற்புடையனவாதல் வேண்டும் :—

அவ்வுட்பிரிவுகளில்—

(அ) " துணை வேந்தர் " என்னுஞ் சொல்லமைப்புத் தோன்றுமிடத்தெல்லாம், " பணிப்பாளர் " என்னுஞ் சொல்லமைப்பு இடப்படுதல் வேண்டும்;

(ஆ) " பேரவை " என்னுஞ் சொல்லமைப்புத் தோன்றுமிடத்தெல்லாம் " முகாமைச் சபை " என்னுஞ் சொல்லமைப்பு இடப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபை, இச்சட்டத்தின் 45 ஆம் பிரிவினால் ஒரு பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பின்வரும் திரிபுகளுக்கு அமைவாக, பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(அ) அப் பிரிவில்—

(i) " பேரவை " என்னுஞ் சொல்லமைப்புத் தோன்றுமிடத்தெல்லாம் அதற்குப் பதிலாக " சபை " என்னுஞ் சொல்லமைப்பை இடுவதன் மூலமும் ;

(ii) " பல்கலைக்கழகம் " என்னுஞ் சொல்லமைப்பு தோன்றுமிடத்தெல்லாம் அதற்குப் பதிலாக " பல்கலைக்கழகக் கல்லூரி " என்னுஞ் சொல்லமைப்பை இடுவதன்மூலமும் ;

(iii) " மூதவை " என்னும் சொல்லமைப்புத் தோன்றுமிடத்தெல்லாம் அதற்குப் பதிலாக, " கல்விக் கூட்டவை " என்னுஞ் சொல்லமைப்பை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ஆ) (i) அப்பிரிவில், நீதிமன்றம் பற்றிய ஏதேனும் குறிப்பீட்டையும்; அத்துடன்

(ii) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (viii) ஆம், (xvi) ஆம் பந்திகளையும்

விட்டுவிடுவதன்மூலமும்.

**64.** (1) கல்விக் கூட்டவை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :— *கல்விக் கூட்டவை.*

(அ) பணிப்பாளர்;

(ஆ) ஒவ்வொரு துறையினதும் துறைத் தலைவர்;

(இ) ஒவ்வொரு கற்கைப் பகுதியினதும் தலைவர்;

(ஈ) நூலகப் பொறுப்பாளர்;

(உ) சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி இணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் மூதவையினால் மூதவையுறுப்பினர்களுளிருந்து பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு பிரதிநிதிகள் : அத்துடன்

(ஊ) ஒவ்வொரு துறையினதும் நிரந்தர ஆசிரியர்களால், அவர்களுளிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களும், (ஆ), (இ) என்னும் பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்டவர்களல்லாதோருமான இரண்டு உறுப்பினர்கள்.

(2) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், விடயத்துக்கு ஏற்றவாறு அவர் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அல்லது தெரிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட இரண்டாண்டுக் காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(3) கல்விக் கூட்டவையின் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண், அதன் உறுப்பினர்களின் மொத்தத் தொகையில் நாலிலொரு பங்கினதாயிருத்தல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கல்விக் கூட்டவை, இச்சட்டத்தின் 46 ஆம் பிரிவினால் ஒரு பல்கலைக்கழகத்தின் மூதவைக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக்குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பின்வரும் திரிபுகளுக்கு அமைவாக, பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(i) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவு இடப்படுதல் வேண்டும் :—

> " (5) கல்விக் கூட்டவை, ஒவ்வொரு தோதான பல்கலைக்கழகத்தினதும் ஒருப்பாட்டுடன், பல்கலைக்கழகக் கல்லூரியில் கற்பித்தல், கல்வி, ஆராய்ச்சி, தேர்வுகள் ஆகியவற்றில் கட்டுப்பாடும், பொதுவான பணிப்பதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும் " ;

(ii) (6) ஆம் உட்பிரிவில், அதன் (i) ஆம் பந்தியில், " அல்லது துறைகளின் அறிக்கைகளை ஆய்ந்தபின்னர் " என்னுஞ் சொல்லமைப்புக்குப் பதிலாக " அல்லது துறைகளின் அறிக்கைகளை ஆய்ந்தபின்னரும் ஒவ்வொரு தோதான பல்கலைக்கழகத்தினதும் ஒருப்பாட்டுடனும் " என்னுஞ் சொல்லமைப்பு இடப்படுதல் வேண்டும் ;

(iii) " பேரவை " என்னுஞ் சொல்லமைப்புத் தோன்றுமிடத்தெல்லாம், அதற்குப் பதிலாக " சபை " என்ற சொல்லமைப்பு இடப்படுதல் வேண்டும் ;

(iv) " பல்கலைக்கழகம் " என்னுஞ் சொல்லமைப்புத் தோன்றுமிடத்தெல்லாம், அதற்குப் பதிலாக " பல்கலைக்கழகக் கல்லூரி " என்னுஞ் சொல்லமைப்பு இடப்படுதல் வேண்டும் ;

(v) " மூதவை " என்னுஞ் சொல்லமைப்புத் தோன்றுமிடத்தெல்லாம், அதற்குப் பதிலாக " கல்விக் கூட்டவை " என்னுஞ் சொல்லமைப்பு இடப்படுதல் வேண்டும்.

**ஒரு பல்கலைக் கழகக் கல்லூரியின் துறைகள்.**

**65.** (1) ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி, இயைபான பல்கலைக் கழகக் கல்லூரிக் கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறுள அத்தகைய துறையை அல்லது துறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு துறையும் பின்வரும் ஆட்களைக் கொண்டதாயிருத்தல் வேண்டும் :—

(அ) தத்தமது நியமனங்களில் உறுதிசெய்யப்பட்டுள்ளவர்களான துறையில் அடங்கியுள்ள கற்கைப் பகுதிகளின் எல்லாப் பேராசிரியர்களும், இணைப் பேராசிரியர்களும், சிரேட்ட விரிவுரையாளர்களும் அல்லது விரிவுரையாளர்களும் ;

(ஆ) நூலகப்பொறுப்பாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர் ;

(இ) பல்கலைக்கழகக் கல்லூரி இணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் நேரொத்த துறையினதும் அதன் பதவிவழி உறுப்பினர்களுளிருந்து பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மூன்று பிரதிநிதிகள் ;

(ஈ) துறையின் நிரந்தர உதவி விரிவுரையாளர்களால் அவர்களுளிருந்து தெரிவு செய்யப்பட்ட ஓர் உறுப்பினர் ;

(உ) பந்திகள் (அ), (ஈ) என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்டவர்கள் நீங்கலாக, துறையில் கற்பிக்கும் நிரந்தரப் பதவியினர்களுளிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஓர் உறுப்பினர் ; அத்துடன்

(ஊ) துறையின் மாணவர்களால், அவர்களுளிருந்து தெரிவு செய்யப்பட்ட இரண்டு மாணவர்கள்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் கீழ் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள், தேர்வுகளோடும் அவை தொடர்பான கருமங்களோடும் சம்பந்தப்பட்ட ஏதேனும் கூட்டத்தின் நடவடிக்கைகளில் சமுகமளிக்காதவாறு விலக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விலக்கல் எவ்வாறிருப்பினும், அத்தகைய கூட்டம் எதுவும் முறையாக நடைபெற்றுள்ளதெனக் கருதப்படுத்தலும் வேண்டும்.

(4) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் இரண்டாண்டுக் காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், விடயத்துக்கு ஏற்றவாறு, அவர் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அல்லது தெரிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட ஓராண்டுக் காலத்துக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் 48 (3) ஆம் பிரிவில் "மூதவை" என்னுஞ் சொல்லமைப்புத் தோன்றுமிடத்தெல்லாம் அதற்குப் பதிலாக "கல்விக் கூட்டவை" என்னுஞ் சொல்லமைப்பு இடப்படுதல் வேண்டும் என்னும் திரிபுக்கமைவாக, அப்பிரிவினால் ஒரு பல்கலைக்கழகத்தின் துறைக்கு அளிக்கப்பட்ட, அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் ஒரு துறை பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

**49 ஆம் பிரிவு, ஏற்ற மாற்றங்களுடன் துறைத் தலைவருக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.**

**66.** நாற்பத்தொன்பதாம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன் ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் ஒவ்வொரு துறையின் துறைத் தலைவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**துறைகளையும் கற்கைப் பகுதிகளையும் தாபிப்பதற்கான விதப்புரை.**

**67.** ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி, காலத்துக்குக் காலம், அதன் கற்பித்தல் முறையையும், ஆராய்ச்சியையும், வித்தரித்தற் திட்டங்களையும் அபிவிருத்திசெய்தலுக்கு அவசியமெனஅது கருதக்கூடியவாறான அத்தகைய துறைகளையும், கற்கைப் பகுதிகளையும் தாபித்தல் பற்றி ஆணைக்குழுவுக்கு விதப்புரைகள் செய்யலாம்.

**51 ஆம் பிரிவு ஏற்ற மாற்றங்களோடு, ஒவ்வொரு கற்கைப் பகுதியின் தலைவருக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.**

**68.** ஐம்பத்தோராம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் ஒவ்வொரு கற்கைப் பகுதியின் தலைவருக்கும், அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**135 ஆம், 136 ஆம், 137 ஆம் பிரிவுகள் ஏற்ற மாற்றங்களுடன் கல்விக் கூட்டவை முதலியவற்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.**

**69.** இச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு அமைவாக, 135 ஆம் 136 ஆம், 137 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், முறையே சபைக்கும், கல்விக் கூட்டவைக்கும், ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் வேறேதேனும் அதிகாரசபைக்கும் அல்லது வேறு குழுவுக்கும் அவை தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், கல்வி விடயமொன்றினைப் பற்றிய துணைவிதி அல்லது ஒழுங்குவிதி எதுவும், தோதான பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டோடன்றி, ஆக்கப்படுதலாகாது.

பொருள்கோடல்.

70. இப்பாகத்தின் நோக்கங்களுக்காக—

"கல்வி விடயம்" என்பது கல்விக் கூட்டவையின் கட்டுப்பாட்டுக்கும் பொதுப் பணிப்புக்கும் அமைவான எதேனும் விடயம் எனப் பொருள்படும் ; அத்துடன்

"தோதான பல்கலைக்கழகம்" என்பது, எந்தப் பல்கலைக்கழகத்தின் பட்டத்துக்காக, டிப்ளோமாவுக்காக, அல்லது வேறு கல்விச் சிறப்புக்காக விதிக்கப்பட்ட கற்பித்தலை ஏற்பாடு செய்யும் நோக்கத்துக்காக அல்லது தேர்வுகளை நடாத்தும் நோக்கத்துக்காக அதனோடு ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி இணைக்கப்பட்டுள்ளதோ, அந்தப் பல்கலைக்கழகம் எனப் பொருள்படும்.

## பாகம் X

### பணியாட்டொகுதிக்கான நியமனங்கள்

பணியாட்டொகுதிக்கான நியமனங்கள் ஆளும் அதிகாரசபையினால் செய்யப்படுதல் வேண்டும்.

71. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் பணியாட்டொகுதிக்கான நியமனம் ஒவ்வொன்றும், கட்டளைச்சட்டத்தினால் விதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கும், நியமனத்துக்கான நடவடிக்கைமுறைகளுக்கும் இணங்க, அத்தகைய நிறுவனத்தின் ஆளும் அதிகார சபையினால் செய்யப்படுதல் வேண்டும்.

(2) கட்டளைச்சட்டத்தினால் விதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கும் நியமனத்துக்கான நடவடிக்கை முறைகளுக்கும் இணங்க, ஆணைக்குழு, உயர்கல்வி நிறுவனமொன்றின் பணியாட்டொகுதிக்குப் பின்வரும் நியமனங்களைச் செய்தல் வேண்டும்:—

(i) அலுவலர் பதவிக்கான நியமனம் (இச்சட்டத்தின்கீழ் அலுவலர் பதவி தொடர்பில் வேறு ஏற்பாடு குறிப்பாகச் செய்யப்பட்டிருக்குமிடத்து தவிர);

(ii) ஆசிரியர் பதவி அல்லாததும், ஓர் ஆண்டுக்கு ஒன்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாத தொடக்கச் சம்பளத்தைக் கொண்டதும் அல்லது கட்டளைச்சட்டத்தின்மூலம் ஆணைக்குழு காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய வேறு கூடுதலான தொடக்கச் சம்பளத்தைக் கொண்டதுமான ஒரு பதவிக்கான நியமனம் ; அத்துடன்

(iii) ஆசிரியர் பதவிகள் அல்லாதவையும் கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவையும், பதவியின் ஒரு தரத்திலிருந்து அல்லது வகுப்பிலிருந்து வேறொரு தரத்துக்கு அல்லது வகுப்புக்கு நியமத்தரானவர் பதவியேற்றம் பெறுவதை உள்ளடக்குவதுமான அத்தகைய பதவிகளுக்கான நியமனம்.

ஆசிரியர் பதவிக்கான நியமனம்.

72. ஆசிரியர் பதவிக்கான நியமனம் ஒவ்வொன்றும், முதற்கண், மூன்றாண்டுக் காலத்துக்கான தகுதிகாண் நிலையிலிருத்தல் வேண்டும் ; இந்தத் தகுதிகாண்நிலைக் காலமானது, ஒரு முறைக்கு ஓராண்டாக, மூன்றாண்டுகளுக்கு மேற்படாத மேலுமொரு காலத்துக்கு, அத்தகைய ஆசிரியர் சேவை

செய்யும் உயர் கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபையால் நீடிக்கப்படலாம் ; அத்தகைய நியமனம், கட்டளைச்சட்டத்தால் விதித்துரைக்கப்பட்ட தோதான ஆட்சேர்ப்புத் திட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறான பதவியில் உறுதிப்படுத்தப்படுதல் பற்றிய அத்தகைய தேவைப்பாடுகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டும்.

**73.** பதவியில் உறுதிசெய்யப்பட்டுள்ளவரான ஆசிரியர் பதவி வகிக்குமொருவர், தமது அறுபத்தைந்தாம் வயதை நிறைவு செய்யும்வரையில், அல்லது கல்வி ஆண்டொன்றின்போது அவர் தமது அறுபத்தைந்தாம் வயதை நிறைவுசெய்யின், அத்தகைய கல்வி ஆண்டின் கடைசிநாள்வரையில் அப்பதவியில் தொடர்ந்திருத்தல்வேண்டும் என்பதுடன், அதன்பின்னர் அவர் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளாரெனக் கருதப்படுதலும் வேண்டும் : ஆசிரியர்கள் ஓய்வுபெறுதல்.

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஏதேனும் பதவியை வகிப்பவர், துர்நடத்தைக்காக, திறமையின்மைக்காக, அல்லது கடமையைக் கைவிட்டமைக்காக எப்போதேனும் அத்தகைய ஆசிரியர் சேவைசெய்யும் உயர் கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபையால் விசாரணை முடிவடையும்வரையில், நிறுத்திவைக்கப்படலாம், அல்லது, அத்தகைய விசாரணையின் பின்னர் குற்றவாளியாகக் காணப்பட்டால், அத்தகைய ஆளும் அதிகாரசபையால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின்பேரில், பதவி நீக்கஞ் செய்யப்படலாம் அல்லது கட்டாய ஓய்வளிக்கப்படலாம்.

**74.** ஆசிரியர் பதவியல்லாத வேறு பதவியொன்றுக்கான நியமனம் ஒவ்வொன்றும், முதற்கண், மூன்றாண்டுக்கான தகுதிகாண்நிலைக் காலத்துக்கானதாக இருத்தல்வேண்டும் ; அதன் பின்னர், ஆணைக்குழுவால் அல்லது அத்தகைய நியமனம் தொடர்புபடுத்துவதான உயர் கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபையால் உறுதிசெய்யப்படுவதற்கு அமைந்ததாதல் வேண்டும். ஆசிரியர் பதவி அல்லாத வேறு பதவிக்கான நியமனம்.

**75.** ஆசிரியர் பதவியல்லாத வேறு ஏதேனும் பதவி வகிப்பவர், அவரது ஐம்பத்தைந்தாம் வயதை எய்தும்வரையில் பதவியில் தொடர்ந்திருத்தல்வேண்டும் என்பதுடன், அதன் பின்னர் அவர், சேவையிலிருந்து தன்னிச்சையாக ஓய்வுபெற்றுள்ளவராகக் கருதப்படுதலும் வேண்டும் : ஆசிரியர்கள் அல்லாத வேறு ஆட்கள் ஓய்வு பெறுதல்.

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஏதேனும் பதவியை வகிப்பவருக்கு அவரது எழுத்திலான வேண்டுகோளின்பேரில் ஆணைக்குழுவால் அல்லது அவர் சேவைசெய்யும் உயர் கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபையால், அவர் தமது அறுபதாம் வயதை எய்தும்வரையில், ஒருமுறைக்கு ஓராண்டாக, சேவை நீடிப்புகள் வழங்கப்படலாம் என்பதுடன், அதன்பின்னர், அவர் ஓய்வுபெற்றுள்ளாரெனக் கருதப்படுதலும் வேண்டும் :

ஆயின், மேலும் அத்தகைய ஏதேனும் பதவி வகிப்பவர், விடயத்துக்கேற்றவாறு துர்நடத்தைக்காக, திறமையின்மைக்காக அல்லது கடமையைக் கைவிட்டமைக்காக, எப்போதேனும், ஆணைக்

குழுவினால் அல்லது அவர் சேவை செய்யும் உயர் கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபையினால் விசாரணை முடிவடையும் வரையில் நிறுத்திவைக்கப்படலாம், அல்லது அத்தகைய விசாரணையின் பின்னர் குற்றவாளியாகக் காணப்பட்டால் அத்தகைய ஆணைக்குழுவால் அல்லது ஆளும் அதிகாரசபையால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின் பேரில பதவியிலிருந்து நீக்கப்படலாம் அல்லது பதவியிலிருந்து கட்டாய ஓய்வளிக்கப்படலாம்.

பதவி நீக்கம், கட்டாய ஓய்வு அல்லது வேறு தண்டனைக்கு எதிரான மேன்முறையீடு.

76. ஆணைக்குழுவில் அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் ஒரு பதவி வகிப்பவரும், துர்நடத்தைக்காக, திறமையின்மைக்காக அல்லது கடமையைக் கைவிட்டமைக்காகப் பதவியிலிருந்து நீக்கப்பட்டவரும் அல்லது அவரது பதவியிலிருந்து கட்டாய ஓய்வளிக்கப்பட்டவரும் அல்லது வேறுவகையில் தண்டிக்கப்பட்டவரும் ஆன ஒவ்வொருவரும், அத்தகைய பதவி நீக்கத்துக்கு, அல்லது ஓய்வளித்தலுக்கு அல்லது தண்டனைக்கு எதிராக, பல்கலைக்கழகச் சேவைகள் மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம் ; அதன்மீது, பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டுச் சபை கூறும் துணிபு முடிவானதாதல் வேண்டும்.

உயர் கல்வி நிறுவனமொன்றின் பணியாட்தொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களையும் உள்ளூராட்சி அலுவலர்களையும் நியமித்தல்.

77. (1) ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் வேண்டுகோளின் பேரில, பகிரங்க சேவையிலுள்ள அலுவலரொருவர் அவ்வலுவலரினதும், அவ்வலுவலர் எந்த அமைச்சினால் அல்லது எந்த அமைச்சின் கீழ் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அந்த அமைச்சின் செயலாளரதும், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரது அமைச்சின் செயலாளரினதும் சம்மதத்தோடு, அந்த உயர் கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதிக்கு அதேபோன்ற சம்மதத்தோடு, அத்தகைய நிறுவனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், உயர் கல்வி நிறுவனமொன்றின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரசகைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தி நீங்கலாக,அப்பிரிவின் (3) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், உயர் கல்வி நிறுவனமொன்றின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரசகைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும், அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) உயர் கல்வி நிறுவனமொன்றின் வேண்டுகோளின்பேரில், உள்ளூராட்சிச் சேவையின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவர், விடயத்துக்கேற்றவாறு, அவ்வலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்தோடும், உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையின் அல்லது அந்த அதிகாரசபையின் சம்மதத்தோடும், அந்த உயர் கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதிக்கு அத்தகைய நிறுவனத்தினால் அதேபோன்ற சம்மதத்தோடு தீர்மானிக்கப்படக் கூடியவாறான, அத்தகைய காலப்பகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அந்த உயர் கல்வி நிறுவனமும் உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச்சபையும் அல்லது அதிகாரசபையும் இணங்கிக் கொள்ளக்கூடிய அத்தகைய நியதிகளின்மீதும் நிபந்தனைகளின்மீதும் (ஓய்வூதிய உரிமைகள் அல்லது சகாயநிதிய உரிமைகள் தொடர்பான நியதிநிபந்தனைகள் உட்பட) அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தர மாக நியமிக்கப்படலாம்.

(5) குறித்துரைக்கப்பட்ட ஒரு காலத்துக்கு அரசாங்கத்தில் சேவைசெய்வதற்கு இணங்கி, ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டுள்ள எவரேனும் ஆள், உயர் கல்வி நிறுவனமொன்று வேலைக்கமர்த்துமிடத்து, அந்த உயர் கல்வி நிறுவனத்திலான அவரது சேவைக்காலம் எதுவும், அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, அரசாங்கத்துக்கு அவரால் ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

**78.** ஆசிரியர் பதவி அல்லாத வேறு ஏதேனும் பதவியை வகிப்பவர், உயர் கல்வி நிறுவனங்களுக்கிடையில், அல்லது ஓர் உயர் கல்வி நிறுவனத்திலிருந்து ஆணைக்குழுவுக்கு, அல்லது ஆணைக்குழுவிலிருந்து ஓர் உயர் கல்வி நிறுவனத்துக்கு இடமாற்றப்படுவதற்குரியவராதல் வேண்டும். அத்தகைய இடமாற்றங்கள் ஆணைக்குழுவால் செய்யப்படுதல் வேண்டும் : இந்நோக்கத்துக்காக, இடமாற்றச் சபையொன்றை ஆணைக்குழு நியமிக்கலாம் ; அதன் அமைப்பு, கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும். **இடமாற்றங்கள்.**

**79.** இப்பாகத்தில் " ஆசிரியர் " என்பது நூலகப் பொறுப்பாளரையும், பிரதி நூலகப் பொறுப்பாளரையும், உதவி நூலகப் பொறுப்பாளரையும் உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும். **பொருள்கோடல்.**

## பாகம் XI

### பல்கலைக்கழகச் சேவைகள் மேன்முறையீட்டுச் சபை

*பல்கலைக்கழகச சேவைகள் மேன்முறையீட்டுச் சபையைத் தாபித்தல்.*

**80.** இதனகத்தின் பின்னர் "மேன்முறையீட்டுச் சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும் பல்கலைக்கழகச் சேவைகள் மேன்முறையீட்டுச் சபை ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும், அது, இச்சட்டத்தின் கீழான மேன்முறையீட்டுச் சபையில் அப்போதைக்கு உறுப்பினர்களாகவுள்ள ஆட்களைக் கொண்டதாதல் வேண்டும்.

*மேன்முறையீட்டுச் சபையின் உறுப்பினர்கள்.*

**81.** மேன்முறையீட்டுச் சபையானது, ஒரு தவிசாளரையும், ஒரு துணைத் தவிசாளரையும் வேறோர் உறுப்பினரையும் கொண்டிருத்தல் வேண்டும்; இவர்கள் எல்லோரும் அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

*மேன்முறையீட்டுச் சபையின் உறுப்பினர்களது பதவிக்காலம்.*

**82.** (1) தவிசாளர் உட்பட மேன்முறையீட்டுச் சபையின் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து, கணிக்கப்பட்ட ஐந்தாண்டுக் காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும் :

எனினும், எவ்வாறுயினும், எவரேனும் உறுப்பினர், அவரது பதவிக்காலம் முடிவடைவதன் முன்னர் தமது பதவியை வறிதாக்கினால், அவரை அடுத்துறுவோர், அத்தகைய அடுத்துறுவோர் தமது பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, அவருக்கு முன் இருந்தவரின் பதவிக்காலத்தின் முடிவுறுதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(2) மேன்முறையீட்டுச் சபையின் ஓர் உறுப்பினர், அமைச்சருக்கு தமது கைப்பட முகவரியிட்டு அனுப்பிய கடிதத்தின் மூலம், தமது பதவியைத் துறக்கலாம்; ஆனால், அவரது பதவிதுறப்பு ஏற்றுக்கொள்ளப்படும்வரையில் அவர் பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(3) மேன்முறையீட்டுச் சபையின் எவரேனும் உறுப்பினர், சுகவீனம் காரணமாக அல்லது வேறு பலவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு காரணத்துக்காக, தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருப்பின், அமைச்சர், அத்தகைய உறுப்பினருக்காகப் பதிற்கடமை ஆற்றுவதற்குத் தக்கவோர் ஆளை, நியமிக்கலாம்.

(4) மேன்முறையீட்டுச் சபையின் தவிசாளருக்கும் வேறு உறுப்பினர்களுக்கும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைக் கலந்தாலோசித்து அமைச்சர் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய ஊதியம் அல்லது படிகள் கொடுக்கப்படுதல் வேண்டும்.

83. (1) மேன்முறையீட்டுச் சபையின் எல்லாக் கூட்டங்களிலும் அச்சபையின் தவிசாளர் தலைமைதாங்குதல் வேண்டும் ; அவர் சமூகமளிக்காவிடில், துணைத் தவிசாளர் தலைமைதாங்குதல் வேண்டும். மேன்முறையீட்டுச் சபையின் கூட்ட நடவடிக்கைகள்.

(2) மேன்முறையீட்டுச் சபையின் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் இரண்டு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) மேன்முறையீட்டுச் சபைக் கூட்டங்களில் அலுவல்களை நடாத்துவதற்கான நடவடிக்கைமுறை அச்சபையினால் ஆக்கப்பட்ட விதியினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

84. (1) மேன்முறையீட்டுச் சபையின் பணியாட்டொகுதி ஒரு செயலாளரையும், அதன் அலுவல்களைத் தகுந்தமுறையிலும் திறமையாகவும் நடாத்துவதற்கு அவசியமானவர்கள் என, அச்சபை கருதக்கூடிய அத்தகைய வேறு அலுவலர்களையும் ஊழியர்களையும் கொண்டிருத்தல் வேண்டும் ; அவர்களெல்லோரும் ஆணைக்குழுவால் அதன் பணியாட்டொகுதியிலிருந்து அல்லது ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதியிலிருந்து ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். மேன்முறையீட்டுச் சபையின் பணியாட்டொகுதி.

(2) மேன்முறையீட்டுச் சபையின் பணியாட்டொகுதி அச்சபையின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

(3) (அ) 82 (4) ஆம் பிரிவின்கீழ்த் தீர்மானிக்கப்பட்டவாறு மேன்முறையீட்டுச் சபையின் உறுப்பினர்களுக்குக் கொடுப்பனவுகள் செய்தலும் ;

(ஆ) மேன்முறையீட்டுச் சபையின் பணியாட்டொகுதிக்கான சம்பளங்களையும் கூலிகளையும் கொடுத்தலும் ; அத்துடன்

(இ) மேன்முறையீட்டுச் சபை, அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் திறம்படப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும், தேவைப்படக்கூடிய அத்தகைய வேறு வசதிகளை அளித்தலும்,

ஆணைக்குழுவின் கடமையாதல் வேண்டும்.

85. (1) (அ) இச்சட்டத்தின்கீழ், அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின்கீழ், மேன்முறையீட்டுச் சபையினால், நல்லெண்ணத்தோடு செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக மேன்முறையீட்டுச் சபைக்கு எதிராக ; அல்லது இச்சட்டம் முதலியனவற்றின்கீழ் அல்லது மேன்முறையீட்டுச் சபையின் பணிப்பின் பேரில் எடுக்கப்படும் நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின்கீழ், அல்லது மேன்முறையீட்டுச் சபையின் பணிப்பின் பேரில், மேன்முறையீட்டுச் சபையின் அல்லது அதன் பணியாட்டொகுதி

யின் எவரேனும் உறுப்பினரால் நல்லெண்ணத்தோடு செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கு எதிராக,

ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்றவழக்கு இருத்தலாகாது.

(2) மேன்முறையீட்டுச் சபையினல் அல்லது அதற்கு எதிராக, ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் மேன்முறையீட்டுச் சபையினல் உறப்பட்ட ஏதேனும் செலவு, ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில், மேன்முறையீட்டுச் சபைக்குக் கொடுக்கப்பட்ட, அல்லது அதனல் அறவிடப்பட்ட செலவுதொகைகள் எவையும் அந்த நிதியத்தில் வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின்கீழ், அல்லது மேன்முறையீட்டுச் சபையின் பணிப்பின்பேரில், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறன அத்தகைய எவரேனும் ஆளினல் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக்கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் அவருக்கு எதிராக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அச்செயல் நல்லெண்ணத்தோடு செய்யப்பட்டதென நீதிமன்றம் கருதினல், அத்தகைய செலவானது, அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலன்றி, ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து அவருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(4) மேன்முறையீட்டுச் சபைக்கு எதிராகக் கொணரப்பட்ட வழக்கு எதிலும், மேன்முறையீட்டுச் சபை உறுப்பினரின் உடலுக்கு அல்லது ஆதனத்துக்கு எதிரான எழுத்தாணை எதுவும் விடுக்கப்படுதலாகாது.

மேன்முறையீட்டுச் சபையின் தத்துவங்களும், கடமைகளும் பணிகளும்.

86. மேன்முறையீட்டுச் சபை, பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அவற்றைப் பிரயோகிக்கலாம் :—

(அ) ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கும் உயர் கல்வி நிறுவனங்களுக்கும் செய்யப்பட்டதாகச் சார்த்தப்பட்ட நியமனங்கள் அல்லது பதவியேற்றங்கள் செய்யப்பட்ட காலத்தின்போது வலுவிலிருந்தனவான ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கும் நியமனத்துக்கான நடவடிக்கை முறைகளுக்கும் முரணகச் செய்யப்பட்ட அத்தகைய நியமனங்கள் பற்றியும், பதவியேற்றங்கள் பற்றியும் நுண்ணய்வுகள் நடாத்துதல் ;

(ஆ) ஆணைக்குழுவிலிருந்து அல்லது ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்திலிருந்து பதவிநீக்கஞ்செய்யப்பட்ட, கட்டாய ஓய்வளிக்கப்பட்ட, அல்லது அதனல் வேறுவகையாகத்

தண்டிக்கப்பட்ட ஊழியர்களால், அத்தகைய பதவிநீக்கத்துக்கு, கட்டாய ஓய்வளித்தலுக்கு அல்லது வேறு தண்டனைக்கு எதிராகச் செய்யப்பட்ட மேன்முறையீடுகளை ஆய்தல் ;

(இ) இச்சட்டத்தின் 142 ஆம் பிரிவின்கீழ்ப் பழைய பல்கலைக்கழகத்தின் ஊழியர்களுக்குக் கொடுபடற்குரிய நட்டஈடு தொடர்பில், பழைய பல்கலைக்கழகத்தின், அல்லது ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தின் ஊழியர்களாக இருந்தவர்களான ஆணைக்குழுவின் ஊழியர்களால், செய்யப்பட்ட மேன் முறையீடுகளை ஆய்தல் ;

(ஈ) அத்தகைய மேன்முறையீடுகளை ஆய்ந்தபின்னர் அல்லது அத்தகைய நுண்ணாய்வுகளை நடாத்தியபின்னர், விடயத்துக்கு ஏற்றவாறு ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அல்லது சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபைக்கு, எடுக்கப்பட்ட முடிவுகளைப் பற்றி அறிவித்தல்.

மேன்முறையீட்டுச் சபையின் முடிவு முற்றானதாதல்.

87. எண்பத்தாறும் பிரிவின்கீழ் மேன்முறையீட்டுச் சபை அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கையில், புரிகையில், நிறைவேற்றுகையில் மேன்முறையீட்டுச் சபையினால் எடுக்கப்பட்ட முடிவு முற்றானதாதல் வேண்டும் என்பதோடு, அத்தகைய முடிவின் விளைவாகப் பரிகார முறையிலான நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதாகவுள்ளவிடத்து, விடயத்துக்கு ஏற்றவாறு, ஆணைக்குழுவின் தவிசாளர், அல்லது சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபை, அத்தகைய முடிவைச் செயற்படுத்துதலும் வேண்டும்.

கட்டளைச்சட்டங்கள் ஆக்குவதற்கு மேன்முறையீட்டுச் சபைக்குள்ள தத்துவங்கள்.

88. மேன்முறையீட்டுச் சபை, இச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பயனுறப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும், அதனை இயலச் செய்வதற்கு அவசியமானவையென அது கருதக்கூடிய அத்தகைய எல்லா விடயங்கள் தொடர்பிலும், கட்டளைச்சட்டங்களை ஆக்கலாம்.

## பாகம் XII

### பல்கலைக்கழகச் சகாய நிதியம்

இச்சட்டத்தின் இப்பாகத்திற்குப் பொருள் கொள்ளுதல்.

89. இச்சட்டத்தின் இப்பாகத்தில்—

“ஓய்வுபெறும் வயது” என்பது,—

(அ) உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் ஆசிரியர் பதவியை வகிப்பவரான உதவுதொகை செலுத்துநர் ஒருவர் தொடர்பில், அறுபத்தைந்து வயது எனப் பொருள்படும் ; அத்துடன்

(ஆ) உயர் கல்வி நிறுவனமொன்றில் வேறேதேனும் பதவியை வகிப்பவரான அல்லது ஆணைக்குழுவின் பணியாட்டொகுதி உறுப்பினரான, உதவுதொகை

செலுத்துநர் ஒருவர் தொடர்பில், அவர் எந்த வயதில் விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தின் அல்லது ஆணைக்குழுவின் ஊழியத்தில் இல்லாதொழிகின்றாரோ அந்த வயது எனப் பொருள்படும் ;

"உதவுதொகை செலுத்துநர்" என்பது ஆணைக்குழுவின் அல்லது ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதியிலுள்ளவரும், சகாய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துநராகவுள்ளவருமான எவரேனும் உறுப்பினர் எனப் பொருள்படும் ;

"உழைப்புக்கள்" என்பது 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச்சட்டத்தில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறான உழைப்புகள் எனப் பொருள் படும் ;

" நிதியம் " என்பது—

(அ) ஆணைக்குழு தொடர்பில் இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவின் நிதியம் எனப் பொருள்படும் ; அத்துடன்

(ஆ) ஓர் உயர் கல்வி நிறுவனம் தொடர்பில் இச்சட்டத்தின் 99 ஆம் பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக் கழக நிதியம் எனப் பொருள்படும் ;

" சகாய நிதியம் " என்பது இச்சட்டத்தின், இப்பாகத்தின் கீழ் ஆணைக்குழுவால் தாபிக்கப்பட்ட சகாய நிதியம் எனப் பொருள்படும் ;

" சம்பளம் " என்பது எவரேனும் உதவுதொகை செலுத்துநர் வகிக்கும் நிலையான பதவியின் அல்லது நியமனத்தின் வேதனாதிகள் எனப் பொருள்படும் என்பதுடன், அவரது சம்பளத்தின் பாகமாக அமைவதாகக் கட்டளைச் சட்டத்தினால் வெளிப்படுத்தப்படக்கூடிய அத்தகைய படிகள் எவற்றையும் உள்ளடக்கும் ;

" ஆசிரியர் " என்பது நூலகப்பொறுப்பாளரையும், பிரதி நூலகப்பொறுப்பாளரையும், உதவி நூலகப் பொறுப்பாளரையும் உள்ளடக்கும்.

*பல்கலைக்கழகங்கள் சகாய நிதியத்தைத் தாபித்தல்.*

**90.** பல்கலைக்கழகங்கள் சகாய நிதியம் என அழைக்கப்பட வேண்டியதும் அறியப்படவேண்டியதுமான ஒரு நிதியத்தை ஆணைக்குழு தாபித்தல் வேண்டும்.

*சகாய நிதியத்தை ஒழுங்குபடுத்தல்.*

**91.** சகாய நிதியம் ஒன்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிருவகிப்பதற்கும், முகாமை செய்வதற்கும், அத்தகைய நிதியத்தின் இடைநேர்விளைவானவையும் அல்லது அதனோடு தொடர்புபட்டவையும், இச்சட்டத்தில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பெறாதவையுமான எல்லாக் கருமங்களுக்காகவும் கட்டளைச்சட்டங்கள் ஆக்கப்படலாம் ; அத்தகைய கட்டளைச்சட்டங்கள், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டங்களின் தேவைப்பாடுகளுக்கு இயைந்தனவாகவிருத்தல் வேண்டும்.

சகாய நிதியத்துக்கான உதவு தொகைகள்.

92. (1) கட்டளைச்சட்டத்தால் விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய விடயங்களிற்றவிர, ஆணைக்குழுவின் அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் பணியாட்டொகுதி உறுப்பினர் ஒவ்வொருவரும், அத்தகைய பணியாட்டொகுதியில் அவர் தொழிலுக்கமர்த்தப்பட்ட தேதியிலிருந்து தொடங்கி, அவரது உழைப்புகளில் பத்து சதவீதத்துக்குச் சமமான ஒரு தொகையை, அவரது சம்பளத்திலிருந்து மாதந்தோறும் சமமாகக் கழிக்கப்படும் முறையில், சகாய நிதியத்துக்கு உதவுதொகையாகச் செலுத்தல் வேண்டும் ; அத்துடன், ஆணைக்குழு அல்லது உயர் கல்வி நிறுவனம், மேலதிகமாக, அதன் நிதியத்திலிருந்து அதேநேரத்தில், ஒவ்வோர் உதவுதொகை செலுத்துநர் தொடர்பிலும், அந்த உதவுதொகை செலுத்துநரின் உழைப்புகளில் பதினைந்து சதவீதத்துக்குச் சமமான ஒரு தொகையை, அல்லது நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரோடு கலந்தாலோசித்து, அமைச்சர் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய வேறு தொகையைச் சகாய நிதியத்துக்கு உதவுதொகையாகச் செலுத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுச் செயலாளர், சகாய நிதியத்துக்காக ஒரு பொதுக் கணக்கையும், அந்தச் சகாய நிதியத்துக்கு உதவு தொகை செலுத்தும் ஒவ்வொருவர் தொடர்பிலும் வெவ்வேறு கணக்குகளையும் திறந்து வைத்திருத்தல் வேண்டும். சகாய நிதியத்துக்கு ஓர் உதவுதொகை செலுத்துநரால் செலுத்தப்பட்ட எல்லா உதவுதொகைகளும், அந்த உதவுதொகை செலுத்துநர் தொடர்பில், ஆணைக்குழுவால் அல்லது உயர் கல்வி நிறுவனத்தால் செலுத்தப்பட்ட எல்லா உதவுதொகைகளும், சகாய நிதியத்தில் அந்த உதவுதொகை செலுத்துநரின் வேறாகவுள்ள கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓர் உதவுதொகை செலுத்துநரின் கணக்கில் அவரது வரவிலிருக்கும் தொகையானது, அதன் சார்பில் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அந்த உதவுதொகை செலுத்துநர் ஆணைக்குழுவின் அல்லது உயர் கல்வி நிறுவனத்தின் ஊழியத்திலிருந்து இல்லாதொழியும் தேதிவரையில், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைக் கலந்தாலோசித்து, அமைச்சரால் நிருணயிக்கப்படவேண்டிய வீதத்திலான கூட்டுவட்டியோடு திரட்டப்படுதல் வேண்டும் ; அத்தேதியில் உதவுதொகை செலுத்துநரின் கணக்கு மூடப்படுதல் வேண்டும்.

சகாய நிதியத்திலிருந்து செய்யப்பட வேண்டிய கொடுப்பனவு.

93. (1) தொண்ணூற்றிரண்டாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு எவரேனும் உதவுதொகை செலுத்துநரின் கணக்கு மூடப்படும்போது, ஆணைக்குழுச் செயலாளர், 94 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அந்த உதவுதொகை செலுத்துநருக்கு, சகாய நிதியத்திலுள்ள அவரது கணக்கில் அவரின் வரவிலுள்ள முழுத் தொகையையும் அதன்மீது திரண்ட வட்டியோடு சேர்த்துக் கொடுத்தல் வேண்டும்.

(2) உதவுதொகை செலுத்துநர் ஒருவர், அவரது ஓய்வுபெறும் வயதைப் பூர்த்தி செய்யும் முன்னர் ஒன்றில் சுகவீனம் அல்லது இயலாமை காரணமாக அல்லது அவர் எப்பதவியில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அப்பதவியானது இல்லாதொழிக்கப்படு

வதன் காரணமாக, ஆணைக்குழுவால் தொழிலுக்கமர்த்தப்படாது ஒழியுமிடத்து, அல்லது ஆணைக்குழுவின் அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் சேவையைத் தன்னிச்சையாக விட்டுவிலகுமிடத்து, ஆணைக்குழுவின் செயலாளர், 94 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அவர் அவ்வாறு தொழிலுக்கமர்த்தப்படா தொழிந்த தேதியன்று, அல்லது அவர் தன்னிச்சையாக அத்தகைய ஆணைக்குழுவின் அல்லது உயர் கல்வி நிறுவனத்தின் சேவையை விட்டுவிலகிய தேதியில், சகாய நிதியத்திலுள்ள அவரது கணக்கில் அவரின் வரவிலுள்ள முழுத்தொகையையும் அதன்மீது திரண்ட வட்டியோடு சேர்த்து, உதவுதொகை செலுத்துநருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(3) உதவுதொகை செலுத்துநர் ஒருவர், அவரது ஓய்வுபெறும வயதைப் பூர்த்தி செய்யுமுன்னர், ஆணைக்குழுவின் அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் சேவையிலிருந்து நீக்கப்பட்டவிடத்து அல்லது கட்டாய ஓய்வளிக்கப்படுமிடத்து, ஆணைக்குழுவின் செயலாளர், 94 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, விடயத்துக் கேற்றவாறு, அவர் சேவையிலிருந்து நீக்கப்பட்ட அல்லது கட்டாய ஓய்வளிக்கப்பட்ட தேதிவரை, சகாய நிதியத்திலுள்ள அவரது கணக்கில் அவரது வரவிலுள்ள முழுத்தொகையையும், அத்துடன் அதன்மீது திரண்ட வட்டியையும் சேர்த்து, அந்த உதவு தொகை செலுத்துநருக்குக் கொடுத்தல்வேண்டும்.

(4) உதவுதொகை செலுத்துநர் ஒருவர், ஆணைக்குழுவின் அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் சேவையிலுள்ளபோது இறக்குமிடத்து, ஆணைக்குழுவின் செயலாளர், 94 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சகாய நிதியத்தில் அவரது கணக்கின் வரவிலுள்ள முழுத் தொகையையும், அதன்மீது திரண்ட வட்டியுடன் சேர்த்து, இறந்த உதவுதொகை செலுத்துநரின் மரணச்சொத்துக்கு அல்லது அத்தகைய பணத்தொகைக்குச் சட்டமுறையாக உரித்துக்கொண்ட ஆளுக்கு அல்லது ஆட்களுக்குக் கொடுத்தல் வேண்டும்.

*சகாய நிதியத்திலிருந்து கொடுப்பனவுகள் செய்யப்படுவதன் முன்னர் கழிக்கப்பட வேண்டியவை.*

**94.** இப்பாகத்தின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எதுவும் எவ்விதமிருப்பினும், வேறேதேனும் உரிமைக்கு அல்லது பரிகாரத்துக்குப் பங்கமின்றியும், சகாய நிதியத்தில் உதவுதொகை செலுத்துநர் ஒருவரின் உரிமைக்கு அல்லது பரிகாரத்திற்குப் பங்கமின்றியும், ஆணைக்குழுவால் அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றினுல் அவர் தொழிலுக்கமர்த்தப்பட்டிருந்த காலத்தின்போது அவரது நேர்மையின்மை அல்லது அசட்டை காரணமாக, அத்தகைய ஆணைக்குழுவுக்கு அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு ஏற்பட்ட ஏதேனும் இழப்புத்தொகையும் அல்லது நட்டத்தொகையும் விடயத்துக்கு ஏற்றவாறு, ஆணைக்குழுவிடமிருந்து, அல்லது ஓர் உயர் கல்வி நிறுவனத்திடமிருந்து, அல்லது அரசாங்கத்திடமிருந்து உதவுதொகை செலுத்துநர் எடுத்த ஏதேனும் கடன் மீது வருமதியான கொடுப்பனவுத் தொகைகளும் சகாய நிதியத்தில் அந்த உதவுதொகை செலுத்துநரின் கணக்கின் வரவில் உள்ள தொகைமீது முதற் பொறுப்பாக இருத்தல் வேண்டும். அத்துடன், அத்தகைய பணத்தொகை, 93 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படும்போது, கழிக்கப்படலாம்.

95. இப்பாகத்தின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எதுவும் எவ்விதமிருப்பினும், வேறேதேனும் உரிமைக்கு அல்லது பரிகாரத்துக்குப் பங்கமின்றியும், சகாய நிதியத்தில் உதவு தொகை செலுத்துநர் ஒருவரின் வரவிலிருக்கும் முழுத்தொகையும், அவரது கணக்கு மூடப்பட்டதிலிருந்து மூன்று மாத காலத்துக்குள் அவருக்குக் கொடுக்கப்படாதவிடத்து, அவரது வரவிலிருக்கும் தொகைமீது, அவரது கணக்கின் வரவிலிருக்கும் முழுத் தொகையும் எம்மாதத்தில் கொடுக்கப்படுகின்றதோ அதற்கு முற்போந்த மாதத்தின் கடைசி நாள்வரையில், 92 (3) ஆம் பிரிவின் நோக்கத்துக்காகத் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய வீதத்திலான கூட்டு வட்டி திரளுதல் வேண்டும்: குறித்தசில விடயங்களில் கொடுபடாதுள்ள சகாய நிதியத்தின் மீது கூட்டுவட்டி திரளுதல் வேண்டும்.

ஆயின், அத்தகைய உதவு தொகை செலுத்துநருக்கு அத்தகைய பணத்தொகையைக் கொடுப்பதில் ஏற்படும் சுணக்கத்துக்கு, உதவு தொகை செலுத்துநரின் ஏதேனும் பிழை காரணமாகவிருக்கும் விடயங்களில், அத்தகைய வட்டி கொடுக்கப்படுதலாகாது.

96. இச்சட்டம் தவிர்ந்த வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எப்படியிருப்பினும், சகாய நிதியத்தில் உதவு தொகை செலுத்துநர் ஒருவரின் வரவிலுள்ள பணங்கள், எப்போதேனும், ஏதேனும் நீதிமன்றத்தின் தீர்வையை அல்லது மன்றாணையை நிறைவேற்றும் போது பற்றப்படுதலோ, நடுக்கட்டப்படுதலோ, அல்லது கைப்பற்றப்படுதலோ ஆகாது. உதவுதொகை செலுத்துநரின் குறித்தசில சொத்துக்கள், தீர்வை நிறைவேற்றும் போது கைப்பற்றப்படுவதிலிருந்து விலக்களிக்கப்படுதல்.

97. அமைச்சர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைக் கலந்தாலோசித்து, இப்பாகத்தின் கீழ் ஆணைக்குழுவால் தாபிக்கப்பட்ட சகாய நிதியத்துக்கு மாற்றாக, அல்லது அதற்கு மேலதிகமாக, ஓய்வூதியத் திட்டமொன்றையும், கைம்பெண்கள், அனாதைகள் ஓய்வூதிய நிதியம் ஒன்றையும் தாபிக்கலாம். அத்தகைய ஓய்வூதியத் திட்டத்தையும் அத்தகைய கைம்பெண்கள், அனாதைகள் ஓய்வூதிய நிதியத்தையும் ஒழுங்குபடுத்துவதற்கும், நிருவகிப்பதற்கும், முகாமை செய்வதற்கும் ஆணைக்குழுவால் கட்டளைச்சட்டங்கள் ஆக்கப்படலாம். ஓய்வூதியத் திட்டமும் கைம்பெண்கள், அனாதைகள் ஓய்வூதிய நிதியமும் தாபிக்கப்படுதல்.

## பாகம் XIII

## நிதி ஏற்பாடுகள்

98. அரசாங்கத்தின் நிதி ஆண்டு எதுவோ அதுவே உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் நிதி ஆண்டாக இருத்தல் வேண்டும். நிதி ஆண்டு.

99. (1) ஒவ்வோர் உயர் கல்வி நிறுவனத்துக்கும் பல்கலைக்கழக நிதியம் என அழைக்கப்பட வேண்டிய ஒரு நிதியம் இருத்தல் வேண்டும் ; அதனுள்— பல்கலைக்கழக நிதியம்.

(அ) ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, உயர் கல்வி நிறுவனத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் ;

(ஆ) அறக்கொடைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் ;

(இ) பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டவையும், உயர் கல்வி நிறுவனங்களின் உதவிக்கான மானியங்களாக ஆணைக் குழுவால் பகிர்ந்தளிக்கப்பட்டவையுமான பணங்கள் ; அத்துடன்

(ஈ) எவ்வகையான மூலத்திலிருந்தும் பெறப்பட்டவையும் உயர் கல்வி நிறுவனத்துக்குரியவையுமான வேறெல்லாப் பணங்கள்,

ஆகியவை செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) பல்கலைக்கழக நிதியத்துக்குச் செலுத்தப்பட்ட பணத்தொகை ஒவ்வொன்றும் பற்றிய விவரங்கள் அத்தகைய கொடுப்பனவு செய்யப்பட்டு ஒரு மாதத்துக்குள் சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரினால் ஆணைக்குழு அறிந்துகொள்வதற்காக, ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

உயர் கல்வி நிறுவனங்களின் உதவிக்கான மானியங்கள்.

100. (1) ஒவ்வொரு நிதி ஆண்டும் தொடங்கியதன் பின்னர் திறைசேரியின் பிரதிச் செயலாளர் சாத்தியப்படக்கூடியவாறு விரைவாக, வருடாந்த ஒதுக்கீடு வகையாகவோ, குறைநிரப்பு வாக்கு வகையாகவோ அல்லது வேறுவகையாகவோ உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் உதவிக்கான மானியமாக அல்லது மானியங்களாக, பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை அத்தகைய உயர் கல்வி நிறுவனத்துக்குக் கொடுத்தல் வேண்டும்.

(2) முற்போந்த உட்பிரிவின் கீழ் உயர் கல்வி நிறுவனம் ஒன்றுக்குக் கொடுக்கப்பட்ட எல்லாப் பணங்களும், இச்சட்டத்தால் அல்லது ஏதேனும் ஏற்புடைய சாதனத்தால் அதிகாரமளிக்கப்பட்ட நோக்கங்கள் எல்லாவற்றுக்குமாக அல்லது அவற்றில் எதற்குமாக, அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தால் பிரயோகிக்கப்படுதல் அல்லது செலவிடப்படுதல் வேண்டும்.

நிதியாளரின் அல்லது பொருளாளரின் கடமைகள்.

101. (அ) பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியின் கணக்குகளை, கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும், அத்தகைய முறையிலும் வைத்திருத்தலும் ;

(ஆ) பல்கலைக்கழக நிதியத்துக்குச் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களைப் பெறுதலும், அத்தகைய பணங்களை, பொருத்தமான கணக்குத் தலைப்புகளின் கீழ் வரவுவைத்தலும் ;

(இ) அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளைச் செய்தலும் ; அத்துடன்

(ஈ) ஆணைக்குழுவால் தேவைப் படுத்தப்படுகின்றவாறான அத்தகைய மூன்றாண்டுக் கொருமுறையான மதிப்பீடுகளையும், அடுத்துவரும் நிதி ஆண்டுக்கான ஆண்டு

நிதி ஒதுக்கீடுகளையும், அத்துடன் 105 ஆம் பிரிவின்கீழான எவை யேனும் முறைநிரப்பு மதிப்பீடுகளையும் ஆளும் அதிகாரசபைக்காகத் தயாரித்தலும்,

ஒரு பல்கலைக்கழக அல்லது திறந்த பல்கலைக்கழக நிதியாளரின் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரிப் பொரு ளாளரின் கடமையாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வழங் கப்பட்ட மானியங்களிலிருந்து அல்லது குறிப்பிட்ட குறிக்கோள் களுக்கான அறக்கொடைகளிலிருந்து பெறப்படும் வருமானம், விடயத்துக்கேற்றவாறு, பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின், அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியின் கணக்குகளில் வெவ்வேறாகக் கணக்கு வைக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன், அத்தகைய பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியின் பொது நோக்கங்களுக்காக, அல்லது அத்தகைய மானியங்கள் அல்லது அறக்கொடைகள் முறையே எந்த நோக்கங்களுக்காக அல்லது குறிக்கோள்களுக்காகச் செய்யப்பட் டனவோ அந்த நோக்கங்கள் அல்லது குறிக்கோள்கள் அல்லாத வேறு எவையேனும் நோக்கங்களுக்காக அல்லது குறிக்கோள் களுக்காக அத்தகைய வருமானத்திலிருந்து கொடுப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது.

**102.** நூற்றியோராம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ் தயாரிக்கப்பட்டவையான, விடயத்துக்கு ஏற்றவாறு, ஒரு பல்கலைக் கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக் கழகக் கல்லூரியின் மூன்றாண்டுக்கொருமுறையான மதிப்பீடு களும், வருடாந்த ஒதுக்கீடுகளும், கட்டளைச்சட்டத்தால் விதித்துரைக் கப்படக்கூடிய அத்தகைய தேதியின்முன்னர் அதன் ஆளும் அதி காரசபையால் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய மதிப் பீடுகளிலும் ஒதுக்கீடுகளிலும் அத்தகைய அதிகாரசபை தக்கவை எனக் கருதும் அத்தகைய மாற்றங்களைச் செய்தல் வேண்டும் என்பதுடன், அவற்றை முடிவடைந்த கடைசி நிதி ஆண்டுக்கான வையும், விடயத்துக்கு ஏற்றவாறு பல்கலைக்கழகத்திற்கு, திறந்த பல்கலைக்கழகத்திற்கு அல்லது பல்கலைக்கழகக் கல்லூரிக்குரியவை யுமான கணக்குகளோடு சேர்த்து, ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித் தலும் வேண்டும்.

மூன்றாண்டு களுக்கு ஒரு முறையான மதிப் பீடுகளையும் வருடாந்த ஒதுக்கீடுக ளையும் ஆளும் அதி காரசபை பரிசீ லனை செய்தல் வேண்டும்.

**103.** விடயத்துக்கேற்றவாறு, ஒரு பல்கலைக்கழகத்தின், திறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியின் மூன்றாண்டுக்கொருமுறையான மதிப்பீடுகளும் வருடாந்த ஒதுக் கீடுகளும், அதன் ஆண்டுக் கணக்குகளும், ஆணைக்குழுவால் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும் ; அத்துடன், அத்தகைய மதிப்பீடுகளையும் ஒதுக்கீடுகளையும் ஆணைக்குழு, அது தகுந்த தெனக் கருதுகின்றவாறாகத், தீர்மானத்தின் மூலம் ஏற்றுக்கொள் தல் அல்லது திருத்துதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

மூன்றாண்டுக ளுக்கு ஒரு முறையான மதிப் பீடுகளையும் வருடாந்த ஒதுக்கீடு களையும் ஆணைக் குழு பரிசீலனை செய்தல் வேண்டும்.

ணைகளை மாற்றுதல்.

**104.** ஆணைக்குழு, விடயத்துக்கேற்றவாறு ஒரு பல்கலைக்கழகத்தின், சிறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியின் மூன்றாண்டுக்கொருமுறையான மதிப்பீடுகளையும் வருடாந்த ஒதுக்கீடுகளையும், அவற்றுடன் சேர்த்து முற்போந்த பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்ட எவையேனும் தீர்மானங்களையும் அந்தப் பல்கலைக்கழகத்தின், சிறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியின் ஆளும் அதிகாரசபைக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்; அதன்மேல், அத்தகைய ஆளும் அதிகாரசபை ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டவாறான அல்லது திருத்தப்பட்டவாறான அத்தகைய மதிப்பீடுகளையும் ஒதுக்கீடுகளையும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், 100 ஆம் பிரிவின் (2) உட் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அத்தகைய ஆளும் அதிகாரசபை, ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் ஒருசெலவினத் தலைப்பின்கீழ் குறித்தொதுக்கப்பட்ட பணங்களை வேறேதேனும் தலைப்புக்கு மாற்றலாம்:

ஆயின், மேலும், அத்தகைய ஒவ்வொரு மாற்றமும் அதன்பின்னர் கூடியவரை விரைவாக, விடயத்துக்கேற்றவாறு, அப்பல்கலைக்கழகத்தின், சிறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது அப்பல்கலைக்கழகக் கல்லூரியின் பிரதான நிறைவேற்று அலுவலரால் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

குறைநிரப்பு மதிப்பீடுகள்.

**105.** அவசியம் ஏற்படும்போதும், எதிர்பாராச் செலவுகளுக்கு ஈடுகொடுப்பதற்காகவும், செலவினங்களின் குறைநிரப்பு மதிப்பீடுகளை, விடயத்துக்கேற்றவாறு, ஒரு பல்கலைக்கழகத்தின், அல்லது சிறந்த பல்கலைக்கழகத்தின் நிதியாளர் அல்லது ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் பொருளாளர் தயாரித்தலும் அத்தகைய மதிப்பீடுகளை அப்பல்கலைக்கழகத்தின், சிறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது அப்பல்கலைக்கழகக் கல்லூரியின் ஆளும் அதிகாரசபை நிறைவேற்றுதலும் எக்காலத்திலும் சட்டமுறையானதாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய குறைநிரப்பு மதிப்பீடுகள், அடுத்து வரவுள்ள ஆண்டுக்குரிய வருடாந்த ஒதுக்கீடுகளுடன் சேர்த்து, அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்காக ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், மேலும், அத்தகைய குறைநிரப்பு மதிப்பீடுகள், நிதி ஆண்டுக்குப் பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்பட்ட மானியத்தை விஞ்சுதலாகாது என்பதுடன், மீளவரும் தன்மையதான நிதிப் பொறுப்பு எதுவும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் வழங்கப்பட்டதான அமைச்சரின் முன்னங்கீகாரமின்றி, உறப்படுத்தலுமாகாது.

கணக்குகளையும் புள்ளிவிவரங்களையும் பற்றிய ஆண்டுக் கூற்று.

**106.** (1) உயர் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றும், அதன் அலுவல்கள் தொடர்பில், கணக்குகளையும் புள்ளி விவரங்களையும் பற்றிய ஆண்டுக்கூற்றொன்றை, ஆணைக்குழு காலத்துக்குக் காலம் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய படிவத்திலும் முறையிலும், அத்தகைய விவரங்களைக் கொண்டதாகவும், தயாரித்தல் வேண்டும்.

(2) ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்கள் அந்த நிறுவனத்தின் அலுவலகத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

107. (1) (அ) உயர் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றும், ஒவ்வோராண்டும் அதன் கணக்குகளைக் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வித்தல் வேண்டும். அத்தகைய கணக்குகளைக் கணக்காய்வதில் அவருக்கு உதவும் நோக்கத்திற்காக, கணக்காய்வாளர் தலைமையதிபதி, தகைமைபெற்ற எவரேனும் கணக்காய்வாளரின் அல்லது கணக்காய்வாளர்களின் சேவைகளைப் பயன்படுத்தலாம்; அவர்கள் அவரின் பணிப்பின்கீழும், கட்டுப்பாட்டின்கீழும், செயலாற்றுதல் வேண்டும். கணக்காய்வு.

(ஆ) உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் ஒவ்வொரு நிதியாண்டுக்குமுரிய கணக்குகள், அந்நிதியாண்டு முடிவடைந்த பின்னரான நான்கு மாதங்களுக்குள், கணக்காய்வுக்காக, பிரதான நிறைவேற்று அலுவலரினால் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) கணக்காய்வாளர் தலைமையதிபதியும், ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் கணக்குகளைக் கணக்காய்வதில் அவருக்கு உதவியளிக்கும் எவரேனும் ஆளும், கணக்காய்வு செய்யும் நோக்கத்துக்கு அவசியமானவையெனக் கணக்காய்வாளர் தலைமையதிபதி கருதக்கூடியவையான, அந்த நிறுவனத்தின் அத்தகைய எல்லாப் புத்தகங்கள், பதிவேடுகள், உறுதிகள், உடன்படிக்கைகள், உறுதிச்சீட்டுகள், வேறு ஆவணங்கள் ஆகியவற்றைப் பார்வையிடக் கூடியவராகவிருத்தல் வேண்டும்; அத்துடன் அவர்களுக்கு, அத்தகைய நோக்கத்துக்காகத் தேவைப்படக்கூடியதும், அந்நிறுவனத்தினதும் அதன் அலுவலர்களினதும் அறிவுக்குப்பட்டதுமான அத்தகைய தகவல், அந்நிறுவனத்தாலும் அதன் அலுவலர்களாலும் கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

(3) ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதில் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் உறப்பட்ட செலவுகளுக்கு ஈடுகொடுக்கும் நோக்கத்துக்காக, அமைச்சர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய ஊதியம், அந்த நிறுவனத்தின் பல்கலைக்கழக நிதியத்திலிருந்து கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும். ஓர் உயர் கல்வி நிறுவனத்திடமிருந்து கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் பெறப்பட்ட ஊதியம் எதுவும், அத்தகைய கணக்காய்வு செய்யும் நோக்கத்திற்காக அவரால் சேவைக்கமர்த்தப்பட்ட எவரேனும் தகைமைபெற்ற கணக்காய்வாளருக்கு அல்லது கணக்காய்வாளர்களுக்கு அவர் கொடுத்த எவையேனும் பணத்தொகைகளைக் கழித்ததன் பின்னர், திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, " தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்ற சொல்லமைப்பு—

(அ) இலங்கையின் வரையறுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் ஓர் உறுப்பினராகவிருப்பதோடு, கணக்காளராகத் தொழில்புரியவென அந்நிறுவகத்தின் பேரவையால் வழங்கப்பட்ட சான்றிதழையுடைய வருமான தனியாள் ஒருவர் என்று பொருளாகும் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமத்தின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கையின் வரையறுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருப்பதோடு கணக்காளராகத் தொழில்புரியவென அந்நிறுவகத்தின் பேரவையால் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழையுடையவராகவுமிருக்கின்றாரோ அந்த வரையறுபெற்ற கணக்காளர் குழுமம் என்று,

பொருளாகும்.

(5) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் உயர்கல்வி நிறுவனத்தின் கணக்குகள், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுவதற்கும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) (அ) கணக்காய்வாளர் தலைமையதிபதி, ஒழுங்கற்றது அல்லது சட்டத்துக்கு முரணானது எனத் தாம் கருதுகின்ற கணக்குவிடயம் ஒவ்வொன்றையும் அனுமதிக்க மறுத்து, அத்தகைய கொடுப்பனவைச் செய்யும் அல்லது அத்தகைய கொடுப்பனவைச் செய்ய அதிகாரமளிக்கும் அலுவலரின், ஆசிரியரின், அல்லது ஊழியரின் பேரில் அத்தகைய கணக்கு விடயத்தை மேலதிக அறவீடாக விதித்தல் வேண்டும் ; அத்துடன், அத்தகைய அலுவலரால், ஆசிரியரால் அல்லது ஊழியரால் கணக்கிற்காட்டப்பட வேண்டியதும், ஆனால், அவ்வாறு கணக்கிற் காட்டப்படாததுமான எந்தவொரு பணத்தொகையையும் அவ் அலுவலரிடமிருந்து, ஆசிரியரிடமிருந்து அல்லது ஊழியரிடமிருந்து அறவிடுதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய சந்தருப்பம் ஒவ்வொன்றிலும் கணக்காய்வாளர் தலைமையதிபதி அத்தகைய ஆளிடமிருந்து பெறப்படவேண்டிய தொகையையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) வின் கீழ் உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் அலுவலருக்கெதிரான, ஆசிரியருக்கெதிரான அல்லது ஊழியருக்கெதிரான ஏதேனும் மேலதிக அறவீட்டை அல்லது அனுமதி மறுப்பை உறுதிப்படுத்துமுன், கணக்காய்வாளர் தலைமையதிபதி, கருதப்பட்ட அத்தகைய மேலதிக அறவீடு அல்லது அனுமதி மறுப்புப் பற்றி அத்தகைய ஆளுக்கு அறிவித்தல் அளித்தல் வேண்டும் ; அத்துடன், அத்தகைய ஆளுக்கு, அத்தகைய மேலதிக அறவீட்டுக்கு அல்லது அனுமதிமறுப்புக்கு எதிராக அவர் முறைப்பாடுகள் செய்வதற்கு அல்லது நியாயங்கள் எடுத்துக்கூறுவதற்கு உரிமையுண்டு என்பது பற்றியும் அறிவித்தல் வேண்டும் :

அத்துடன், அத்தகைய அறிவித்தல் அனுப்பப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குக் குறையாமல், அத்தகைய முறைப்பாடுகளுக்குச் செவிமடுப்பதற்கும் அவற்றை விசாரிப்பதற்குமான ஒரு நேரத்தையும் இடத்தையும் நிருணயித்தல் வேண்டும் ; அத்துடன், அத்தகைய செவிமடுத்தலும் விசாரணையும் முடிவடைந்தபின்னர், கணக்காய்வாளர் தலைமையதிபதி அம்முறைப்பாட்டின் மெய்யது அவை பற்றிய தமது முடிவைச் செய்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய முடிவுக்கான காரணங்கள் பற்றி அத்தகைய ஆளுக்கும், விடயத்துக்கேற்றவாறு, பல்கலைக்கழக அல்லது இறந்த பல்கலைக்கழகப் பதிவாளருக்கும் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரிச் செயலாளருக்கும் அறிவித்தலும் வேண்டும்.

(இ) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் முடிவினால் இன்னலுறும் எவரேனும் ஆள், அத்தகைய முடிவுபற்றி அத்தகைய ஆளுக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் பதினைந்து நாட்களுக்குள் அதற்கு எதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம் :

ஆயின், எவ்வாறாயினும், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கருதப்பட்ட மேலதிக அறவீடு அல்லது அனுமதிமறுப்பு பற்றி அறிவிக்கப்படுவதன்மேல் எவரேனும் ஆள், (ஆ) என்னும் பந்தியின்கீழ், அத்தகைய மேலதிக அறவீடு பற்றி அல்லது அனுமதி மறுப்புப்பற்றி கணக்காய்வாளர் தலைமையதிபதியின் முன்னரான ஏதேனும் விசாரணையில் அல்லது செவிமடுத்தலில் சமுகமாகவிருக்க அல்லது பங்குபற்ற மறுத்தால் அல்லது அசட்டை செய்தால், அவர், இப்பந்தியின் கீழ ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்வதற்கு உரித்துடையவராதலாகாது.

(ஈ) பந்தி (இ) யின்கீழ் ஏதேனும் மேன்முறையீட்டைப் பெற்றதன்மேல், ஆணைக்குழு அத்தகைய மேன்முறையீட்டை ஆராய்ந்து—

(i) விடயத்தின் சந்தருப்பங்களுக்கேற்ப, அத்தகைய மேலதிக அறவீட்டை அல்லது அனுமதிமறுப்பை நிறைவேற்றுதுவிடுதல் நீதியானதும் நியாயமானதுமாகுமென அது கருதினால், அத்தகைய கட்டளையை ஆக்குதல் வேண்டும் ; அல்லது

(ii) அத்தகைய மேலதிக அறவீட்டுத் தொகையை அல்லது அனுமதிமறுப்புத் தொகையை வேறுபடுத்தல் வேண்டும் அல்லது உறுதிப்படுத்தல் வேண்டும் ; அத்துடன்

(iii) அத்தகைய மேலதிக அறவீடு அல்லது அனுமதிமறுப்புத் தொடர்பாக, கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் உற்பட்ட செலவுத்தொகைகள் பற்றி ஒரு கட்டளையை ஆக்குதல் வேண்டுமெனபதுடன், அத்தகைய ஆளுக்கும் விடயத்துக்கேற்றவாறு, சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக அல்லது இறந்த பல்கலைக்கழகப் பதிவாளருக்கும் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியின் செயலாளருக்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் அத்தகைய முடிவு பற்றி அறிவித்தலும் வேண்டும்.

(உ) எவரேனும் ஆளுக்கு எதிரான ஒரு மேலதிக அறவீடு அல்லது அனுமதிமறுப்பு, கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் உறுதிப்படுத்தப்படுமிடத்து அத்தகைய உறுதிப்படுத்தலானது அல்லது, பணத்தொகை தொடர்பில, (ஈ) என்னும் உட்பிரிவின் (ii) ஆம் பந்தியின் கீழ் ஆணைக்குழுவால் வேறுபடுத்தப்பட்ட அத்தகைய உறுதிப்படுத்தலானது அதன்கண் கூறப்பட்ட விடயங்களுக்கு முதற்றோற்றவளவிலான எண்பிப்பாக இருக்கும்.

(ஊ) (i) (ஈ) என்னும் பந்தியின்கீழ் ஒரு மேன்முறையீடு ஆணைக்குழுவினால் உறுதி செய்யப்பட்டுள்ளவிடத்து ; அல்லது

(ii) (இ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தின்கீழ் எவரேனும் ஆளுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமை இல்லாதவிடத்து,

அறவிடப்படுதல் வேண்டுமென அத்தகைய ஏதேனும் உறுதிப்படுத்தலினால் பணிக்கப்பட்ட தொகையையும் அத்துடன் சேர்த்து, அறவிடப்படல் வேண்டுமெனக் கட்டளையிடப்பட்ட செலவுத் தொகையையும் அறவிடுவதற்கு பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது அத்தகைய அலுவலரால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், அத்தகைய மேலதிக அறவீடு விதிக்கப்பட்ட பின்னர் மூன்று மாதங்களுக்குள் அல்லது ஆணைக்குழுவின் முடிபு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்காதவிடத்து அல்லது கொடுப்பதற்கு உடன்பாடில்லை செய்யப்பட்டிருக்காதவிடத்து, தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுடைய ஒரு நீதிமன்றத்தில் அத்தகைய மேலதிக அறவீடு அல்லது அனுமதிமறுப்பு எந்த ஆளுக்கு எதிராக உறுதிசெய்யப்பட்டுள்ளதோ அந்த ஆளுக்கெதிராக வழக்குத் தொடுத்தல் வேண்டும்.

கணக்காய்வாளரின் அறிக்கை.

108. (1) கணக்காய்வாளர் தலைமையதிபதி உயர் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றின் கணக்குகளையும் பரிசோதித்து—

(அ) அவருக்குத் தேவைப்பட்ட எல்லாத் தகவல்களையும் விளக்கங்களையும் பெற்றாரா அல்லரா என்பதைக் கூறுவதும்;

(ஆ) தமது அறிக்கையிற் குறிப்பீடு செய்யப்பட்ட கணக்குகள், அந்த உயர் கல்வி நிறுவனத்தின் நிதி நிலைமையைப் பற்றிய உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை விளக்குவனவாகத் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதைக் கூறுவதும் ; அத்துடன்

(இ) அந்த உயர் கல்வி நிறுவனத்தின் அலுவல்களினதும் கணக்குகளினதும் பரிசோதனை எதிலும் பாராளுமன்றம் அக்கறைகொள்ளக்கூடுமென்று தாம் அபிப்பிராயப்படும் கணக்குப் பற்றிய ஏதேனும் விடயத்திற்குக் கவனத்தை ஈர்க்கின்றதும்

ஆன அறிக்கையொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) கணக்காய்வாளர் தலைமையதிபதி உயர் கல்வி நிறுவனமொன்று தொடர்பிலான தமது அறிக்கையினை அந்த உயர்கல்வி நிறுவனத்துக்கும், ஆணைக்குழுவுக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை, அந்த உயர் கல்வி நிறுவனத்தினை ஆளும் அதிகாரசபையால் பரிசீலனை செய்யப்படல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு பரிசீலனை செய்த பின்னர், அந்த உயர் கல்வி நிறுவனம் அத்தகைய அறிக்கையிற் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள அல்லது எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு, அத்தகைய அறிக்கை அந்த உயர் கல்வி நிறுவனத்துக்கும், ஆணைக்குழுவுக்கும் அனுப்பப்பட்டதில் இருந்து மூன்று மாதங்களுக்குள், அறிவித்தலும் வேண்டும்.

109. ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் ஒவ்வொரு நிதி ஆண்டுக்குமான கணக்குகள், கணக்காய்வு செய்யப்பட்டபின், கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும். கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளை வெளியிடுதல்.

110. உயர் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றும், ஒவ்வோராண்டு தொடர்பிலும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையைப் பெற்றபின்னர், மூன்று மாதங்களுக்குள், அத்தகைய அறிக்கையையும், அத்தகைய அறிக்கை பற்றி ஆளும் அதிகாரசபை ஆக்கிய குறிப்புரைகளையும், அவற்றுடன் சேர்த்து அவ்வறிக்கை தொடர்புபட்ட கணக்குக் கூற்றையும், அமைச்சருக்கும், ஆணைக்குழுவுக்கும் அனுப்புதல் வேண்டும்; அவ்வமைச்சர், அவற்றின் படிகளை, அத்தகைய கணக்குகளும் அறிக்கையும் எவ்வாண்டு தொடர்புபட்டனவோ அவ்வாண்டை அடுத்துவரும் ஆண்டு முடிவடைவதன் முன்னர், பாராளுமன்றத்தின் முன்னர் சமர்ப்பிக்கப்படச் செய்தல் வேண்டும்; அத்துடன், அந்த உயர் கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலர் பாராளுமன்றத்தின் பகிரங்க கணக்குகள் குழு முன்னர் சமுகமளித்து அதுதொடர்பில் எழும் எவையேனும் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். வருடாந்தக் கணக்குகளும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையும் அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

111. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம், (4) ஆம், (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளும், 15 ஆம் பிரிவின் ஏற்பாடுகளும், ஏற்ற மாற்றங்களுடன், ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தின் கணக்காய்வுக்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும். 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தினைக் குறித்த சில ஏற்பாடுகள்.

## பாகம் XIV

### மாணவர் அவைகளும் சங்கங்களும்

112. (1) ஒவ்வோர் உயர் கல்வி நிறுவனத்திலும் மாணவர் அவை ஒன்று இருத்தல் வேண்டும்; அதில், அந்த உயர் கல்வி நிறுவனத்தில் அப்போதைக்கு மாணவர்களாகவுள்ள ஆட்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர் பிரதிநிதிகள் அடங்கியிருத்தல் வேண்டும். மாணவர் அவை.

(2) மாணவர் அவைக்கான தேர்தல் ஒவ்வொன்றும், ஒவ்வொரு கல்வி ஆண்டின் தொடக்கத்திலும், சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரால்

பெயர் குறித்து நியமிக்கப்படக் கூடிய அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால் இரகசிய வாக்குச்சீட்டு மூலம் நடாத்தப் படுதல் வேண்டும்.

(3) மாணவர் அவையொன்றின் பதவிக்காலமானது மாணவ அவை தெரிவு செய்யப்பட்ட கல்வி ஆண்டின் முடிவில், முடி வடைதல் வேண்டும்.

மாணவர் அவை யின் பதவி வகிப்போர்கள்.

113. (1) மாணவர் அவை ஒவ்வொன்றும், அதன் உறுப்பி னர்களிலிருந்து ஒரு தலைவரையும், ஒரு துணைத்தலைவரையும், ஒரு செயலாளரையும், ஒரு கனிட்டப் பொருளாளரையும் தெரிவு செய்தல் வேண்டும்; அவர்கள், மாணவர் அவையில் பதவி வகிப்போர்களாதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு மாணவர் அவையினாலும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஓர் ஆசிரியராகவும், அத்தகைய அவை, எந்த உயர் கல்வி நிறுவனத்தைச் சார்ந்ததோ அந்த உயர் கல்வி நிறுவனத் தின் பிரதான நிறைவேற்று அலுவலரால் அவரது நியமனமானது அங்கீகரிக்கப்பட்டவராகவுமுள்ள ஒரு சிரேட்ட பொருளாளரை ஒவ் வொரு மாணவர் அவையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) மாணவர் அவையொவ்வொன்றும், அதன் அலுவலை நடாத்தும் நோக்கத்துக்காக, கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக் கப்படக்கூடிய அத்தகைய நிலையியற் குழுவை அல்லது குழுக்களை நியமிக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், எதேனும் மாணவர் அவையின் தலைவர் அல்லது செயலாளர் அத்தகைய எதேனும் நிலையியற் குழுவின் அல்லது குழுக்களில் உறுப்பினராதலாகாது.

மாணவர் அவை, இணைப்பு எதனையும் கொண்டிருத்த லாகாது

114. மாணவர் அவையொன்று, அது எந்த உயர் கல்வி நிறுவனத்தைச் சார்ந்ததோ அந்த உயர் கல்வி நிறுவனத்துக்கு வெளியேயுள்ள எதேனும் அமைப்போடு அல்லது குழுவோடு இணைப்பு எதனையும் கொண்டிருத்தலாகாது.

குறித்த சில ஒன்றியங்களையும் கழகங்களையும் வேறு சங்கங் களையும் அங்கீ கரித்தல்.

115. (1) ஓர் உயர் கல்வி நிறுவனம், ஆணைக்குழுவின் ஒருப் பாட்டோடு, கல்வி அல்லது சமூகக் குறிக்கோள்களை அடையும் ஒரே நோக்கத்துக்காக மாத்திரம் நிறுவப்பட்டதான, அந்நிறு வனத்தின் மாணவர்களது எதேனும் ஒன்றியத்தை, கழகத்தைச் அல்லது வேறு சங்கத்தை, அங்கீகரிக்கலாம்; ஆயின், அத்த கைய ஒன்றியத்தின், கழகத்தின் அல்லது எதேனும் சங்கத்தின் உறுப்பாண்மை அந்நிறுவனத்தின் மாணவர்களை மாத்திரமே கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

(2) நூற்றுப்பதினேழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபை, (1) ஆம் உட்பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றியங்களையும் கழகங்களையும் வேறு சங்கங்களையும் பதிவு செய்யும் முறையை யும், அவற்றின் பணிகளையும் அவற்றின் பதவிவகிப்போரை நிய மித்தலுக்கான தேர்தல்களை நடாத்தும் முறையையும், அத்த கைய பதவி வகிப்போரின் கடமைகளையும், பணிகளையும் துணை விதிகளின் மூலம் விதித்துரைக்கலாம்.

ஆளும் அதிகார சபை, அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பாடுகளுக்காக மாணவர் அவைக்குப் பணம் ஒதுக்குதல் வேண்டும்.

**116.** சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபை, 115 ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மாணவர் அவைக்கு அல்லது அத்தகைய நிறுவனத்தின் ஏதேனும் ஒன்றியத்துக்கு, கழகத்துக்கு அல்லது ஏதேனும் சங்கத்துக்கு, அங்கீகாரமளிக்கப்பட்ட அவர்களின் தொழிற்பாடுகளுக்காக, அவசியமானவையென அத்தகைய ஆளும் அதிகாரசபை கருதக்கூடிய அத்தகைய பணத்தொகைகளைக் காலத்துக்குக் காலம் ஒதுக்கீடு செய்யலாம்.

ஆணைக்குழு, மாணவர் அவையின் அமைப்பையும் கடமைகளையும், பணிகளையும், அதில் பதவி வகிப்போரையும் விதித்துரைத்தல் வேண்டும்.

**117.** ஆணைக்குழு கட்டளைச்சட்டத்தினால் பின்வருவனவற்றை விதித்துரைத்தல் வேண்டும் :—

(i) மாணவர் அவையின் கடமைகளும், பணிகளும் ;

(ii) ஒவ்வொரு மாணவர் அவையாக அமையும் மாணவர் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும், அவர்கள் தெரிவு செய்யப்படும் முறையும் ;

(iii) ஒரு மாணவர் அவை நியமிக்கக்கூடிய நிலையியற் குழுவும் அல்லது குழுக்களும், அத்தகைய குழுவின் அல்லது குழுக்களின் கடமைகளும் பணிகளும் ;

(iv) மாணவர் அவையின் தலைவர், துணைத்தலைவர், செயலாளர், கனிட்டப் பொருளாளர் ஆகியோரது தத்துவங்களும் பணிகளும் ;

(v) மாணவர் அவைக்கும், 116 ஆம் பிரிவின் கீழான ஏதேனும் ஒன்றியத்திற்கும், கழகத்திற்கும் அல்லது வேறு சங்கத்திற்கும் ஒதுக்கப்பட்ட நிதிகள் எந்நோக்கத்திற்காக அல்லது எந்நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது ; அத்துடன்

(vi) மாணவர் அவையினதும், ஏதேனும் ஒன்றியத்தினதும், கழகத்தினதும் அல்லது வேறு சங்கத்தினதும் கணக்குகள் பேணப்படவேண்டியதும் கணக்காய்வு செய்யப்பட வேண்டியதுமான முறையும் விதமும்.

ஒரு மாணவர் அவையை, ஒன்றியத்தை, கழகத்தை அல்லது வேறு சங்கத்தை நிறுத்திவைத்தல் அல்லது கலைத்தல்.

**118.** (1) ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் ஏதேனும் மாணவர் அவை அல்லது ஒன்றியம் அல்லது கழகம் அல்லது வேறு சங்கம், அந்நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரின் அபிப்பிராயத்தில், அந்நிறுவனத்தின் நற்பெயருக்குத் தீங்கு விளைவிப்பதாக அல்லது பங்கமுண்டாகும் வகையில் நடந்துகொண்டால், அல்லது இச்சட்டத்தை அல்லது ஏதேனும் தோதான சாதனத்தை மீறிச் செயலாற்றினால், அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலர், விடயத்திற்கு ஏற்ப, அத்தகைய மாணவர் அவையை, ஒன்றியத்தை, கழகத்தை அல்லது வேறு சங்கத்தை நிறுத்திவைக்கலாம் அல்லது கலைக்கலாம்.

(2) ஏதேனும் மாணவர் அவை ஓராம் உட்பிரிவின்கீழ் கலைக்கப்பட்டுள்ளவிடத்து, பிரதான நிறைவேற்று அலுவலர், 112 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாகப் புதிய மாணவர் அவையொன்றைத் தெரிவுசெய்யும் நோக்கத்துக்காகத் தேதியொன்றை நிர்ணயிக்கலாம். அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட புதிய மாணவர் அவை எந்தக் கல்வியாண்டில் தெரிவுசெய்யப்பட்டதோ அந்தக் கல்வியாண்டு முடிவடையும்வரை பதவிவகித்தல் வேண்டும்.

## பாகம் XV

### வீடமைப்பு, நகரச் சீர்திருத்தக் கட்டளைச்சட்டம் ஏற்புடையதாதல்

உயர் கல்வி நிறுவனமொன்றின் எல்லைகளுக்குள் உள்ள அல்லது அந்த எல்லைக்கு அண்மையிலுள்ள இடப்பரப்புகளுக்கு 268 ஆம் அத்தியாயம் ஏற்புடையதாதல்.

119. (1) வீடமைப்பு, நகரச் சீர்திருத்தக் கட்டளைச்சட்டத்திலுள்ள எதுவும் எவ்விதமிருப்பினும், உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் எல்லைகளிலுள்ள வசதிகளைப் பாதுகாப்பதற்கு ஆணைக்குழுவின் விதப்புரையின்பேரிலும், உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரோடு கலந்தாலோசித்த பின்னரும், அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அக்கட்டளைச்சட்டத்தின் II ஆம் பாகத்தின் I ஆம் அத்தியாயம் இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட திரிபுகளுக்கு அமைவாக, வேறுவகையில் அக்கட்டளைச்சட்டம் ஏற்புடையதாகாததும் அத்தகைய அறிவிப்பிற் குறித்துரைக்கப்பட்டதும் உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் எல்லையிலுள்ளதும் அல்லது அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தின் எல்லைகளுக்கு அண்மையிலுள்ளதுமான ஏதேனும் நிலப் இடப்பரப்புக்கு, அவ்விடப்பரப்பு உள்ளூரதிகாரசபையொன்றின் எல்லைகளுக்குள் அடங்கியுள்ள இடப்பரப்பு என்றாற் போன்று, ஏற்புடையதாதல் வேண்டுமென வெளிப்படுத்தல் உசிதமானதென அமைச்சர் கருதினால், அவ்வாறு செய்தல் அமைச்சருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் அறிவித்தல் வெளியிடப்பட்டதன்மேல், அதற்கிணங்க, சொல்லப்பட்ட அத்தியாயமானது பின்வரும் திரிபுகளுக்கமைவாக ஏற்புடையதாதல் வேண்டும் :—

(i) " தவிசாளர் " என்ற சொல், அதனகண தோன்றுமிடமெல்லாம், அதற்குப் பதிலாக " பிரதான நிறைவேற்று அலுவலர் " என்ற சொற்கள் இடப்படுதல் வேண்டும் ;

(ii) அதிலுள்ள 7 ஆம் பிரிவுக்குப் பதிலாக, பின்வரும் பிரிவு இடப்படுதல் வேண்டும் :—

" எந்தச் சூழ்நிலைகளில் அங்கீகாரம் அல்லது இசைவு மறுக்கப்படலாம் என்பது.

7. ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலர் தமது அபிப்பிராயப்படி, அந்த உயர் கல்வி நிறுவனத்தின் எல்லையின் அண்மையிலுள்ள வசதிகளை ஊறுபடுத்தக்கூடிய அத்தகைய தன்மையதாக அக்கட்டிடம் அல்லது அக்கட்டிடத்தில் செய்யப்படும் மாற்றம் இருந்தாலன்றி, அல்லது அத்தகைய அங்கீகாரத்துக்கான அல்லது இசைவுக்கான விண்ணப்பம், 8 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டுள்ள ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறினாலன்றி—

(அ) ஏதேனும் கட்டிடத்திற்கான ஏதேனும் மாதிரிப் படத்தை, வரை படத்தை அல்லது அளவுக்குறிப்பீட்டை அங்கீகரிப்பதற்கு ; அல்லது

(ஆ) ஏதேனும் கட்டிடத்தில் ஏதேனும் மாற்றஞ் செய்யப்பட இசைவதற்கு,

மறுத்தலாகாது. " ;

(iii) அதன் 8 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தி இடப்படுதல் வேண்டும் :—

“ (அ) பிரதான நிறைவேற்று அலுவலரால் விதித்துரைக்கப்படக் கூடியவாறுள்ள அத்தகைய படிவத்தில் இருப்பனவும், அத்தகைய விவரங்களைக் கொண்டவையுமான மாதிரிப் படங்களையும், வரைபடங்களையும், அளவுக் குறிப்பீடுகளையும் சமர்ப்பித்தல் ; ” ;

(iv) அதன் 8 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தி இடப்படுதல் வேண்டும் :—

“ (ஆ) அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் மாதிரிப் படத்தை, வரைபடத்தை அல்லது அளவுக்குறிப்பீட்டை, அத்தகைய படிவத்திற்கு இணங்கியதாக ஆக்கும் வகையில் அல்லது அத்தகைய விவரங்களை எவற்றையும் கொண்டதாகவிருக்கும் வகையில், திருத்துதல் ; ” ;

(v) அதன் 8 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியில் “ கட்டளைச் சட்டத்தின் ” என்னும் சொல்லுக்குப் பதிலாக “ இந்த அத்தியாயத்தின் ” என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும் ;

(vi) அதன் 13 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்திக்குப் பதிலாக, பின்வரும் பந்தி இடப்படுதல் வேண்டும் :—

“ (இ) இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளுள் எதனையும் மீறும்வகையில் ஏதேனும் கட்டிட வேலையை நிறைவேற்றும் ; ” ;

(vii) அதன் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவு இடப்படுதல் வேண்டும் :—

“ (2) இப்பிரிவின் கீழ் எவரேனும் ஆள் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட வழக்கு எதிலும், நீதிவான், பிரதான நிறைவேற்று அலுவலரின் விண்ணப்பத்தின்பேரில், விதிப்பாணைக் கட்டளையொன்றை ஆக்கலாம் என்பதுடன், அக்கட்டளையில் வரையறுக்கப்பட்ட காலத்துக்குள் உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் வளவிலுள்ள வசதிகளுக்கு ஊறுசெய்யாதவாறு பிரச்சினைக்குரிய கட்டிடத்தைச் சிதைக்குமாறு அல்லது மாற்றஞ் செய்யுமாறு, அத்தகைய ஆளை அல்லது அக்கட்டிடத்தின் சொந்தக்காரரைத் தேவைப்படுத்தலாம்; அத்துடன், அத்தகைய விதிப்பாணைக் கட்டளைக்கு இணங்கியொழுகாத பட்சத்தில், அக்கட்டளைக்கு இணங்கியொழுகப்படச் செய்யும் அத்தகைய முறையில் அக்கட்டிடத்தைச் சிதைக்குமாறு, அதில் மாற்றஞ் செய்யுமாறு அல்லது வேறுவகையாக அதைக் கையாளுமாறு பிரதான நிறைவேற்று அலுவலருக்கு அதிகாரமளிக்கலாம் ; அத்துடன், அதன் மூலம் உற்பட்ட எவையேனும் செலவுகள், நீதிவானால் ஆக்கப்படும் கட்டளையின்மீது அவரால் விதிக்கப்பட்ட குற்றப்

பணம் அறவிடப்படும் அதே முறையில் அறவிடப்படுதல் வேண்டும் என்பதோடு, அறவிடப்பட்டதும், உயர் கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலருக்குக் கொடுக்கப்படுதலும் வேண்டும்.";

(viii) அதன் 15 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவு இடப்படுதல் வேண்டும் :—

"(1) இக்கட்டளைச்சட்டம் தொடங்கியதன் பின்னர் நிருமாணிக்கப்பட்ட கட்டிடம் எதிலும் அத்தகைய கட்டிடமானது, நிருமாணம், வடிகாலவசதி ஆகியவை தொடர்பிலும், வேறெல்லாவகைகளிலும், உயர் கலவி நிறுவனம் ஒன்றின் வளவிலுள்ள வசதிகளுக்கு ஊறு செய்யாதென, பிரதான நிறைவேற்று அலுவலர் அத்தாட்சிப்பத்திரமொன்றைக் கொடுக்கும்வரையில், காவற்பொறுப்பாளரைத் தவிர வேறெவரும் குடியிருத்தலாகாது." ; அத்துடன்

(ix) அதன் 16 ஆம் பிரிவில், மேன்முறையீட்டு நியாயசபை பற்றிய குறிப்பீடானது, சொல்லப்பட்ட இடப்பரப்பானது அமைந்துள்ள மாவட்டத்தில் நியாயாதிக்கம் கொண்டிருக்கும் மாவட்ட நீதிமன்றம் பற்றிய குறிப்பீடாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஓர் உயர் கலவி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு வழங்கப்பட்ட தத்துவங்கள் எவற்றையும் பிரயோகித்தல், ஆளும் அதிகாரசபையின் இசைவுக்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டும் ; அத்துடன், ஏதேனும் கட்டிடத்தின் ஏதேனும் மாதிரிப்படத்தை, வரைபடத்தை அல்லது அளவுக்குறிப்பீட்டை அங்கீகரிப்பதற்கு அல்லது உயர் கலவி நிறுவனத்தின் வளவிலுள்ள வசதிகளை ஊறுபடுத்தும் என்ற காரணத்தினால், சொல்லப்பட்ட இடப்பரப்பினுள் ஏதேனும் கட்டிடத்திலான மாற்றத்துக்கான இசைவினை அளிப்பதற்குப் பிரதான நிறைவேற்று அலுவலர் மறுக்குமிடத்து, அத்தகைய மறுப்பின் விளைவாக ஏதேனும் நட்டம் அல்லது இழப்பு அடையக் கூடிய ஆள் எவருக்கும், உயர் கல்வி நிறுவனம் அதற்கான நட்டஈடு வழங்குதல் வேண்டும் ; அத்தகைய நட்டஈடு வழங்குவதற்கு அல்லது போதுமான நட்டஈடு வழங்குவதற்கு உயர் கலவி நிறுவனம் தவறியதனால் இன்னலுறும் ஆளெவரும், அவ்விடப்பரப்பு அமைந்துள்ள மாவட்டத்தில் நியாயாதிக்கமுள்ள மாவட்ட நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம் ; அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின் மீதான மாவட்ட நீதிமன்றத்தின் முடிபு, முற்றானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

## பாகம் XVI

### அரசாங்கக் குடிமனைகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தை ஏற்புடையதாக்கல்

120. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தொன்பதாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அரசாங்கக் குடிமனைகள் (ஆட்சி மீளப் பெறுதல்) சட்டத்தின் ஏற்பாடுகள்— 1969 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தை, பல்கலைக்கழகக் குடிமனைகளுக்கு ஏற்புடையதாக்கல்.

(அ) இரண்டாம் உட்பிரிவிற் காட்டப்பட்டுள்ள திரிபுகளுக்கு அமைவாக, பல்கலைக்கழகக் குடிமனைகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பல்கலைக்கழகக் குடிமனைகள், ஆட்களால் ஆட்சிகொள்ளப் படுவதற்கான உட்கிடை நிபந்தனையாக, எக் காலத்தும் இருந்துள்ளனவாகவும், இருப்பனவாகவும், கருதப் படுதல் வேண்டும்.

(2) அரசாங்கக் குடிமனைகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தின் ஏற்பாடுகள், பல்கலைக்கழகக் குடிமனைகளுக்கு ஏற்புடையனவாதலில், அவற்றுக்கான திரிபுகள்—

(i) அச்சட்டத்தில் " அரசாங்கக் குடிமனை " என்னும் சொற்கள் தோன்றுமிடங்களிலெல்லாம் " பல்கலைக்கழகக் குடிமனைகள் " என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்;

(ii) அதன் 9 ஆம் பிரிவில்—

(அ) " தகுதிவாய்ந்த அதிகாரி " என்பதற்கான வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணம் இடப்படுதல் வேண்டும் :—

" தகுதிவாய்ந்த அதிகாரி " என்பது, இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு, ஆணைக்குழுவின் செயலாளர் என, அல்லது ஒரு தகுதிவாய்ந்த அதிகாரியாக இருப்பதற்கு, ஆணைக்குழுவின் செயலாளரால் அதிகாரமளிக்கப்பட்டவரான, விடயத்துக்கு ஏற்றவாறு, ஒரு பல்கலைக்கழகத்தின் பதிவாளர் என, அல்லது ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியின் செயலாளர் எனப் பொருள்படும் ; அத்துடன்

(ஆ) " அரசாங்கக் குடிமனைகள் " என்பதற்கான வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணம் இடப்படுதல் வேண்டும் :—

' " பல்கலைக்கழகக் குடிமனைகள் " என்பது, வதிதல் நோக்கத்துக்காக ஆட்சிகொள்ளப்பட்டதும் அல்லது பயன்படுத்தப் பட்டதும், எவரேனும் ஆளுக்கு, ஆணைக் குழுவால் அல்லது அதன் சார்பில்,

அல்லது ஒரு பல்கலைக்கழகத்தினால் அல்லது அதன் சார்பில் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியினால் அல்லது அதன் சார்பில் அளிக்கப்பட்டதுமான ஏதேனும் கட்டிடம், அறை அல்லது வேறு தங்கிடம் எனப் பொருள்படும் என்பதுடன், அத்தகைய கட்டிடம் அல்லது அறை அல்லது தங்கிடம் அமைந்துள்ள ஏதேனும் காணியையும் அல்லது வளவையும் உள்ளடக்கும்.'.

## பாகம் XVII

### பொது ஏற்பாடுகள்

ஆணைக்குழுவின், மேன்முறையீட்டுச் சபையின், அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் ஏதேனும் அதிகாரசபையின் அல்லது குழுவின் உறுப்பினர்களாக இருக்க முடியாமற் செய்யும் தகைமையீனங்கள்.

**121.** ஆளொருவர்,—

(அ) விடுவிக்கப்படாத வங்குரோத்தவராக அல்லது கடனிறுக்க வகையற்றவராகவிருப்பின் ; அல்லது

(ஆ) ஒழுக்கக்கேடாக அமையும் ஏதேனும் தவறுக்காக அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்படின் ; அல்லது

(இ) வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ், அவர் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின் ; அல்லது

(ஈ) ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தினால் அல்லது அதன் சார்பில், செய்யப்பட்ட அவரது ஊழிய ஒப்பந்தம் தவிர்ந்த வேறு ஏதேனும் ஒப்பந்தத்தின் கீழ், ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை, அவர், நேரடியாகவோ மறைமுகமாகவோ, தாமாகவோ அல்லது அவரின் சார்பில் அல்லது அவரது பயன்பாட்டுக்காக அல்லது நன்மைக்காக வேறு எவரேனும் ஆள் மூலமாகவோ உடையவராகவிருப்பின் அல்லது அனுபவிப்பவராக இருப்பின்,

அவர், ஆணைக்குழுவிற்கு, மேன்முறையீட்டுச் சபைக்கு, அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் ஏதேனும் அதிகாரசபைக்கு அல்லது ஏதேனும் குழுவிற்கு நியமிக்கப்படுவதற்கு, அல்லது அதன் உறுப்பினராகவிருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

ஆணைக்குழுவினதும், மேன்முறையீட்டுச் சபையினதும் உறுப்பினர்களும், பணியாட்டொகுதியினரும், உயர் கல்வி நிறுவனங்களின் பணியாட்டொகுதியினரும் பகிரங்கசேவையாளர்கள் எனக் கருதப்படுதல் வேண்டும்.

**122.** ஆணைக்குழுவினதும் மேன்முறையீட்டுச் சபையினதும் எல்லா உறுப்பினர்களும் பணியாட்டொகுதியினரும் ஒவ்வோர் உயர் கல்வி நிறுவனத்தினதும் பணியாட்டொகுதியின் எல்லா உறுப்பினர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக் குட்படவும், அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்கள் எனக் கருதப்படுதல் வேண்டும்.

**ஆணைக்குழுவும், மேன்முறையீட்டுச் சபையும், உயர் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றும், இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனங்களாதல் வேண்டும்.**

**123.** ஆணைக்குழுவும், மேன்முறையீட்டுச் சபையும், உயர் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றும், இலஞ்சச்சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட, அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனங்களாகக் கருதப்படுதல்வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

**துணைவேந்தர்கள், பணிப்பாளர்கள் குழு.**

**124.** பல்கலைக்கழகங்கள் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரிகளைப் பரிசீலனை செய்யும் நோக்கத்துக்காகவும், அத்தகைய விடயங்களில் ஆணைக்குழுவுக்கு ஆலோசனையளிப்பதற்காகவும் துணைவேந்தர்கள், பணிப்பாளர்கள் குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

**தேர்தல்கள், நியமனங்கள், முதலியனவற்றின் செல்லுபடியாந் தன்மை பற்றிய பிரச்சினைகள்.**

**125.** உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் ஏதேனும் அதிகாரசபையின் அல்லது வேறு குழுவின் உறுப்பினராக எவரேனும் ஆள் முறையாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளாரா, நியமிக்கப்பட்டுள்ளாரா, பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளாரா, அல்லது சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளாரா என்பது பற்றி, அல்லது எவரேனும் ஆள் உறுப்பினராகவிருப்பதற்கு உரித்துடையவரா என்பது பற்றி ஏதேனும் பிரச்சினை எழுந்தால், அப்பிரச்சினை ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுதல்வேண்டும்; அதன்மீதான ஆணைக்குழுவின் முடிவு, முற்றானதாதல் வேண்டும்.

**வெற்றிடங்கள் அல்லது குறைபாடுகள் தீர்மானங்களை அல்லது நடவடிக்கைகளைச் செல்லுபடியற்றனவாக்கச் செய்யாது.**

**126.** ஆணைக்குழுவின், மேன்முறையீட்டுச் சபையின் அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் ஏதேனும் அதிகாரசபையின் அல்லது வேறு குழுவின் செயல், தீர்மானம் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே ஒரு வெற்றிடம் அல்லது வெற்றிடங்கள் இருப்பதன் காரணமாக, அல்லது அத்தகைய உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு அல்லது எவையேனும் குறைபாடுகள் இருப்பதன் காரணமாக, அல்லது அதன் உறுப்பினரொருவர் அல்லது உறுப்பினர்களெவரேனும் 121 ஆம் பிரிவின்கீழ் தகைமையற்றிருப்பதன் காரணமாக மாத்திரம், செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

**கொடைகள் முதலியன.**

**127.** ஆணைக்குழு, மேன்முறையீட்டுச் சபை, அல்லது ஏதேனும் உயர் கல்வி நிறுவனம், அதன் உறுப்பினர்களுக்கு, அல்லது அதன் எவரேனும் உறுப்பினர்களிடையே, இச்சட்டத்திற்கு அல்லது ஏதேனும் தோதான சாதனத்துக்கு இணங்கவல்லாது, இறப்புப் பணிக்கொடைதவிர்ந்த ஏதேனும் மிகையூதியத்தை வழங்குதலோ அல்லது ஏதேனும் கொடையை அல்லது பணப்பகிர்தலைச் செய்தலோ ஆகாது.

ஒரு பல்கலைக்கழகம் அல்லாத வேறு ஆள் அல்லது குழு, பட்டங்கள் அளித்தல் அல்லது வழங்குதல் ஆகாது.

**128.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஒரு பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம் அல்லது 1968 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட புத்தசாவக தருமபீடம் அல்லாத ஆள் எவரும், நிறுவனம், கூட்டுத்தாபனம், அல்லது உயர் தொழிற் குழு அல்லது வேறு குழு எதுவும், எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு எவ்வகையினதுமான ஏதேனும் பட்டத்தையோ அல்லது வேறு எவையேனும் கல்விச் சிறப்புக்களையோ அளித்தலோ அல்லது வழங்குதலோ ஆகாது :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பல்கலைக்கழகத்தோடு ஒழுங்குகள் செய்யப்படுவதன் மூலமும், ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடனும், உயர்தொழிற் குழுக்களினால் அல்லது ஆராய்ச்சி நிறுவகங்களினால் கல்விச் சிறப்புக்கள் அளிக்கப்படலாம்.

(2) எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் நிறுவனத்தினால் அல்லது கூட்டுத்தாபனத்தினால் அல்லது உயர்தொழிற்குழுவினால் அல்லது வேறு குழுவினால், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஆள் அல்லது அத்தகைய நிறுவனத்தின், கூட்டுத்தாபனத்தின் அல்லது உயர்தொழிற் குழுவின் அல்லது வேறு குழுவின் ஆளும் அதிகாரி, உரிமையாளர், பணிப்பாளர் அல்லது அதன் முகாமைக்குப் பொறுப்பாகவுள்ள வேறு ஆள் அல்லது ஆட்கள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், ஒரு நீதிவானால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்பேரில், இருநூற்று ஐம்பது ரூபாகொண்ட குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

வேறு நிறுவனங்களை உயர் கல்வி நிறுவனத்துக்கு மாற்றுதல்.

**129.** (1) அமைச்சர், கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டோடு, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், உயர் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு அரசாங்கத்தால் பேணப்பட்டு, முகாமை செய்யப்படும் ஏதேனும் நிறுவனத்தை, பாடசாலையை அல்லது கல்லூரியை, அதிலுள்ள ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தோடு சேர்த்து, மாற்றலாம் ; அத்துடன், அத்தகைய நிறுவனத்தின், பாடசாலையின் அல்லது கல்லூரியின் ஏதேனும் அசைவற்ற ஆதனமானது காணி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அதேபோன்ற கட்டளைமூலம், அத்தகைய உயர் கல்வி நிறுவனத்துக்கு உரித்தாக்கப்படலாம்.

அத்தகைய கட்டளை வெளியிடப்படுவதன்மேல், அத்தகைய நிறுவனத்தின், பாடசாலையின் அல்லது கல்லூரியின், அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான ஆதனங்கள், அக்கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து உயர் கல்வி நிறுவனத்துக்கு உரித்தாதல் வேண்டும்.

**130.** (1) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, கசற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று அல்லது அதன்பின்னர், ஓர் உயர் கல்வி நிறுவனம் அல்லாத கல்வி நிறுவகம் எதுவும் "பல்கலைக்கழகம்" என்னுஞ் சொல் அடங்கியுள்ள ஒரு பெயர் கொண்டு அல்லது அப்பெயரின் கீழ் தாபிக்கப்படுதலோ அல்லது பேணப்படுதலோ ஆகாது.

"பல்கலைக்கழகம்" என்ற சொல்லைப் பயன்படுத்துவதன் மீதான மட்டுப்பாடுகள்.

(2) ஏதேனும் கல்வி நிறுவகம் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளவிடத்து, அந்த நிறுவகத்தின் ஆளும் அதிகாரசபை அல்லது உரிமையாளர் தவறென்றுக்குக் குற்றவாளியாதல்வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தேதியின்பின்னர், எந்த நாளின்போது "பல்கலைக்கழகம்" என்னுஞ் சொல்லானது அந்த நிறுவகத்தின் பெயராக அல்லது அதன் பெயரின் பாகமாகப் பயன்படுத்தப்பட்டதோ அந்த நாள் ஒவ்வொன்றுக்கும் நூறு ரூபாகொண்ட குற்றப்பணத்துக்கு ஆளாதலும்வேண்டும்.

(3) இப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகள், 1968 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட புத்த சாவக [illegible] பீடத்துக்கு ஏற்புடையனவாதல் ஆகாது.

## பாகம் XVIII

### சிறப்பு ஏற்பாடுகள்

**131.** (1) உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் வளவுகளில் எவரேனும் ஆள் சமூகமாயிருத்தல், அந்த நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபையின் அபிப்பிராயப்படி விரும்பத்தகாததாகவுள்ளவிடத்து, அந்த நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலர், அத்தகைய ஆளுக்கு, அவர் கூறுவனவற்றைச் செவிமடுக்க ஒரு வாய்ப்பினை அளித்த பின்னர், ஆளும் அதிகாரசபையின் இசைவுடன், அவரின் கைப்பட்டதும், அத்தகைய ஆளுக்குச் சேர்ப்பிக்கப்பட்டதுமான எழுத்து மூலமாக, அத்தகைய எழுத்திற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வளவினுள் அல்லது அதன் அத்தகைய பாகத்தினுள், உட்புகாது அல்லது தங்கியிராது அத்தகைய ஆளைத் தடைசெய்யலாம். அத்தகைய தடை, அத்தகைய ஆளும் அதிகாரசபையின் இசைவோடு, அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலரால் நீக்கப்படும்வரையில் வலுவிலுள்ளதாதலும் வலுவுள்ளதாகவிருத்தலும் வேண்டும்.

உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் வளவுகளுள், குறித்த சில ஆட்கள் புகுவதற்குள்ள தடை.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் வளவுக்குள் அல்லது அதன் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பாகத்துள், அந்த உயர் கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரின் கைப்பட்டுள்ள அத்தாட்சிப்பத்திரத்தில் பெயர் கூறப்பட்ட எவரேனும் ஆள் புகுதல் அல்லது தங்குதல் தடைசெய்யப்பட்டுள்ளதென்று, பொருள்பட்டதான அந்த அத்தாட்சிப்பத்திரம் மாறாக எண்பிக்கப்படும்வரை,

அத்தகைய அத்தாட்சிப்பத்திரத்திற் கூறப்பட்ட நிகழ்வுகள் பற்றிய சான்றாக அது ஒரு நீதிமன்றத்தால் பெறப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பிரதான நிறைவேற்று அலுவலரால் வழங்கப்பட்ட அத்தாட்சிப்பத்திரமாகக் கொள்ளப்படுவதும் அவரால் கையொப்பமிடப்பட்டதுமான ஓர் ஆவணம், சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதோடு, மாறாக எண்பிக்கப்படும்வரை, (2) ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகைய அலுவலரால் வழங்கப்பட்ட ஓர் அத்தாட்சிப் பத்திரமாகக் கருதப்படுதலும்வேண்டும்.

தடைக்குக் கீழ்ப்படியாமையாகிய தவறுக்கான தண்டம்.

132. உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் வளவினுள் அல்லது அதன் பாகத்தினுள் உட்புகாது அல்லது தங்கியிராது, 131 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தடைசெய்யப்பட்டவரும், நியாயமான காரணமின்றி, அத்தகைய தடையை மீறி அத்தகைய வளவினுள் அல்லது அதன் பாகத்தில் உட்புகுபவருமான அல்லது தங்கியிருப்பவருமான ஆளெவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், ஒரு நீதிவானால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், அவர் அத்தகைய வளவினுள் அல்லது அதன் பாகத்தினுள் உட்புகுந்துள்ள அல்லது தங்கியிருந்த நாள் ஒன்றுக்கு நூறு ரூபாக்கொண்ட குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

131 ஆம் பிரிவின் கீழான தவறுகள் பிடியாணையின்றிக் கைதுசெய்வதற்குரியனவாகவும் பிணையில் விடுப்பதற்குரியனவாகவும் இருத்தல் வேண்டும்.

133. நூற்று முப்பத்தோராம் பிரிவின்கீழான தவறொன்று, 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட பிடியாணையின்றிக் கைதுசெய்வதற்குரியதாகவும் பிணையில் விடுவிக்கப்படற்குரியதாகவும் இருத்தல் வேண்டும்.

## பாகம் XIX

### நியதிச்சட்டங்களும், துணைவிதிகளும், ஒழுங்குவிதிகளும், விதிகளும்

நியதிச்சட்டங்கள்.

134. (1) இச்சட்டத்தினதும், இதன்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகளினதும் கட்டளைச்சட்டங்களினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பின்வரும் கருமங்கள் எல்லாம் தொடர்பிலும் அல்லது அவற்றில் எது தொடர்பிலும், ஒரு பல்கலைக்கழகத்தின் மன்றினால் நியதிச்சட்டங்கள் ஆக்கப்படலாம் :—

(அ) வேறுவகையாக ஏற்பாடெதுவும் செய்யப்படாதவிடத்து, ஏதேனும் அதிகாரசபையிலுள்ள அல்லது வேறு குழுவிலுள்ள வெற்றிடங்களை நிரப்புதலும் அல்லது அவ்வதிகாரசபையை அல்லது குழுவைக் கூட்டுதலும் ;

(ஆ) வழங்கப்படவேண்டிய பட்டங்கள், டிப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புக்கள் ஆகியவை பற்றித் தீர்மானித்தல் ;

(இ) கௌரவப் பட்டங்களை வழங்குதல் ;

(ஈ) எவ்வகையிலுமான எம்முறையிலும் நிதிகள் அல்லது ஆதனம் ஏற்பாடுசெய்யப்படக்கூடிய ஆராய்ச்சிப்படிப்புப் பரிசில்களையும், புலமைப்பரிசில்களையும், புலமைப் பொருளுதவிகளையும், ஏழைக் கல்வியுதவிகளையும், பதக்கங்களையும் வேறு பரிசுகளையும் தாபித்தலும் வழங்குதலும் ;

(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், நியதிச்சட்டங்கள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்களும் ;

(ஊ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், நியதிச்சட்டங்கள்மூலம் விதித்துரைக்கப்படவேண்டிய, அல்லது விதித்துரைக்கப் படக் கூடிய எல்லாக் கருமங்களும்.

(2) ஒவ்வொரு நியதிச்சட்டமும், மன்றின் இசைவைப் பெற்றதும், கசற்றில் வெளியிடப்படுதல்வேண்டும் என்பதுடன், அதில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய தேதியன்று வலுவுக்கு வருதலும்வேண்டும்.

135. (1) இச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கும் இதனகீழ் ஆக்கப்பட்ட கட்டளைகளுக்கும், கட்டளைச்சட்டங்களுக்கும் நியதிச்சட்டங்களுக்கும் அமைவாக, பின்வரும் கருமங்கள் எல்லாம்தொடர்பிலும் அல்லது அவற்றுள் எதுதொடர்பிலும், உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் ஆளும் அதிகாரசபையினால் துணைவிதிகள் ஆக்கப்படலாம் :— துணைவிதிகள்.

(அ) எல்லாப் பட்டங்களுக்கும், டிப்புளோமாக்களுக்கும், சான்றிதழ்களுக்கும், வேறு கல்விச் சிறப்புகளுக்கும் விதித்துரைக்கப்பட்ட கற்கை நெறிகள் ;

(ஆ) பட்டங்களுக்கும், டிப்புளோமாக்களுக்கும், சான்றிதழ்களுக்கும், வேறு கல்விச் சிறப்புகளுக்குமென விதித்துரைக்கப்பட்ட கற்கை நெறிகளுக்கும், தேர்வுகளுக்கும், எந்த நிபந்தனைகளுக்கு அமைவாக மாணவர்கள் அனுமதிக்கப்படுதல்வேண்டும் என்பதும், எந்த நிபந்தனைகளுக்கு அமைவாக அத்தகைய கல்விச் சிறப்புகளுக்குத் தகுதியாவார்கள் என்பதும் ;

(இ) கற்கை நெறிகளுக்கும், தேர்வுகளுக்கும், உறைதலுக்கும், பட்டங்கள், டிப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை வழங்குதலுக்கும் அறவிடப்படவேண்டிய கட்டணங்கள் ;

(ஈ) மாணவர்களின் உறைவிடம் பற்றிய நிபந்தனைகளும், மாணவர்களின் ஒழுக்காறும் ;

(உ) வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டிராதவிடத்து, ஏதேனும் அதிகாரசபையின், அல்லது வேறு குழுவின் அமைப்பு, தத்துவங்கள், கடமைகள், பணிகள், அதன் உறுப்பாண்மையின் நியதிகள் ஆகியவை ;

(ஊ) பல்வேறு அதிகாரசபைகளுக்கும், வேறு ஒழுக்கனுக்கு மான பிரதிநிதிகளின் தேர்தலோடு தொடர்புபட்ட எல்லாக கருமங்களும் ;

(எ) தேர்வாளர்களின் நியமனத்துக்கான நிபந்தனைகளும் முறையும், அவர்களின் கடமைகளும் வேதனதிகளும், தேர்வுகளை நடாத்ததலும், அவற்றின் தரங்களைப் பேணலும் ;

(ஏ) இச்சட்டத்தின் அல்லது இதன் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டங்களினதும் நியதிச்சட்டங்களினதும் ஏற்பாடுகளின் கீழ் துணைவிதிகள் ஆக்கப்படுதல்வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்களும் ; அத்துடன்

(ஐ) இச்சட்டத்தின் அல்லது இதன் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டங்களினதும் நியதிச்சட்டங்களினதும் ஏற்பாடுகளின் கீழ், துணைவிதிகளினால் விதித்துரைக்கப்படவேண்டிய அல்லது ஏற்பாடு செய்யப்பட வேண்டிய அல்லது விதித்துரைக்கப்படக்கூடிய அல்லது ஏற்பாடு செய்யப்படக்கூடிய எல்லாக் கருமங்களும்.

(2) உயர் கல்வி நிறுவனமொன்றில் கற்பித்தலுடன் பற்றிய அல்லது அதன் தேர்வுகளுடன் பற்றிய அல்லது அதனோடு சம்பந்தமுடைய ஏதேனும் கருமம் தொடர்பிலான துணைவிதி எதுவும்; துணைவிதி வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டு, விடயத்துக்கு ஏற்றவாறு, அந்த நிறுவனத்தின் மூதவையால் அல்லது கல்விக் கூட்டவையால், அந்த நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய அதிகாரசபையினால் ஆக்கப்படுதலாகாது.

(3) உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் ஆளும் அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட துணைவிதி ஒவ்வொன்றும், அதிற் குறித்துரைக்கப்படும் அத்தகைய தேதியன்று வலுவுக்குவருதல்வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

136. இச்சட்டத்தினதும் இதன்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகளினதும், கட்டளைச்சட்டங்களினதும், நியதிச்சட்டங்களினதும், துணைவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஏதேனும் கல்வித்துறை விடயம் தொடர்பிலும், இப்போதுள்ள ஒழுங்கு விதியைத் திருத்துவதற்காகவும், விடயத்துக்கு ஏற்றவாறு, உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் மூதவையினால் அல்லது அதன் கல்விக் கூட்டவையினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

இப்பிரிவில் " கல்வித்துறை விடயம் " என்பது அத்தகைய மூதவையின் அல்லது கல்விக் கூட்டவையின் கட்டுப்பாட்டுக்கும் பொதுவான பணிப்புக்கும் அமைவாகவுள்ள ஏதேனும் விடயம் எனப் பொருள்படும்.

**137.** (1) இச்சட்டத்தினதும், ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஆணைக்குழுவும் மேன்முறையீட்டுச் சபையும், ஒரு பல்கலைக்கழகத்தின் ஏதேனும் அதிகார சபையும் அல்லது வேறு குழுவும்— விதிகள்.

(அ) இச்சட்டத்தின் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளின் கீழ், விதிகளினால் விதித்துரைக்கப்பட வேண்டிய அல்லது விதித்துரைக்கப்படக்கூடிய எல்லாக் கருமங்களுக்காகவும் ;

(ஆ) இச்சட்டத்தின் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளின் கீழ் எக்கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்படல்வேண்டுமோ அல்லது ஆக்கப்படுதற்கு அதிகாரமளிக்கப்படல்வேண்டுமோ அக்கருமங்கள் எல்லாவற்றுக்காகவும் ; அத்துடன்

(இ) ஆணைக்குழுவோடு, மேன்முறையீட்டுச் சபையோடு அல்லது ஒரு பல்கலைக்கழகத்தின் ஏதேனும் அதிகாரசபையோடு அல்லது வேறு குழுவோடு மாத்திரம் சம்பந்தமுடையனவும், இச்சட்டத்தினால் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தினால் ஏற்பாடுசெய்யப்படாதனவுமான வேறு எல்லாக் கருமங்களுக்காகவும்,

விதிகளை ஆக்கலாம்.

(2) ஆணைக்குழுவால், மேன்முறையீட்டுச் சபையால், அல்லது ஒரு பல்கலைக்கழகத்தின் ஏதேனும் அதிகாரசபையினால் அல்லது வேறு குழுவினால் ஆக்கப்பட்ட விதி எதுவும், அத்தகைய ஆணைக்குழுவால், மேன்முறையீட்டுச் சபையினால், அதிகாரசபையினால் அல்லது வேறு குழுவினால் ஆக்கப்பட்ட அதேபோன்ற விதியொன்றினால், எக்காலத்திலும் திருத்தப்படலாம், அதனோடு எதுவும் சேர்க்கப்படலாம், அது வேறுபடுத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம்.

## பாகம் XX

### நீக்கமும், நிலைமாறுகால ஏற்பாடுகளும்

**138.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டம் இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து இத்தால் நீக்கப்படுகிறது. 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்குதல்.

**139.** (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டம் நீக்கப்பட்டதன்மேல், இதிலுள்ள (I) ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ளனவாகும் ஒவ்வொன்றும், இச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைமூலம் தாபிக்கப்பட்டதும் இதிலுள்ள (II) ஆம் நிரையில் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள பெயரும் மகுடமும் கொண்டதுமான பல்கலைக்கழகமொன்றெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், 1972 ஆம் ஆண்டின 1 ஆம் இலக்கச் சட்டம் நீக்கப்படுவதன்மேல் எற்புடையனவாகும் குறித்த சில ஏற்பாடுகள்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் யாவும் ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய பல்கலைக்கழகத்துக்கும் அது தொடர்பிலும் ஏற்புடையன வாதலும் வேண்டும் :—

| நிரை (I) | | நிரை (II) |
|---|---|---|
| கொழும்பு | .. | கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை ; |
| பேராதனை | | பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை; |
| வித்தியோதயா | .. | சிறீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம், இலங்கை ; |
| வித்தியாலங்கார | .. | களனிப் பல்கலைக்கழகம், இலங்கை ; |
| கட்டுபெத்தை | .. | மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை; |
| யாழ்ப்பாணம் | .. | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை. |

(2) அத்தகைய வளாகத்தின் ஒவ்வொரு துறையும், எல்லா நோக்கங்களுக்காகவும், அத்தகைய பல்கலைக்கழகத்தின் ஒரு துறையாகக் கருதப்படுதல் வேண்டும் .

(3) அத்தகைய துறையின் ஒவ்வொரு கற்கைப் பகுதியும், எல்லா நோக்கங்களுக்காகவும் அதிலுள்ள கற்கைத்துறை ஒன்றாகக் கருதப் படுதல் வேண்டும்.

1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிறுவகங்கள் இச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டனவாகக் கருதப் படுதல் வேண்டும்.

**140.** (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டம் நீக்கப்பட்டதன்மேல், இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதும் அல்லது தாபிக்கப் பட்டதாகக் கருதப்பட்டதும், அத்தகைய நீக்கற்றேதிக்கு நேரே முற் போந்த நாளன்று இருந்துள்ளதுமான ஒவ்வொரு நிறுவகமும், ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறாக இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப் பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தோடு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்ப தோடு, சாத்தியமாகக்கூடிய அளவுக்கு, எந்த நியதிச்சட்டத்தின் கீழ் அத்தகைய உயர்கல்வி நிறுவனம் தாபிக்கப்பட்டதோ அந்த நியதிச்சட்டத்துக்கு இணங்க, அத்தகைய உயர் கல்வி நிறுவனத் தின் ஒரு நிறுவகமாகத் தொடர்ந்து தொழிற்பட்டு வருதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஒவ்வொரு நிறுவகம் தொடர்பாகவும், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் கீழாக்கப்படும் நிய திச்சட்டங்கள், இச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழு வினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டங்களாகக் கருதப்படுதல் வேண் டும்.

(3) ஆணைக்குழு, அத்தகைய நீக்கற்றேதியிலிருந்து ஓர் ஆண்டுக்குள் அத்தகைய நிறுவகத்தின் கட்டமைப்பையும் அமைப்பை யும் தீர்மானித்தல் வேண்டும்.

1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்குவதன் பயன்.

**141.** இச்சட்டத்தினதும் ஏதேனும் தொடர்பான சாதனத்தின தும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பின்வரும் ஏற்பாடுகள், இச் சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து ஏற் புடையனவாதல் வேண்டும் :

(1) இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேரேமுற்போந்த தேதியன்று, பழைய பல்கலைக்கழகத்தின் சேவையிலிருந்தவர்களும் அவர்களது ஓய்வுபெறுதலுக்குரிய

வயதை நிறைவெய்தியிராதவர்களுமான எல்லா ஆசிரியர்களும் அலுவலர்களும், வேறு ஊழியர்களும், ஆணைக்குழு தீர்மானிக்கக் கூடியவாறாக இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட அத்தகைய பல்கலைக்கழகத்தின் சேவையிலுள்ள ஆசிரியர்களாக வும், அலுவலர்களாகவும், வேறு ஊழியர்களாகவும் கருதப்படு தல் வேண்டும் என்பதோடு, அவர்கள் தமது பதவிகளை இயன்ற வரை பழைய பல்கலைக்கழகத்தின் சேவையில் அவர்களுக்கு இருந்தவற்றை அல்லது அனுபவித்தவற்றைப் போன்ற அதே நிலை யிலும், சம்பளங்கள் அல்லது கூலிகள், தொழில் முடிவுறுத்தல், படிகள் அல்லது வேறு நன்மைகள் தொடர்பிலான நியதிகள் உள்ளிட்ட அதே நியதிகளின்மீதும், வகித்தலும் வேண்டும்.

(2) ஆணைக்குழு, இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து ஓர் ஆண்டுக்குள், இச்சட்டத்தின் இப்பாகம் நடை முறைக்குவரும் தேதிக்கு நேரே முற்போந்த நாளன்று அந்தப் பல்கலைக்கழகத்தின் சேவையிலிருந்தவர்களான பழைய பல் கலைக்கழக ஆசிரியர்களும் அலுவலர்களும், வேறு ஊழியர்களும் வகித்த நியமனங்களை மீளாய்வுசெய்யலாம் என்பதுடன், தேவைக்கு மிகையாகக் காணப்படும் அத்தகைய பதவிகளை இல்லாதொழிக் கும்படியும் ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு மிறுகையாகத் தமது பதவிகளுக்கு நியமிக்கப்பட்டிருந்த அத்தகைய ஆட்களின் சேவை களை, அவர்களுக்கு உரிய முன்னறிவித்தல் கொடுத்து முடிவுறுத் தும்படியும் கட்டளையிடலாம்.

(3) இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் ஒரு பழைய பல்கலைக்கழகத்தினால் அல்லது அத னுடன் அல்லது அதற்காக உறப்பட்ட எல்லாக் கடன்களும், கடப்பாடுகளும், பொறுப்புகளும், எழுதி நிறைவேற்றப்பட்ட அல் லது செய்துகொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும், உறுதிகளும், முறிகளும், உடன்படிக்கைகளும், வேறு சாதனங்களும், புரியப் படுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட எல்லாக் கருமங்களும் காரியங் களும், இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஓர் உயர்கல்வி நிறுவனத்தினால் அல்லது அதனுடன் அல்லது அதற்காக உறப் பட்டுள்ளனவாக, எழுதி நிறைவேற்றப்பட்டுள்ளனவாக, செய்து கொள்ளப்பட்டுள்ளனவாக, அல்லது புரியப்படுவதற்கு எடுக்கப் கொள்ளப் பட்டுள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய கடன், கடப்பாடு, ஒப்பந்தம், உறுதி, முறி, உடன்படிக்கை அல்லது சாதனம் தொடர்புபட்ட தோதான உயர்கல்வி நிறுவனத்தைச் சம்பந்தப்பட்ட கட்சிக்காரருக்கு ஆணைக்குழு சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

(4) (அ) இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முன்னர், பழைய பல்கலைக்கழகத்தினால் அல்லது பல்கலைக் கழகத்துக்கு எதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாய சபையில் தொடுக்கப்பட்டிருக்கக்கூடியவையான குடியியல், மற்றும் குற்றவியல் தொடர்பான எல்லாத் தொடர்ச்சிகளும், குற்றவழக்கு களும், மேன்முறையீடுகளும் அல்லது வேறு சட்டநடவடிக்கை களும், ஆணைக்குழுவால் அல்லது ஆணைக்குழுவுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ளனவாகக் கருதப்படல் வேண்டும்.

(ஆ) குடியியல், அல்லது குற்றவியல் தொடர்பான அத்தகைய தொடர்ச்சி, குற்றவழக்கு, மேன்முறையீடு அல்லது வேறு சட்ட நடவடிக்கை தொடுக்கப்பட்டிருக்கின்றவிடத்து, ஆணைக்குழுவானது அத்தகைய தொடர்ச்சி, குற்றவழக்கு, மேன்முறையீடு அல்லது சட்ட நடவடிக்கை தொடர்புபடுத்தும் தோதான உயர்கல்வி நிறுவனத்தைப் பதிலீடுசெய்வதற்கான கட்டளையொன்றுக்கென நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம். அத்துடன் நீதிமன்றம் அது பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கட்டளையை ஆக்குதலும் வேண்டும். இப்பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய விண்ணப்பத்திற்கும் அது தொடர்பிலும் பதிலீடு செய்தல் தொடர்பிலான குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) (அ) இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முன்னர் பழைய பல்கலைக்கழகத்திற்குச் சாதகமாக, அல்லது அதற்கு எதிராக, தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் அல்லது நியாயசபையொன்றினால் ஆக்கப்பட்ட எல்லாத் தீர்வைகளும் அல்லது கட்டளைகளும், ஆணைக்குழுவுக்குச் சாதகமாக அல்லது ஆணைக்குழுவுக்கு எதிராக ஆக்கப்பட்டுள்ளனவாகக் கருதப்படல் வேண்டும்.

(ஆ) அத்தகைய தீர்வைகள் அல்லது கட்டளைகள் நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்டிருக்கின்றவிடத்து, அத்தகைய தீர்வை அல்லது கட்டளை தொடர்புபடுத்தும் தோதான உயர்கல்வி நிறுவனத்தைப் பதிலீடுசெய்வதற்கான கட்டளையொன்றுக்கென ஆணைக்குழு நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம். அத்துடன் நீதிமன்றம் அது பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கட்டளையை ஆக்குதல் வேண்டும். இப்பந்தியின் கீழ் விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டுள்ளவிடத்து அத்தகைய விண்ணப்பத்திற்கும், அது தொடர்பிலும், பதிலீடு செய்தல் தொடர்பிலான குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) பழைய பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழகச் சகாய நிதியமும், அதனுடன் சேர்த்து, இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்குவரும் தேதியிலுள்ளவாறான அதன்மீதான வட்டியும், இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதான பல்கலைக்கழகச் சகாய நிதியத்துக்கு மாற்றப்படுதல் வேண்டும்; அத்துடன், இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேரே முற்போந்த தேதியன்று பல்கலைக்கழகச் சகாய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துபவராகவுள்ள ஒவ்வொருவரும், நீக்கப்பட்டதான 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் அவர் தன்னிச்சையாக ஓய்வுபெற்ற தேதிவரையில் அந்த நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துநராக இருந்தவரும், ஓர் உயர்

(ஆ) பழைய பல்கலைக்கழகத்தின் ஆசிரியர், அலுவலர் அல்லது வேறு ஊழியர் எவரும், இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள், எந்த உயர் கல்வி நிறுவனத்தை அவர் சார்ந்திருந்தாரோ அந்த உயர் கல்வி நிறுவனத்தின் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கான அவரது உத்தேசம் பற்றி குறைந்தபட்சம் இரண்டு மாத அறிவித்தலை எழுத்தில் கொடுத்ததன் பின்னர், ஓய்வுபெறலாம் :

ஆயின்—

(i) அவரது நியமனத்தில் உறுதிசெய்யப்படாதுள்ள ஓர் ஆசிரியருக்கு, அல்லது அலுவலருக்கு அல்லது வேறு ஊழியருக்கு ; அல்லது

(ii) கற்பதற்காக அல்லது வேறு நோக்கத்துக்காக லீவு பெற்றிருப்பதோடு, குறித்துரைக்கப்பட்ட ஒரு காலத்துக்கு ஓர் உயர் கல்வி நிறுவனத்துக்கு, அல்லது பழைய பல்கலைக்கழகத்துக்கு அல்லது 1966 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உயர் கல்விச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்துக்குச் சேவை செய்வதாக உடன் படிக்கை செய்துகொண்ட ஓர் ஆசிரியருக்கு, அலுவலருக்கு அல்லது வேறு ஊழியருக்கு ; அல்லது

(iii) ஐம்பத்தைந்து வயதை நிறைவெய்தியுள்ள ஓர் அலுவலருக்கு அல்லது வேறு ஊழியருக்கு,

இந்தப் பந்தி ஏற்புடைத்தாகாது.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ், பழைய பல்கலைக்கழகத்தின் ஆசிரியர், அலுவலர், அல்லது வேறு ஊழியர் ஒருவர் ஓய்வுபெற்றுள்ளவிடத்து, சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவனம், 141 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் அவரது பதவி இல்லாதொழிக்கப்பட்டிருப்பின், அவருக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய அத்தகைய நட்டஈட்டை, பணிக்கொடை வகையாக அல்லது ஓய்வுபெறுதற்படி வகையாக அவருக்குக் கொடுத்தல் வேண்டும்; அத்தகைய பணிக்கொடையை அல்லது ஓய்வுபெறுதற்படியைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, பழைய பல்கலைக்கழகத்தின்கீழும் அதன் முன்னமைந்தோர்களில் ஒருவரின்கீழுமான அல்லது அதற்குக் கூடுதலானவர்களின் கீழுமான அவரது சேவை, ஓய்வுபெறும்போது அவர் எந்த உயர் கல்வி நிறுவனத்தில் ஊழியராக விருந்தாரோ அந்த உயர் கல்வி நிறுவனத்துக்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் தமக்குக் கொடுக்கப்படற்குரிய நட்டஈடு பற்றி அதிருப்தி அடையும் பழைய பல்கலைக்கழகத

தின் எவரேனும் ஆசிரியர், அலுவலர், அல்லது வேறு ஊழியர் மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம் ; மேன்முறையீடுகள் மீதான அதன் முடிவு முற்றானதாதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் உயர்கல்வி நிறுவனம் ஒன்று தாபிக்கப்படும் வரையிலான சிறப்புஏற்பாடுகள்.

143. இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டில் முரணுக ஏது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு அவசியமான அத்தகைய ஒழுங்குகளும், நடவடிக்கைகளும் செய்யப்படுதலையும், எடுக்கப்படுதலையும் இயலச் செய்யும் நோக்கத்துக்காக, பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :—

(அ) ஆணைக்குழு, சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், நியமிக்கப்பட்ட தேதிக்குத் முன்னர் அமைச்சரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியிலிருந்து பணியாற்றத் தொடங்குதலும் வேண்டும் ;

(ஆ) ஆணைக்குழுவின் முதலாவது செயலாளர் ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன், அவர் அவ்வாறு நியமிக்கப்பட்டதும்—

(i) ஆணைக்குழுவால் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய தேதியிலிருந்து அவர் பணியாற்றத் தொடங்குதல் வேண்டும், அத்துடன்

(ii) இச்சட்டத்தின் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட, அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட அத்தகைய எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் ஆணைக்குழு தொடர்பாகப் பிரயோகித்தலும், புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(இ) பழைய பல்கலைக்கழகத்தின் எவரேனும் அலுவலர் அல்லது வேறு ஊழியர், அந்த அலுவலரின் அல்லது வேறு ஊழியரின் சம்மதத்துடனும், அப்பல்கலைக் கழகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரின் சம்மதத்துடனும், அதே போன்ற சம்மதத்துடன் ஆணைக் குழுவால் தீர்மானிக்கப்படும் அத்தகைய காலத்துக்கு, ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவை உள்ளிட்டனவும், அவ்வாணைக்குழுவும், அந்தப் பிரதான நிறைவேற்று அலுவலரும் உடன்படக்கூடியவாறானவையுமான அத்தகைய நியதிகளின்மீதும் நிபந்தனைகளின்மீதும், அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(ஈ) 139 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் முதலாவது துணை வேந்தர், சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்; அவ்வாறு நியமிக்கப்பட்டதும்—

(i) இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து அவர் பணியாற்றத் தொடங்குதல் வேண்டும்;

(ii) இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட அத்தகைய எல்லாத தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், அவர் அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகம் தொடர்பில, பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்;

(iii) அவர் அவ்வாறு நியமிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அதிகாரசபைகள் எனவையும் அல்லது எல்லாம இச்சட்டத்தின்கீழ முறையாக அமைக்கப்படும் அத்தகைய காலம்வரையில் அத்தகைய அதிகாரசபைகளின தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கலாம, புரியலாம், அத்துடன் நிறைவேற்றலாம்; அததுடன

(iv) அவர், தமது பதவியை முன்னரே வறிதாக்கினாலொழியவும், 34 (1) (ஆ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும், அவரின் நியமனத் தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட மூன்றாண்டுக காலத்துக்குப் பதவி வகித்தலவேண்டும் என்பதுடன், மேற் சொல்லப்பட்ட காலத்தை நேரடுத்து வரும் மேலும் மூன்றாண்டுக் காலத்துக்கு 34 (1) (அ) என்னும் பிரிவின்கீழ் மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்;

(உ) 139 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் முதலாவது பதிவாளர், ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதல் வேண்டும்; அவ்வாறு நியமிக்கப்பட்டதும் இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட அத்தகைய எல்லாத தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் அவர் அவ்வாறு நியமிக்கப்பட்ட பல்கலைக்கழகம் தொடர்பில, பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்;

(ஊ) 139 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் முதலாவது நிதியாளர், ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதல் வேண்டும்; அவ்வாறு நியமிக்கப்பட்டதும் இச்சட்டத்தின்கீழ் அல்லது

ஏதேனும் தோதான சாதனத்தின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட அத்தகைய எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் அவர் அவ்வாறு நியமிக்கப்பட்ட பல்கலைக்கழகம் தொடர்பில், பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

**144.** இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டில் எது எவ்விதமிருப்பினும், இச்சட்டத்தின்கீழ் ஒரு பல்கலைக்கழகம், அவ்வாறு பணியாற்றத் தொடங்குவதனை இயலச்செய்வதற்கும், அது தாபிக்கப்படும் தேதியின் பின்னர், இயன்றவரை விரைவாக அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும், அவசியமான அத்தகைய எல்லா ஒழுங்குகளையும் வழிவகைகளையும் எடுப்பதனையும் செய்வதனையும் இயலச்செய்யும் நோக்கத்திற்காக, அத்தகைய பல்கலைக்கழகம் தாபிக்கப்படும் வரையிலான நிலைமாறு காலத்தின் போது பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகும் :— இச்சட்டத்தின்கீழ் ஒரு பல்கலைக்கழகத்தைத் தாபிக்குமிடத்திலான சிறப்பு ஏற்பாடுகள்.

(அ) பல்கலைக்கழகத்தினது முதலாவது துணை வேந்தர், சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும் ; அவ்வாறு நியமிக்கப்பட்டதும்—

(i) இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட அத்தகைய எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் ;

(ii) பல்கலைக்கழக அதிகார சபைகளில் எவையும் அல்லது அவையெல்லாம் இச்சட்டத்தின்கீழ் முறையாக அமைக்கப்படும்வரையில், அவர் அத்தகைய பல்கலைக்கழகங்களின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கலாம், புரியலாம், அத்துடன் நிறைவேற்றலாம்; அத்துடன்

(iii) அவர் தமது பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, 34 (1) (ஆ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட மூன்று ஆண்டுக் காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், மேற்சொல்லப்பட்ட காலத்தை நோடுத்துவரும் மேலுமொரு மூன்றாண்டுக் காலத்துக்கு 34 (1) (அ) என்னும் பிரிவின் கீழ் மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(ஆ) பல்கலைக்கழகத்தின் முதலாவது பதிவாளர் ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு நியமிக்கப்பட்டதும், இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின் கீழ் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட, அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்;

(இ) பல்கலைக்கழகத்தின் முதலாவது நிதியாளர், ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதல்வேண்டும் என்பதுடன், அவர் அவ்வாறு நியமிக்கப்பட்டதும், இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின்கீழ், அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட அத்தகைய எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கத்துக்காக "நிலைமாறுகாலம்" என்பது இச்சட்டத்தின்கீழ், பல்கலைக்கழகக் கட்டளையொன்று வெளியிடப்பட்ட தேதியிலிருந்து தொடங்கி அத்தகைய கட்டளை வலுவுக்குவரும் தேதியன்று முடிவடையும் காலம் எனப்பொருள்படும்.

இடர்ப்பாடுகளை நீக்குதல்.

**145.** நூற்று முப்பத்தொன்பதாம் பிரிவின்கீழ் நிறுவப்பட்டதாகக் கருதப்பட்ட ஒரு பல்கலைக்கழகம், தொழிற்படுவதற்கான அல்லது 21 ஆம், 22 ஆம், 23 ஆம், 24 ஆம் பிரிவுகளின்கீழ் உயர் கல்வி நிறுவனத்தைத் தாபிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் சம்பந்தமாக, ஒன்றில் பொதுவாக அல்லது ஏதேனும் விசேட கருமம் குறித்து, அமைச்சர், ஆணைக்குழுவின் விதப்புரையின் பேரிலும், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், ஏதேனும் விசேட அல்லது எதிர்பாராச் சூழ்நிலைகளுக்காக ஏற்பாடு செய்யும் நோக்கத்துடன், அல்லது ஏதேனும் பிரச்சினையை அல்லது விடயத்தைத் தீர்மானித்தலுக்கென அல்லது சரிசெய்வதற்கென இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடு எதுவும், அல்லது பயனுறு ஏற்பாடு எதுவும் செய்யப்படாதிருப்பின் அப்பிரச்சினையை அல்லது விடயத்தைத் தீர்மானித்தலுக்கு அல்லது சரிசெய்தலுக்கு ஏற்பாடு செய்யும் நோக்கத்துடன் அவர் அவசியமெனக் கருதக்கூடிய அத்தகைய எல்லாப் பணிப்புகளையும் விடுக்கலாம்.

**146.** இச்சட்டத்தின் 139 ஆம் பிரிவுக்கு மாறாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து தொடங்கும் இரண்டாண்டுக் காலத்தின்போது பின்வரும் கருமங்களில் எதனையும் அல்லது அவை எல்லாவற்றையும் செய்வதற்கு ஆணைக் குழுவுக்குத் தத்துவமிருத்தல் வேண்டும் :— ஆணைக்குழுவின் தத்துவங்கள் தொடர்பிலான சிறப்பு ஏற்பாடுகள்.

(அ) ஒவ்வோர் உயர் கல்வி நிறுவனத்தினதும் அமைப்பையும் உறுப்பாண்மை அமைப்பையும் தீர்மானித்தல் ;

(ஆ) அத்தகைய உயர் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றுக்கும் குறித்தொதுக்கப்படவேண்டிய துறையையும் அல்லது துறைகளையும், அதன் கற்கைப் பகுதிகளையும் தீர்மானித்தலும், அவற்றைக் குறித்தொதுக்குதலும் ;

(இ) அத்தகைய உயர் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றுக்கும் ஏற்பாடுசெய்யப்பட வேண்டிய அல்லது கற்பிக்கப்பட வேண்டிய பாடங்களை அல்லது கற்கைப் பயிற்சிகளைத் தீர்மானித்தல் ; அத்துடன்

(ஈ) பழைய பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதியினர்களையும், மாணவர்களையும், உபகரணத்தையும், காணியையும், கட்டிடத்தையும், வேறு வசதிகளையும் அத்தகைய உயர் கல்வி நிறுவனங்களுக்கு மாற்றுதல் அல்லது மீளப் பகிர்ந்தளித்தல்.

## பாகம் XXI

### பொருள்கோடல்

**147.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய— பொருள்கோடல்.

"நிருவாகப் பணியாட்டொகுதி" என்பது ஆசிரியர்களாகவில்லாதோரும், ஆண்டொன்றுக்கு ஒன்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாத தொடக்கச் சம்பளத்தை அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டத்தினால், ஆணைக்குழு காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு கூடுதலான சம்பளத்தைக் கொண்ட உத்தியோகங்களை வகிப்பவர்களுமான ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்கள் எனப் பொருள்படும் ;

"தோதான சாதனம்" என்பது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, கட்டளைச்சட்டம், நியதிச்சட்டம், துணைவிதி, ஒழுங்குவிதி அல்லது விதி எனப் பொருள்படும் ;

"துணைவிதி" என்பது ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபையினால் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒரு துணைவிதி எனப் பொருள்படும் ;

"ஆளும் அதிகாரசபை" என்பது—

(i) ஒரு பல்கலைக்கழகம் தொடர்பாக, அப்பல்கலைக்கழகத்தின் பேரவை எனப் பொருள்படும் ;

(ii) ஒரு திறந்த பல்கலைக்கழகம் தொடர்பாக, அந்தத் திறந்த பல்கலைக்கழகத்தின் பேரவை எனப் பொருள்படும் ; அத்துடன்

(iii) ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி தொடர்பாக அந்தப் பல்கலைக்கழகக் கல்லூரியின் முகாமைச் சபை எனப் பொருள்படும் ;

"உயர் கல்வி நிறுவனம்" என்பது இச்சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட அல்லது நிறுவப்பட்டதாகக் கருதப்பட்ட ஒரு பல்கலைக்கழகம், வளாகம், திறந்த பல்கலைக்கழகம், அல்லது பல்கலைக்கழகக் கல்லூரி எனப் பொருள்படும் ;

"கல்வித்துறைசாராப் பணியாட்டொகுதி" என்பது ஆசிரியர்களாக இல்லாதவர்களும் ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதியிலுள்ளவர்களுமான எல்லா உறுப்பினர்களும் எனப் பொருள்படும் ;

"பழைய பல்கலைக்கழகம்" என்பது 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகம் எனப் பொருள்படும் ;

"கட்டளை" என்பது இச்சட்டத்தின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை எனப் பொருள்படும் ;

"கட்டளைச்சட்டம்" என்பது இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவால் அல்லது மேன்முறையீட்டுச் சபையால் ஆக்கப்பட்ட ஒரு கட்டளைச்சட்டம் எனப் பொருள்படும் ;

"வேறு ஊழியர்" என்பது ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் ஓர் ஆசிரியராக அல்லது ஓர் அலுவலராக அல்லாத ஒரு பதவியை வகிக்கும் எவரேனும் ஆள் எனப் பொருள்படும் ;

"சனாதிபதி" என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி எனப் பொருள்படும் ;

"பிரதான நிறைவேற்று அலுவலர்" என்பது—

(i) ஒரு பல்கலைக்கழகம் தொடர்பில் அந்தப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் எனப் பொருள்படும் ;

(ii) ஒரு திறந்த பல்கலைக்கழகம் தொடர்பில், அந்தத் திறந்த பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் எனப் பொருள்படும் ; அத்துடன்

(iii) ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி தொடர்பில், அந்தப் பல்கலைக் கழகக் கல்லூரியின் பணிப்பாளர் எனப் பொருள்படும்;

" அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் " என்பது 25 ஆம் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனம் எனப் பொருள் படும் ;

" ஒழுங்குவிதி " என்பது இச்சட்டத்தின்கீழ், விடயத்துக்கு ஏற்ற வாறு, உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் மூதவையால் அல்லது அவ்விக் கூட்டவையால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி எனப் பொருள்படும் ;

" விதி " என்பது இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால், மேன் முறையீட்டுச் சபையினால், அல்லது உயர் கல்விநிறுவனம் ஒன்றின் அதிகாரசபையினால் அல்லது வேறு குழுவி னால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி எனப் பொருள்படும் ;

" நியதிச்சட்டம் " என்பது இச்சட்டத்தின்கீழ் ஒரு பல்கலைக்கழ கத்தின் மன்றினால் ஆக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்டம் எனப் பொருள்படும் ;

"ஆசிரியர்" என்பது ஒரு பேராசிரியர், இணைப்பேராசிரியர், சிரேட்ட விரிவுரையாளர், விரிவுரையாளர், உதவி விரிவு ரையாளர் ஆகியவர்களும், எந்தப் பதவியை வகிப்பவர் ஓர் ஆசிரியரெனக் கட்டளைச்சட்டத்தால் வெளிப்படுத் தப்பட்டுள்ளாரோ அந்தப் பதவியெதனையும் வகிப்பவரும் எனப் பொருள்படும் ; அத்துடன்

" பல்கலைக்கழகம் " என்பது இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஒரு பல்கலைக் கழகம் எனப் பொருள்படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30 ; (வெளிநாடு) ரூபா 40 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் சந்தாப்பணங்கள் விடயத்தில் பணம் கட்டிய தேதிக்குப் பின் வெளியிடப்படும் சட்டமூலங்களும் சட்டங்களும் மாத்திரம் அனுப்பப்படும். அதற்கு முந்தியவை அனுப்பப்படமாட்டா என்ற நிபந்தனையின் பேரில் ஏற்றுக்கொள்ளப்படும்.

191431

ජාතික ලේඛනාරක්ෂක දෙපාර්තමේන්තුව
පොත් ලබා ගැනීමේ අංශය
රෙජිස්ට්‍රාර් කාර්යාලය
1985-4-24
ලංකා SRI LANKA ஸ்ரீலங்கா

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1985 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

---

*[1985, பெப்ருவரி மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1985, பெப்ருவரி மாதம் 15 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : ரூபா 3.00* *தபாற் செலவு : ரூபா 1.80*

## 1985 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

[1985, பெருப்வரி மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ 11/84
―――
1636

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1985 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அதன் எல்லா அல்லது எவையேனும் ஏற்பாடுகள் தொடர்பாக, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியில் அல்லது தேதிகளில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும். *சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவினானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கி அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(1) ஆணைக்குழு, ஒரு தவிசாளரையும், ஒரு துணைத்தவிசாளரையும் வேறு ஐந்து உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்; அவர்கள் எல்லோரும் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "தவிசாளர் உட்பட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தவிசாளரும் துணைத் தவிசாளரும் உட்பட" என்ற சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில்—

(அ) "தவிசாளர் அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தவிசாளர், துணைத் தவிசாளர் அல்லது" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) "அத்தகைய தவிசாளருக்காக" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய தவிசாளருக்காக அல்லது துணைத் தவிசாளருக்காக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "தவிசாளருக்கும் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கும்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "தவிசாளருக்கும் துணைத் தவிசாளருக்கும் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கும்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்.

2—எ 080990—3,200 (01/85)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கி அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) ஆணைக்குழுவின் தவிசாளர் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமைதாங்குதல் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமுகமளிக்காதிருந்தால் துணைத் தவிசாளர் அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் நான்கு உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கி அதற்குப் பதிலாகப் பின் வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் :—

"(1) ஆணைக்குழுவுக்குத் தவிசாளர் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் கணக்கீட்டு அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "15 ஆம், 16 ஆம், 18 ஆம் பிரிவுகளின்கீழ்" என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக "16 ஆம், 18 ஆம் பிரிவுகளின்கீழ்" என்ற சொல்லமைப்பை இடுவதன் மூலம் ;

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "தவிசாளருக்கு" என்ற சொல்லுக்குப் பதிலாக "தவிசாளருக்கும் துணைத் தவிசாளருக்கும்" என்ற சொற்களை இடுவதன்மூலம் ;

(4) அப்பிரிவின் ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக் குறிப்பை இடுவதன்மூலம் :—

"ஆணைக்குழுவின் தவிசாளரும்

துணைத் தவிசாளரும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்தல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் ;

"(அ) ஆணைக்குழுவினது பதிவேடுகளின் கட்டுக்காவலுக்கும் ஆதனத்துக்கும் பொறுப்பாகவிருக்கின்றவரும் அத்துடன் அவ்வாணைக்குழுவின் உதவிக் கணக்கீட்டு அலுவலராக இருக்கின்றவருமான செயலாளர் ஒருவரையும்; அத்துடன்";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை அதன் (3) ஆம் உட்பிரிவென மீள இலக்கமிடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(2) ஒன்பதாம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப் பட்ட அலுவலர்களும் ஊழியர்களும் தவிர்ந்த ஏனைய அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் அவர்கள் தொடர்பிலும் 74 ஆம், 75 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்தல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "எவரேனும் அலுவலர் அல்லது வேறு ஊழியர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவரேனும் ஆசிரியர், அலுவலர் அல்லது வேறு ஊழியர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) "அவ்வலுவலரினதும் அல்லது ஊழியரினதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அவ்வாசிரியரினதும், அலுவலரினதும் அல்லது ஊழியரினதும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 9அ, 9ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

8. ஒன்பதாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் உட்புகுத்தப்படுவதுடன், அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 9அ, 9ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"ஆணைக்குழுவில் பதவி வகிப்பவரால் வேலை நீக்கத்துக்கு, கட்டாய ஓய்வுக்கு அல்லது வேறு தண்டனைக்கு எதிரான மேன்முறையீடு.

9அ. தம் பதவியிருந்து வேலைநீக்கம் செய்யப்படும் அல்லது கட்டாய ஓய்வில் அனுப்பப்படும் அல்லது துர்நடத்தைக்காக, திறமையின்மைக்காக அல்லது கடமையைக் கைவிட்டுச் சென்றமைக்காக வேறு வகையில் தண்டிக்கப்படுகின்றவரான ஆணைக்குழுவில் பதவி ஒன்று வகிக்கும் ஒவ்வொருவரும், அத்தகைய வேலை நீக்கம் அல்லது ஓய்வு அல்லது வேறு தண்டனைக்கு எதிராகப் பல்கலைக்கழகச் சேவைகள் மேன்முறையீடுகள் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

ஆணைக்குழுவின் இலச்சினை.

9ஆ. (1) ஆணைக்குழுவின் இலச்சினையானது ஆணைக்குழுவினது செயலாளரின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் இலச்சினையானது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்தில் மாற்றப்படலாம்.

(3) ஆணைக்குழுவின் இலச்சினையானது செயலாளரினதும் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரினதும் முன்னிலையில்தவிர ஏதேனும் சாதனத்தில் அல்லது

ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அத்துடன் தாம் அவண் இருந்தனர் என்பதற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் அவர்கள் இருவரும் ஒப்பமிடுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவானது அப்பிரிவின் (IX) ஆம், (X) ஆம், (XI) ஆம் பந்திகளை நீக்கி அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ix) உயர்கல்வி நிறுவனங்களுக்கான பணியாட்டொகுதியினர்களைப் புதிதாகச் சேர்ப்பதற்கான திட்டங்களையும் அவர்களின் நியமனத்துக்கான நடவடிக்கை முறைகளையும் வகுத்தலோடு பல்வேறு தரங்களைச் சார்ந்த பணியாட்டொகுதியையும், அத்தகைய ஒவ்வொரு தரத்திலும் உள்ளவர்களின் எண்ணிக்கையையும் காலத்துக்குக் காலம் தீர்மானித்தல்;

(x) (அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது தோதான வேறேதேனும் சாதனத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்ற ஒவ்வொரு உயர்கல்வி நிறுவனத்தின் அமைப்பையும் உள்ளடக்கத்தையும்;

(ஆ) அத்தகைய ஒவ்வொரு உயர்கல்வி நிறுவனத்துக்கும் குறித்தொதுக்கப்படவேண்டிய அதற்கான பீடத்தையும் அல்லது பீடங்களையும், கல்வித்துறைகளையும்;

(இ) அத்தகைய ஒவ்வொரு உயர்கல்வி நிறுவனத்திலும் ஏற்பாடு செய்யப்படவேண்டிய அல்லது கற்பிக்கப்படவேண்டிய பாடங்களையும் அல்லது பாட நெறிகளையும்,

காலத்துக்குக் காலம் தீர்மானித்தல்.

(xi) பந்தி (x) என்பதன் ஏற்பாடுகளின் கீழ்த் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் தீர்மானத்தின் விளைவாக அவசியமாகக்கூடியவாறான உயர்கல்வி நிறுவனம் எதனதும் ஆசிரியர் பதவி தவிர்ந்த வேறேதேனும் பதவி வகிப்பவர்களையும், மாணவர்களையும், உபகரணங்களையும், ஏனைய வசதிகளையும் மாற்றுதல் அல்லது மீள ஒதுக்கீடு செய்தல்;

(xii) ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் மாணவர்களின் ஒழுக்காறு சம்பந்தமான அல்லது கல்வி, நிதி அல்லது பொது நிருவாகம் சம்பந்தமான அத்தகைய விடயங்கள் தொடர்பாக ஆய்வு செய்தலும் அல்லது ஆய்வு செய்வித்தலும் பரிகாரத்துக்கான வழிவகைகளைக் கையாளுதலும்; அத்துடன்

(xiii) இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களுள் எதனையும் பயனுறப் பிரயோகிப்பதற்கும் 3 ஆம் பிரிவில் தாபப்பட்ட குறிக்கோள்களை எய்துதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் அல்லது விடயங்களையும் செய்தல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலம் :—

"(இ) (அ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கிணங்க ஆணைக்குழுவினாலான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டதன்மேல் அமைச்சரானவர் சம்பந்தப்பட்ட உயர்கல்வி நிறுவனத்தின் செயற்பாடுகளில் எதுவும் அல்லது நிருவாகம் தொடர்பாகத் தாம் அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய பரிகார நடவடிக்கையை எடுக்குமாறு ஆணைக் குழுவைப் பணிக்காலம்." ; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "பங்கமுண்டாக்குகின்றதென அமைச்சர் திருப்தியடையுமிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பங்கமுண்டாக்குகின்றதென அல்லது ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தின் தொழிற்பாடு சுமுகமாக இயங்கமுடியாமல் இருக்குமென அமைச்சர் திருப்தியடையுமிடத்து" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 24அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

11. பின்வரும் புதிய பிரிவானது 24 ஆம் பிரிவை உடனடுத்து உட்புகுத்தப்படுவதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 24அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"உயர் கல்விக்கு நிறுவகமொன்றை அல்லது நிலையமொன்றைத் தாபித்தல்.

24 அ. (1) அமைச்சர், ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையுடன், கட்டளையொன்றின்மூலம் (இது இதனகத்துப்பின்னர் "உயர்கல்வி நிறுவனக் கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படும்)—

(அ) அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கல்விப் பிரிவுகளின் உயர்கல்வியை ஏற்பாடு செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் வளர்ப்பதற்கும் விடயத்துக்கேற்றவாறு உயர்கல்வி நிறுவனமொன்றை அல்லது நிலையமொன்றைத் தாபிக்கலாம் ; அத்துடன்,

(ஆ) விடயத்திற்கேற்ப அத்தகைய உயர்கல்விக்கான நிறுவனத்திற்கு அல்லது நிலையத்துக்கு ஒரு பெயரையும் மகுடத்தையும் குறித்தொதுக்கலாம் ;

(2) விடயத்துக்கேற்ப உயர்கல்வி நிறுவனமொன்றின் அல்லது நிலையமொன்றின் அமைப்பு, தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியன கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்படல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 25அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

12. இருபத்தைந்தாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"பட்டங்கள் வழங்கும் நிறுவனங்களை அங்கீகரித்தல்.

25அ. இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அமைச்சரானவர் 70இ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, (இதனகத்துப்பின்னர் "பட்டம் வழங்கும் நிறுவகக் கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கட்டளையொன்றினால், இச்சட்டத்தின் 21, 22, 23, 24, 24அ, 25 என்னும் பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்படும் நிறுவனமொன்றல்லாத ஏதேனும் நிறுவகத்தை, அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய கற்கைக் கிளைகளிலான அத்தகைய கற்கை நெறிகளிலும் அத்துடன் அதன்கண் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும் உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்கென பட்டம் வழங்கும் நிறுவகமொன்றாக அங்கீகரிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "திறந்த பல்கலைக்கழகக் கட்டளையும், பல்கலைக்கழகக் கல்லூரிக் கட்டளையும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "திறந்த பல்கலைக்கழகக் கட்டளையும் பல்கலைக்கழகக் கல்லூரிக் கட்டளையும் உயர்கல்வி நிறுவனக் கட்டளையும் பட்டம் வழங்கும் நிறுவகக் கட்டளையும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் ஓரக் குறிப்பில் "21 ஆம், 22 ஆம், 23 ஆம், 24 ஆம்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக "21, 22, 23, 24, 24அ, 25அ" என்னும் சொல்லமைப்பை இடுவதன்மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(1) (அ) ஒரு பல்கலைக்கழகக் கட்டளை, வளாகக் கட்டளை, திறந்த பல்கலைக்கழகக் கட்டளை, பல்கலைக்கழகக் கல்லூரிக் கட்டளை அல்லது உயர் கல்வி நிறுவனக் கட்டளையானது, அமைச்சரால் திருத்தப்படலாம், வேறுபடுத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப் படலாம்.

(ஆ) 25அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவகக் கட்டளையொன்று, அமைச்சரால் திருத்தப்படலாம், வேறுபடுத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(2) அப்பிரிவுக்கான ஓரக் குறிப்பில் "23 அல்லது 24" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, "23, 24, 24அ அல்லது 25அ" என்னும் சொல்லமைப்பை இடுவதன்மூலமும்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (ஔ) என்னும் பிரிவில் "அத்தகைய வேறு பதவிகளையும் ஏற்படுத்தல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய வேறு பதவிகளையும் ஏற்படுத்துவதற்கு ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தல்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவானது "அவர் சமுகமாகவிருக்கும்போது பல்கலைக்கழக மன்றின் ஏதேனும் கூட்டத்திலும்" என்னும் சொற்களை நீக்கிவிடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

(1) (அ) பல்கலைக்கழகமொன்றின் துணைவேந்தரானவர் பல்கலைக்கழகத்தின் பேரவையினால் விதந்துரைக்கப்பட்ட மூவரடங்கிய குழாம் ஒன்றிலிருந்து ஆணைக்குழுவின் விதப்புரையின் பேரில் மூன்றாண்டு காலத்துக்குச் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) பல்கலைக்கழகமொன்றின் துணைவேந்தரானவர் ஆணைக்குழுவுடனான ஆலோசனையின்பின் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "அவர் பல்கலைக்கழக மன்றின் பதவிவழி உறுப்பினராகவும்" என்பதிலிருந்து "மன்றின் கூட்டங்களில் துணைவேந்தர் தலைமைவகித்தல் வேண்டும்." என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன்மூலமும் :—

"அவர் பேரவை, மூதவை ஆகிய இரண்டினதும் பதவிவழி உறுப்பினராகவும் தவிசாளராகவும் இருத்தல் வேண்டும்.";

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(6) (அ) பல்கலைக்கழகம் தொடர்பில், பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை நெறிகளையும் நெறிமுறைகளையும் நிறைவேற்றுவதற்கும், அத்துடன் அத்தகைய கொள்கை நெறிகளுக்கு அமைய, பல்கலைக்

கழகத்தின் நிருவாகம் உட்பட அதனை இயக்குவதற்கும், மேற்பார்வை செய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும்; அத்துடன்

(ஆ) பல்கலைக்கழகத்தினுள்ளே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பேணுவதற்கும்

துணைவேந்தர் பொறுப்புடையவராதல் வேண்டும்."; அத்துடன்

(4) அப்பிரிவின் (8) ஆம் (9) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் :—

" (8) துணைவேந்தர், லீவு காரணமாக, சுகவீனம் காரணமாக இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு காரணத்துக்காகத் தம் பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருப்பின், பிரதித் துணைவேந்தர் எவரேனும் இருப்பின், அவர் அத்தகைய கடமைகளைப் புரிதல் வேண்டும். பிரதித் துணைவேந்தர் எவரும் இல்லாதிருக்குமிடத்து, அத்தகைய இயலாமை நிகழ்ந்து ஏழு நாட்களுக்குள், ஆணைக்குழு அப்பதவிக்கான கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தக்கதெனக் கருதும் அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்.

(9) துணைவேந்தர் பதவியில் வெற்றிடம் எதுவும் எற்படின் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் நிரந்தர நியமனம் ஒன்று செய்யப்படும்வரை :—

(அ) பிரதித் துணைவேந்தர் எவரேனும் இருந்தால் அவர் துணைவேந்தர் பதவிக்குரிய கடமைகளைப் புரிதல் வேண்டும், அல்லது

(ஆ) பிரதித் துணைவேந்தர் எவரும் இல்லாதவிடத்து, அத்தகைய வெற்றிடம் நிகழ்ந்து ஏழு நாட்களுக்குள், ஆணைக்குழு, அப்பதவிக்கான கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தக்கதென அது கருதக்கூடிய அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்.

(10) ஓராம் உட்பிரிவின்கீழ் பதவியை வறிதாக்கும் அல்லது பதவியிலிருந்து நீக்கப்படும் அல்லது வேறு ஏதேனும் விதத்தில் துணைவேந்தராகப் பதவி வகிக்காதொழியும் துணைவேந்தரொருவர் மீண்டும் நியமிக்கப்பட்டாலொழிய அவர் துணைவேந்தராக நியமிக்கப்பட்ட தேதிக்கு முந்திய நாள் உயர்கல்வி நிறுவகம் ஒன்றின் பணியாட்டொகுதியின் உறுப்பினரொருவராக இருந்திருந்தால், அவர் தம்முடைய அறுபத்தைந்தாவது வயதைப் பூர்த்தி செய்திருக்கா திருப்பின், அத்தகைய நிறுவகத்தின் பணியாட்டொகுதியில் தம் நிலையான பதவிக்கு மீண்டும் செல்லலாம்.".

18. முதன்மைச் சட்டவாக்கத்தில் எது எப்படியிருப்பினும் முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் துணைவேந்தர், இப்பிரிவு நடைமுறைக்கு வரும் தேதியன்று அத்தகைய துணைவேந்தர் பதவியை வகிக்காதொழிதல் வேண்டும் : இப்பிரிவு நடைமுறைக்கு வந்ததன் மேல் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் பதவி வகிக்காதொழிதல்.

ஆயின், எவ்வாறுயினும் பதவி வகிக்காதொழிகின்ற துணைவேந்தர் எவரும், மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(4) வளாகத் தலைவர் வளாகச் சபையின் தவிசாளராக இருத்தல் வேண்டும். அவர் வளாகத்தின் வேறு ஏதேனும் குழுவினது கூட்டத்தைக் கூட்டுவதற்கும், அதற்குச் சமுகமளிப்பதற்கும் உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும். ஆனல், அவர் அத்தகைய வேறு குழுவில் உறுப்பினரொருவராக இருந்தாலொழிய அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராகார்.

(5) வளாகத்தினுள் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பேணுதல் வளாகத் தலைவரின் பொறுப்பாதல் வேண்டும்.".

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவில் "பல்கலைக்கழக மன்று, பேரவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பல்கலைக்கழகப் பேரவை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவானது அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) நிதியாளர், பதிவாளரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, பல்கலைக்கழக நிதிகளின் நிருவாகத்துக்குப் பொறுப்புடையவராதல் வேண்டுமென்பதுடன், விதிகள்மூலம் விதித்துரைக்கப்பட்ட அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் அதன் கணக்குகளைப் பேணிவருதலும் வேண்டும். பல்கலைக்கழக நிதிகள் அவரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.".

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (i) ஆம் பந்தியை விட்டுவிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (v) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(v) துறைச்சபை அல்லது துறைச் சபைகள்";

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம், 42 ஆம், 43 ஆம் பிரிவுகளை நீக்குதல்.*

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம், 42 ஆம், 43 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்தல்.*

**24.** (அ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) ஒரு பல்கலைக் கழகத்தின் பேரவையானது (இது இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அப்பல்கலைக் கழகத்தின் நிறைவேற்றுக் குழுவாகவும், ஆளும் அதிகார சபையாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் :—

(i) துணை வேந்தர் ;

(ii) பிரதித் துணைவேந்தர் (எவரேனும் இருப்பின்) ;

(iii) வளாகத் தலைவர் (எவரேனும் இருப்பின்) ;

(iv) பட்டப்படிப்புத் துறையின் துறைத் தலைவர் (எவரேனுமிருப்பின்) ;

(v) ஒவ்வொரு துறையினதும் துறைத் தலைவர் ;

(vi) மூதவையின் உறுப்பினர்களிலிருந்து மூதவையினால் தெரிவு செய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் ; அத்துடன்

(vii) மேலேயுள்ள (i) ஆம், (ii) ஆம், (iii) ஆம், (iv) ஆம், (v) ஆம், (vi) ஆம் பந்திகளின் கீழான உறுப்பினர்களின் மொத்தத் தொகையோடு ஒன்றைக் கூட்டிவரும் மொத்த எண்ணிக்கைக்குச் சமனுகவுள்ள அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்கள். அத்தகைய எல்லா உறுப்பினர்களும், கல்வி, உயர்தொழில், வணிகம், கைத்தொழில், விஞ்ஞானம், நிருவாகம் ஆகிய துறைகளில் சிறப்புமிகு சேவை ஆற்றியுள்ள ஆட்களிலிருந்து, ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) அப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

"(3) நான்காம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பேரவையின் நியமிக்கப்பட்ட அல்லது தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் எவரும், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினுலொழிய, விடயத்துக்கேற்ப அவர் நியமிக்கப்பட்ட அல்லது தெரிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றுண்டு காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீள நியமிக்கப்படுவதற்கு அல்லது மீளத் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், நியமிக்கப்பட்ட அல்லது தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் எவரும், அவரது பதவிக்காலம் முடிவடைவதன் முன்னர், அவரது பதவியை வறிதாக்கினால், அவரை அடுத்துவருபவர், அவரும் முன்னரே அவரது பதவியை வறிதாக்கினாலொழிய, அவருக்கு முன் இருந்தவரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக் காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(4) பேரவையின் நியமிக்கப்பட்ட அல்லது தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் எவரும் விடயத்துக்கேற்ப ஆணைக்குழுத் தவிசாளருக்கு அல்லது பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு முகவரியிட்டனுப்பப்படும் தமது கைப்பட எழுதப்பட்ட கடிதமூலம், தமது பதவியைத் துறக்கலாம்.

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தில், எது எப்படியிருப்பினும் முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் பேரவையின் நியமிக்கப்பட்ட அல்லது தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள், இப்பிரிவு நடைமுறைக்கு வந்த தேதியின் மேல், அத்தகைய உறுப்பினர்களாகப் பதவி வகிக்காதொழிதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அப்படிப் பதவி வகிக்காதொழியும், நியமிக்கப்பட்ட அல்லது தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் எவரும் விடயத்திற்கேற்ப மீள நியமிக்கப்படுவதற்கு அல்லது தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

(1) அவ்வுட்பிரிவின் (vi) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(vi) பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையையும் ஆண்டுக் கணக்குகளையும் பரிசோதனை செய்தலும் அவசியமானால் அவற்றைத் திருத்தி ஏற்றுக்கொள்ளலும், அத்துடன் அத்தகைய அறிக்கையையும் அத்தகைய கணக்குகளையும் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தலும் ;" ; அத்துடன்

(2) அப்பிரிவின் (viii) ஆம் பந்தியை நீக்குவதன் மூலமும்.

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

(1) அப்பிரிவின் (2) ஆம் (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

"(2) பல்கலைக்கழகத்தின் மூதவை, பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) துணைவேந்தர் ;

(ஆ) பிரதித் துணைவேந்தர் (எவரேனும் இருப்பின்) ;

(இ) ஒவ்வொரு வளாகத்தினதும் வளாகத் தலைவர் (எவரேனும் இருப்பின்) ;

(ஈ) பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஒவ்வொரு உயர் கல்வி நிறுவகத்தினதும் அல்லது நிலையத்தினதும் பணிப்பாளர் (எவரேனும் இருப்பின்);

(உ) பட்டப்படிப்புத் துறையின் துறைத் தலைவர் (எவரேனும் இருப்பின்) ;

(ஊ) ஒவ்வொரு துறையினதும் துறைத்தலைவர் ;

(எ) ஒவ்வொரு கற்கைப் பகுதியினதும் தலைவர் ;

(ஏ) பல்கலைக்கழகத்தின் நிரந்தரப் பேராசிரியர் ஒவ்வொருவரும் ;

(ஐ) நூலகப் பொறுப்பாளர் ; அத்துடன்

(ஒ) முற்போந்த பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டவர்களல்லாதவர்களும், ஒவ்வொரு துறையின் நிரந்தர ஆசிரியர்களால் அவ்வாசிரியர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களுமான இரண்டு ஆசிரியர்கள்.

(3) தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும், அவர் தெரிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்று ஆண்டு காலத்துக்குப் பதவி வகித்தல்வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் இளைப்பாறுமிடத்து அல்லது பதவியிலிருந்து விலகுமிடத்து, அல்லது மூதவையின் அடுத்தடுத்துவரும் மூன்று கூட்டங்களுக்குத் தாம் வருகை தராத காரணத்தால் வேறு விதத்தில் பதவியை வறிதாக்குமிடத்து, (2) ஆம் உட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க, அவரின் இடத்துக்கு வேறோர் உறுப்பினர் தெரிவு செய்யப்படல் வேண்டும் ; அத்துடன், அத்தகைய வேறு உறுப்பினர், முன்னரே தம் பதவியை வறிதாக்கினாலொழிய, தமக்கு முன்னிருந்தவரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப் பகுதிக்குப் பதவி வகித்தலும் வேண்டும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில்—

(அ) அதன் (i) ஆம் பந்தியில் "துறையின் அல்லது துறைகளின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "துறைச் சபையின் அல்லது துறைச்சபைகளின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அதன் (ii) ஆம் பந்தியில், "துறையின் அல்லது துறைகளின்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "துறைச் சபையின் அல்லது துறைச் சபைகளின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(இ) அதன் (iv) ஆம் பந்தியில், "துறையின் அல்லது துறைகளின்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "துறைச் சபையின் அல்லது துறைச் சபைகளின்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(1) ஒரு பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு துறையும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்துறைக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட கற்கைப் பகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.";

(2) ஓராம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் (இப்பிரிவானது அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவாகப் பயனுறுதல் வேண்டும்);

"(1அ) ஒரு பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு துறையும் பின்வரும் ஆட்களைக்கொண்டிருக்கும் துறைச்சபையொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அத்துறையின் துறைத் தலைவர் ;

(ஆ) அத்துறை உள்ளடக்கும் கல்விப்பகுதிகளின் நிரந்தரப் பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள், சிரேட்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள் எல்லோரும் ;

(இ) துறையின் நிரந்தர உதவி விரிவுரையாளர்களினால் அவர்களிலிருந்து தெரிவுசெய்யப்படும் இரண்டு உறுப்பினர்கள் ;

(ஈ) பந்திகள் (ஆ), (இ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டோர் நீங்கலாக துறைகளில் கற்பிக்கும் நிரந்தரப் பணியாட்டொகுதியினரால் அவர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் ;

(உ) துறையின் மாணவர்களால், அவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இரண்டு மாணவர்கள் ; அத்துடன்

(ஊ) துறைக்கு இயைபான கற்கைத் துறைகளில் சிறப்புற்றுள்ள ஆட்களிலிருந்து துறைச்சபையினால் தெரிவு செய்யப்பட்ட மூன்று ஆட்கள். இவர்கள் பல்கலைக்கழகப் பணியாட்டொகுதியின் உறுப்பினர்களாக இருத்தலாகாது.";

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "ஏற்பாடுகளுக்கமைவாக, ஒரு துறை" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒரு துறைச் சபை" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(4) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(4) (i) துறைச்சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் துறைத் தலைவரே தலைமை வகித்தல் வேண்டும் ;

(ii) (1 அ) என்னும் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள், இச்சட்டத்தின் 49 ஆம் பிரிவின்கீழான துறைத்தலைவர் தெரிவு செய்யப்படுவதுடனும் பரீட்சைகளோடும் சம்பந்தப்பட்ட கருமங்களோடும் தொடர்புபட்டவையான துறைச்சபையின் ஏதேனும் கூட்ட நடவடிக்கைகளிலிருந்து விலக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கூட்டம் எதுவும், அத்தகைய விலக்கல் எப்படியிருப்பினும், முறையாக நடாத்தப்பட்டுள்ளதெனக் கருதப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 48அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

28. பின்வரும் புதிய பிரிவானது 48 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"பல்கலைக்கழகத்தின் பட்டதாரிப் படிப்புத் துறையும் அத்துறைத் தலைவரும்.

48அ. (1) பல்கலைக்கழகம் எதுவும், அத்தகைய பல்கலைக்கழகத்துக்குள் உள்ள பல்வேறுபட்ட கற்கைக் கிளைகளில், ஆராய்ச்சியை மேம்படுத்தும் நோக்கத்துக்காகவும், உயர் பட்டங்களுக்கும், வேறு உயர் கல்வித் தகைமைகளுக்கும் இட்டுச்செல்லும் கற்கை நெறிகளை ஏற்பாடு செய்வதற்கும், ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பட்டதாரிப் படிப்புத் துறையொன்றினைத் தாபிக்கலாம்.

(2) ஆணைக்குழுவானது, துறையின் அமைப்பு, தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றையும் அத்தகைய துறையின் துறைத்தலைவரின் நியமனத்திற்கான அல்லது தெரிவுக்கான நடைமுறையையும் கட்டளைச் சட்டத்தின்மூலம் தீர்மானித்தல் வேண்டும்.

(3) பட்டதாரிப் படிப்புத்துறைத் தலைவர் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலரும் அத்தகைய துறையின் கல்விசார், நிருவாகத் தலைவரும் ஆதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்.

29. (அ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "துறையினால் அத்தகைய துறையில் அடங்கியுள்ள கற்கைப்பகுதித் தலைவர்களிலிருந்து தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "துறைச் சபையினால் அத்தகைய துறையில் அடங்கியுள்ள கற்கைப் பகுதித் தலைவர்களிலிருந்து தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் " (1) ஆம் உட்பிரிவுக்கு இணங்க புதிய துறைத் தலைவர் ஒருவர் தெரிவுசெய்யப்படுதலும் வேண்டும். அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட ஆள், அவருக்கு முன்னிருந்தவரின் பதவிக்காலத்தின் முடிவுறுதெஞ்சியுள்ள காலப் பகுதிக்குப் பதவி வகித்தல்வேண்டும்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக " (1) ஆம் உட்பிரிவுக்கு இணங்க புதிய துறைத் தலைவர் ஒருவர் தெரிவுசெய்யப்படுதலும் வேண்டும்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) இச்சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும்போது பதவிவகிக்கும் பல்கலைக்கழகம் ஒன்றின் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்றின் துறைத் தலைவர் எவரும், தம் பதவிக்காலத்தின் முடிவுறுதெஞ்சியுள்ள காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "விரிவுரையாளராக இருத்தல் வேண்டும்" என்பதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் :—

" விரிவுரையாளராக இருத்தல் வேண்டும் :

ஆயின், பேரவையினால் கற்கைப் பகுதித் தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டிராது இருக்குமிடத்து, நியமனத் தேதியிலிருந்து ஒரு மாதத்தை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்குக் கற்கைப் பகுதித்தலைவர் பதவியில் செயலாற்றுவதற்குப் பேராசிரியர் ஒருவரை, இணைப்பேராசிரியர் ஒருவரை, சிரேட்ட விரிவுரையாளர் ஒருவரை அல்லது விரிவுரையாளர் ஒருவரை துணைவேந்தர் நியமிக்கலாம்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் " (1) ஆம் உட்பிரிவுக்கு இணங்க, புதிய பகுதித் தலைவர் ஒருவர் நியமிக்கப்படுதலும் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், அவருக்கு முன்னிருந்தவரின் பதவிக்காலத்தின் முடிவுறுதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக " (1) ஆம் உட்பிரிவுக்கிணங்க, புதிய பகுதித் தலைவர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும் " என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் " நிறுவுதல் " என்னுஞ் சொல்லுக்குப் பதிலாக " நிறுவுவதற்கு ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தல் " என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" (2) பொருளாளர், செயலாளரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, பல்கலைக்கழகக் கல்லூரியின் நிதிகளின் நிருவாகத்துக்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டுமென்பதுடன் விதிகள்மூலம்

விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும், அத்தகைய முறையிலும் அதன் கணக்குகளைப் பேணிவருதலும் வேண்டும். பல்கலைக்கழகக் கல்லூரியின் நிதிகள் அவரது கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவைத் திருத்துதல்.

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(3) துறைச்சபை அல்லது துறைச் சபைகள்; அத்துடன்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவைத் திருத்துதல்.

34. (அ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(1) முகாமைச் சபை (இது இதனகத்துப்பின்னர், "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வரும் ஆட்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் :—

(i) பணிப்பாளர்;

(ii) ஒவ்வொரு துறையினதும் துறைத்தலைவர்;

(iii) கல்விக் கூட்டவையினால் அதன் உறுப்பினர்களிலிருந்து தெரிவுசெய்யப்படும் இரண்டு உறுப்பினர்கள்; அத்துடன்

(iv) மேலேயுள்ள (i) ஆம், (ii) ஆம், (iii) ஆம் பந்திகளின் கீழுள்ள உறுப்பினர்களின் மொத்தத்தொகையோடு ஒன்றைக் கூட்டவரும் எண்ணிக்கையினரான உறுப்பினர்களுக்குச் சமனாகவுள்ள அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்கள்; அத்தகைய எல்லா உறுப்பினர்களும் கல்வி, உயர் தொழில், வணிகம், கைத்தொழில், விஞ்ஞானம் அல்லது நிருவாகம் ஆகிய துறைகளில் சிறப்பான சேவை ஆற்றியுள்ள ஆட்களிலிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (xvi) ஆம் பந்தியை விட்டுவிடுவதன்மூலமும்.".

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தில் எது எப்படியிருப்பினும், முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு பல்கலைக்கழகக் கல்லூரியினதும் முகாமைச் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், இப்பிரிவு நடைமுறைக்கு வரும் தேதியின்மேல், அத்தகைய உறுப்பினர்களாகப் பதவிவகிக்காதொழிதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அப்படிப் பதவி வகிக்காதொழியும் உறுப்பினர் எவரும் மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்களாதல் வேண்டும்.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

35. முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" (1) கல்விக்கூட்டவை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பணிப்பாளர் ;

(ஆ) ஒவ்வொரு துறையினதும் துறைத் தலைவர் ;

(இ) ஒவ்வொரு கற்கைப் பகுதியினதும் தலைவர் ;

(ஈ) பல்கலைக்கழகக் கல்லூரியின் நிரந்தரப் பேராசிரியர் ஒவ்வொருவரும் ;

(உ) நூலகப் பொறுப்பாளர் ;

(ஊ) சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி இணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் மூதவையினால் மூதவையுறுப்பினர்களிலிருந்து பெயர் குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு பிரதிநிதிகள் ; அத்துடன்

(எ) ஒவ்வொரு துறையினதும் நிரந்தர ஆசிரியர்களால் அவர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களும், இவ்வுட்பிரிவின் முற்போந்த பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டவர்களல்லாதோருமான இரண்டு ஆசிரியர்கள்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

36. முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) ஓராம் உட்பிரிவை உடனடுத்துப், பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம், இவ்வுட்பிரிவு, அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவாகப் பயனுறுதல்வேண்டும் :—

" (1அ) பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்றின் ஒவ்வொரு துறையும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்துறைக்கென ஒதுக்கப்பட்ட கற்கைப் பகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்." ;

(2) அப்பிரிவின் (2) ஆம் (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

" (2) பல்கலைக்கழகக் கல்லூரியொன்றின் ஒவ்வொரு துறையும் துறைச்சபையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அது பின்வரும் ஆட்களைக் கொண்டதாயிருத்தல் வேண்டும் :—

(அ) துறையின் துறைத் தலைவர் ;

(ஆ) துறையினை உள்ளடக்கும் எல்லாக் கற்கைப் பகுதிகளினதும் எல்லா நிரந்தரப் பேராசிரியர்களும் இணைப் பேராசிரியர்களும் சிரேட்ட விரிவுரையாளர்களும், விரிவுரையாளர்களும் ;

(இ) துறையின் நிரந்தர உதவி விரிவுரையாளர்களினால் அவர்களிலிருந்து தெரிவுசெய்யப்படும் ஓர் உறுப்பினர் ;

(ஈ) பந்திகள் (ஆ), (இ) என்பவற்றில் குறிப்பிடு செய்யப்பட்டவர்கள் நீங்கலாக, துறையில் கற்பிக்கும் நிரந்தரப் பணியாட்டொகுதியினர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஓர் உறுப்பினர் ;

(உ) துறையின் மாணவர்களால், அவர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட இரண்டு மாணவர்கள் ;

(ஊ) பல்கலைக்கழகக் கல்லூரி இணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் நேரொத்த துறையினால் அதன் பதவிவழி உறுப்பினர்களிலிருந்து பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்று பிரதிநிதிகள் ;

(3) (i) துறைச் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் துறைத் தலைவரே தலைமைவகித்தல் வேண்டும்.

(ii) இரண்டாம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள், இச்சட்டத்தின் 66 ஆம் பிரிவின்கீழ் துறைத்தலைவர் தெரிவுசெய்யப்படுதலோடும், தேர்வுகளோடும் அவை தொடர்பான கருமங்களோடும் சம்பந்தப்பட்ட ஏதேனும் கூட்ட நடவடிக்கைகளில் சமுகமளிக்காதவாறு விலக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு விலக்கப்படுதல் எவ்வாறிருப்பினும், அத்தகைய கூட்டம் எதுவும் முறையாக நடைபெற்றுள்ளதெனக் கருதப்படுதலும் வேண்டும்." ; அத்துடன்

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், " துறை " என்னுஞ் சொல் எங்கெங்கு காணப்படுகிறதோ, அதற்குப் பதிலாக " துறைச்சபை " என்ற சொல்லை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 66அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

37. பின்வரும் புதிய பிரிவானது 66 ஆம் பிரிவை உடனடுத்து உட்புகுத்தப்படுவதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"144 ஆம் பிரிவின் குறித்த சில ஏற்பாடுகள் முதற் செயலாளருக்கும் முதற் பொருளாளருக்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல்.

66அ. பிரிவு 144 இன் (ஆ), (இ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகள் முறையே பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்றின் முதற் செயலளாருக்கும் முதற் பொருளாளருக்கும், அவர்கள் தொடர்பிலும், ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

IXஅ என்னும் புதிய பாகத்தை முதன்மைச் சட்டவாக்கத்தில் உட்புகுத்தல்.

88. IX ஆம் பாகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் IXஅ என்னும் பாகமாகப் பயனுறுதலும் வேண்டும்.

"பாகம் IXஅ"

பட்டம் வழங்கும் நிறுவகங்களின் தத்துவங்கள்

பட்டம் வழங்கும் நிறுவகங்களின் தத்துவங்கள்.

70அ. பிரிவு 25அ என்பதன் கீழான கட்டளையொன்றினால் அங்கீகரிக்கப்பட்டதான பட்டம் வழங்கும் நிறுவகமொன்று குறித்துரைக்கப்பட்ட அதிகாரியின் ஒருப்பாட்டுடன் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அத்தகைய நிறுவகம் தொடர்பில் 25அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய கற்கைக் கிளைகளில் மாணவர்களை அனுமதித்தலும் போதனைக்கு ஏற்பாடு செய்தலும்;

(ஆ) அத்தகைய கற்கைக் கிளைகளின் பாடநெறிகளில் வினைத்திறன் பெற்றுள்ள ஆட்களை ஆய்ந்தறியும் நோக்கங்களுக்கென பரீட்சைகள் நடத்துதல்;

(இ) அத்தகைய கற்கைக் கிளைகளின் பாடநெறிகளில் போதனைகளை மேற்கொண்டு அத்தகைய பரீட்சைகளில் சித்தியெய்தியுள்ள ஆட்களுக்குப் பட்டங்களையும் டிப்புளோமாக்களையும் சான்றிதழ்களையும் வேறு கல்விசார் சிறப்புப் பட்டங்களையும் அளித்தலும் உரித்தாக்குதலும்;

(ஈ) அதன் மேற்பார்வையின் கீழும் அத்துடன் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியால் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும் ஆராய்ச்சி நடத்தியுள்ள ஆட்களுக்குப் பட்டங்களை அளித்தலும் உரித்தாக்குதலும்.

குறித்துரைக்கப்பட்ட அதிகாரியின் நியமனம்.

70ஆ. (1) இச்சட்டத்தின் இப்பாகத்தினது நோக்கங்களுக்கு குறித்துரைக்கப்பட்ட அதிகாரியொருவராக இருப்பதற்கென அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையொன்றின்மூலம் ஆளெவரையும் பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து நியமிக்கலாம்.

(2) குறித்துரைக்கப்பட்ட அதிகாரி, அவரது தத்துவங்களுள் எவற்றையும் அமைச்சரின் அங்கீகாரத்துடன் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களைக் கொண்ட அத்தகைய நிலையியற் குழுக்களுக்கு அல்லது வேலைக்கேற்ற குழுக்களுக்கு அல்லது அத்தகைய அதிகாரியால் நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்குக் கையளிக்கலாம்.

அமைச்சர் 25அ என்னும் பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குமுன் அறிக்கை பெறுதல்.

70இ. (1) அமைச்சரானவர், நிறுவகமொன்று தொடர்பில் 25அ என்னும் பிரிவின்கீழ் பட்டம் வழங்கும் நிறுவகக்கட்டளையொன்றை ஆக்குமுன் அத்தகைய நிறுவகம் தொடர்பில் அதன்கண் ஏற்பாடு செய்யப்படும் கல்வி வசதிகள் உட்பட, அறிக்கை ஒன்றை குறித்துரைக்கப்பட்ட அதிகாரியிடமிருந்து பெறுதல் வேண்டும்.

(2) அமைச்சர், குறித்துரைக்கப்பட்ட அதிகாரியுடனான கலந்தாலோசனையுடன், அத்தகைய நிறுவகத்தால் அதன் தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல் பற்றிப் பொதுவான அல்லது சிறப்புப் பணிப்புகளை பட்டம் வழங்கும் நிறுவகம் ஒவ்வொன்றுக்கும் வழங்கலாம் என்பதுடன் அத்தகைய ஒவ்வொரு பணிப்புடனும் இணங்கியொழுகுதல் அத்தகைய நிறுவகம் ஒவ்வொன்றினதும் கடமையாதலும் வேண்டும்.

குறித்துரைக்கப்பட்ட அதிகார சபையின் தத்துவங்கள்.

70ஈ. குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையானது அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாகப் பின்வரும் தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும் :—

(i) பட்டம் வழங்கும் நிறுவகங்களில் உள்ள கற்கை நெறிகளுக்கு ஆட்களை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளைத் தீர்மானித்தல் ;

(ii) பட்டம் வழங்கும் நிறுவகங்கள் ஒவ்வொன்றுடனுமான கலந்தாலோசனையுடன், அத்தகைய நிறுவகம் தொடர்பாக 25அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் விதித்துரைக்கப்பட்டவாறான கற்கைக் கிளைகளிலான கற்கைநெறிகளாக, அத்தகைய நிறுவகங்களில் ஏற்பாடு செய்யப்படவேண்டியனவான கற்கை நெறிகளைப் பின்பற்றிய ஆட்கள், அதனகத்துத் தேர்ச்சியைப் பெற்றுள்ளார்களா என்பதை நிச்சயப்படுத்த வேண்டிய பரீட்சைகள், அத்துடன் அத்தகைய நிறுவகங்களில் வழங்கப்படவேண்டிய பட்டங்கள், டிப்புளோமாக்கள், அத்துடன் ஏனைய கல்விசார் சிறப்புக்கள் என்பவற்றைத் தீர்மானித்தல் ;

(iii) பட்டம் வழங்கும் நிறுவகங்கள் ஒவ்வொன்றுடனுமான கலந்தாலோசனையுடன் அத்தகைய நிறுவகம் ஒவ்வொன்றுக்கும் ஆண்டுதோறும் அனுமதிக்கப்படக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையையும், அத்தகைய நிறுவகங்களிலுள்ள வெவ்வேறு கற்கை நெறிகளுக்கான அந்த எண்ணிக்கையின் பங்கீட்டையும் தீர்மானித்தல் ;

(iv) பட்டம் வழங்கும் நிறுவகத்தில் கற்பிக்கும் பணியாட்டொகுதியினரின் தகைமைகளைத் தீர்மானித்தல் ;

(v) அத்தகைய பட்டம் வழங்கும் நிறுவகங்களில் ஏற்பாடு செய்யப்படவேண்டிய வசதிகளையும், பேணப்படவேண்டிய கல்விசார் தரங்களையும் தீர்மானித்தல் ;

(vi) இச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல் ;

இச்சட்டம் முதனிலைவற்றின் கீழும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையின் பணிப்பின் கீழும் எடுக்கப்படும் நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

70உ. (1) தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும்—

(அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் ஏதோதான சாதனத்தின்கீழ், குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையினால் நல்லெண்ணத்துடன் புரியப்படும் அல்லது புரியப்படுவதாகக் கொள்ளப்படும் செயல் எதற்காகவும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபைக்கு எதிராக ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் ஏதோதான சாதனத்தின்கீழ், அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையின் பணிப்பின்மீது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையின் பணியாட்டொகுதியின் உறுப்பினர் எவராலும் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராக

எழுதல் ஆகாது.

(2) குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபைக்கு எதிராகக் கொணரப்படும் வழக்கு எதிலும், குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையின் பணியாட்டொகுதி உறுப்பினரொருவரின் உடலுக்கு எதிராகவோ அல்லது ஆதனத்திற்கு எதிராகவோ எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல்.

39. முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் " கட்டளைச்சட்டத்தினால் விதிக்கப்பட்ட " என்னும் சொற்களுக்குப் பதிலாக " விதிகளினால் விதிக்கப்பட்ட " என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

"செய்யப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும்

"செய்யப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறுயினும் 72 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் உயர்கல்வி நிறுவனமொன்றின் ஆளும் அதிகாரி, ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன், அத்தகைய ஏதேனும் நிறுவனத்தில் ஆசிரியர் பதவிகளுக்கு தத்தமது பாடங்களில் ஏற்கனவே சிறப்பறிவு பெற்ற அனுபவம் உள்ள ஆட்களை அத்தகைய ஆட்களினாலும் ஆளும் அதிகாரியினாலும் உடன்பட்டுக்கொள்ளப் படக்கூடியவாறுன அத்தகைய காலப்பகுதிக்கும் அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீதும் நியமிக்கலாம்." ; அத்துடன்

(2) "கட்டளைச்சட்டத்தினால்" என்னுஞ் சொற்கள் அப்பிரிவில் எங்கெங்கு காணப்படுகின்றனவோ அங்கங்கு அச்சொற்களுக்குப் பதிலாக "விதிகளினால்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்."

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

40. முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

*"ஆசிரியர் பதவிக்கான நியமனம்.*

72. (1) ஆசிரியர் பதவிக்கான நியமனம் ஒவ்வொன்றும் முதலில் மூன்றாண்டு காலப்பகுதிக்குத் தகுதிகாண் நிலையிலிருத்தல் வேண்டும். இக்காலப்பகுதி ஒரு முறைக்கு ஓராண்டாக மேலும் மூன்றாண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு, அத்தகைய ஆசிரியர் சேவைசெய்யும் உயர்கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபையால் நீடிக்கப்படலாம் :

ஆயின், நியமனமானது பேராசிரியர் அல்லது நூலகப் பொறுப்பாளர் பதவிக்கானதாக இருந்து, அத்துடன் நியமிக்கப்பட்டவர் அவ்வுயர்கல்வி நிறுவனத்தில் வேறேதேனும் ஆசிரியர் பதவியில் முன்னரே உறுதிப்படுத்தப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய நியமனமானது, முதலில் ஓராண்டுக்கு மட்டுமான தகுதிகாண் நிலைக் காலப்பகுதிக்கானதாதல் வேண்டும் :

ஆயின், மேலும், நியமனமானது பேராசிரியர் அல்லது நூலகப் பொறுப்பாளர் அல்லாத ஆசிரியர் பதவி ஒன்றுக்கானதாகவும் அத்துடன் நியமிக்கப்பட்டவர் அவ்வுயர்கல்வி நிறுவனத்தில் வேறேதேனும் ஆசிரியர் பதவியில் முன்னரே உறுதிப்படுத்தப்பட்டுமிருப்பின் அத்தகைய நியமனமானது தகுதிகாண் காலப்பகுதி எதற்கும் அமைவானதாகாது.

(2) தகுதிகாண் நிலை அடிப்படையில் செய்யப்படும் நியமனம் ஒவ்வொன்றும் விதிகளால் விதித்துரைக்கப் பட்ட தோதான ஆட்சேர்ப்புத் திட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறான, பதவியில் உறுதிப்படுத்தல் பற்றிய அத்தகைய தேவைப்பாடுகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**41.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவானது, அப்பிரிவின் "அமைந்ததாதல் வேண்டும்." என்னுஞ் சொற்களுக்குப் பதிலாகப் பின் வருவனவற்றை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :

"அமைந்ததாதல் வேண்டும் :

ஆயின், ஆணைக்குழுவின் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் சேவையில உள்ளவரும் தம் நியமனத்தில் உறுதிசெய்யப்பட்டவரும் ஆன ஊழியர் ஒருவர், 66அ, 144 என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகளின் கீழல்லாது, விடயத்துக்கேற்றவாறு ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் பதிவாளர், செயலாளர், நிதியாளர் அல்லது பொருளாளர் பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய நியமனமானது, முதலில் ஓராண்டு காலப்பகுதிக்குப் பதில் நியமனமாயிருத்தல் வேண்டும், அத்துடன் அதற்குப் பின்னர் உயர்கல்வி நிறுவனத்தின் ஆளும் அதி காரசபையினது உறுதிப்படுத்தலுக்கு அமைவானதாதலும் வேண் டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**42.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவானது "ஆணைக்குழு வில் அல்லது உயர்கல்வி நிறுவனம் ஒன்றில்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "உயர்கல்வி நிறுவனம் ஒன்றில்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**43.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவானது "கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்" என்னுஞ் சொற்களுக் குப் பதிலாக "விதிகளினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**44.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவானது இத்தால் நீக் கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"பொருள் கோடல்.

79. இப்பாகத்தில் "ஆசிரியர்" என்பது நூலகப் பொறுப்பாளரையும், பிரதி நூலகப் பொறுப்பாளரை யும், சிரேஷ்ட உதவி நூலகப் பொறுப்பாளரையும், உதவி நூலகப் பொறுப்பாளரையும் உள்ளடக்குவ தாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**45.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவானது இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "வேறுவகையாகத் தண்டிக் கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "துர்நடத்தைக் காக, திறைமயின்மைக்காக அல்லது கடமையைக் கைவிட்ட மைக்காக வேறுவகையாகத் தண்டிக்கப்பட்ட" என்னுஞ் சொற் களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "உயர்கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபைக்கு" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "உயர்கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவைத் திருத்துதல்.

46. முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவானது, "ஆணைக்குழுவானது தவிசாளர்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "ஆணைக்குழு" என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவைத் திருத்துதல்.

47. முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவென, மீள இலக்கமிடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(2) இச்சட்டத்தின்கீழ் மேன்முறையீட்டுச் சபையினால் ஆக்கப்படும் ஒவ்வொரு கட்டளைச்சட்டமும் கசற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அதில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 89 ஆம் பிரிவைத் திருத்துதல்.

48. முதன்மைச் சட்டவாக்கத்தின் 89 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) "உதவுதொகை செலுத்துநர்" என்னும் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"உதவுதொகை செலுத்துநர்" என்பது சகாய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துகின்ற ஆணைக்குழுவின் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றின் அல்லது நிறுவகமொன்றின் பணியாட்டொகுதியின் எவரேனும் உறுப்பினர் எனப் பொருள்படும்;

அத்துடன்

(ஆ) "ஆசிரியர்" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :—

"ஆசிரியர்" என்பது நூலகப் பொறுப்பாளர், பிரதி நூலகப் பொறுப்பாளர், சிரேட்ட உதவி நூலகப் பொறுப்பாளர், உதவி நூலகப் பொறுப்பாளர் ஆகியோரை உள்ளடக்குவதாகக் கருதப்படல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**49.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

" சகாயநிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யு முன்னரான கழிப்பனவுகள்.

*94.* இப்பாகத்தின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எது எப்படியிருப்பினும், வேறேதேனும் உரிமைக்கு அல்லது பரிகாரத்துக்குப் பங்கமின்றியும்—

(அ) உதவுதொகை செலுத்துநர் ஒருவர் ஆணைக்குழுவால் அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றினால் தொழிலுக்கமர்த்தப்பட்டிருந்த காலப் பகுதியின் போது அவரது நேர்மையின்மை அல்லது அசட்டை காரணமாக, அத்தகைய ஆணைக்குழுவுக்கு அல்லது உயர் கல்வி நிறுவனத்திற்கு ஏற்பட்ட ஏதேனும் இழப்பின் அல்லது சேதத்தின் அளவும் ;

(ஆ) விடயத்திற்கேற்ப, ஆணைக்குழுவிடமிருந்து அல்லது ஓர் உயர்கல்வி நிறுவனத்திடமிருந்து அல்லது அரசாங்கத்திடமிருந்து உதவுதொகை செலுத்துநர் எடுத்த ஏதேனும் கடன்மீது வருமதியான கொடுப்பனவுகளும் ; அத்துடன்

(இ) உதவுதொகை செலுத்துநரால் நிறைவேற்றப்பட்ட எந்த முறியின், உடன்படிக்கையின் அல்லது சாதனத்தின் ஏற்பாடுகளின்கீழான வருமதிகள் சகாயநிதியத்தில் அவரது வரவில் உள்ளதொகைமீது பொறுப்பாக இருத்தல் வேண்டுமென்று அவர் உடன்படுகின்றாரோ, அவ் வருமதிகளும்

அந்த உதவுதொகை செலுத்துநரின் சகாயநிதியக் கணக்கில் வரவில் உள்ள தொகைமீது முதற் பொறுப்பாதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய அளவு, கொடுப்பனவுகள், வருமதிகள் ஆகியன 93 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படும்போது கழிக்கப்படலாம். ".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 97அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**50.** பின்வரும் புதிய பிரிவானது 97 ஆம் பிரிவை உடனடுத்து உட்புகுத்தப்படுவதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 97அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

" ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டத்தின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிப்பு.

*97அ.* 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஏற்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அல்லது உயர்கல்வி நிறுவனம் எதற்கும் ஏற்புடையனவாகா. ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவை திருத்துதல்.

51. முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "ஒரு பல்கலைக்கழக அல்லது திறந்த பல்கலைக்கழக நிதியாளரின் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரிப் பொருளாளரின் கடமையாதல் வேண்டும்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "விடயத்திற்கேற்றவாறு ஒரு பல்கலைக்கழக அல்லது திறந்த பல்கலைக்கழக நிதியாளரின் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியின் அல்லது உயர் கல்வி நிலையத்தின் பொருளாளரின் கடமையாதல் வேண்டும்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

"(அ) அத்தகைய பல்கலைக்கழகத்தின் திறந்த பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழகக் கல்லூரியின் அல்லது உயர் கல்வி நிலையத்தின் கணக்குகளை வைத்திருத்தலும் ;" ;

(3) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தில், "திறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழக கல்லூரியின்" என்ற சொல்லமைப்பு எங்கெங்கு காணப்படுகின்றதோ, அங்கங்கு அதற்குப் பதிலாக "திறந்த பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழகக் கல்லூரியின் அல்லது உயர் கல்வி நிறுவனத்தின்" என்ற சொல்லமைப்பை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவை திருத்தல்.

52. முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவானது, "திறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழக கல்லூரியின்" என்னுஞ் சொல்லமைப்பு எங்கெங்கு காணப்படுகின்றதோ, அங்கங்கு அதற்குப் பதிலாக, "திறந்த பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழகக் கல்லூரியின் அல்லது உயர் கல்வி நிலையத்தின்" என்னுஞ் சொல்லமைப்பை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 103 ஆம் பிரிவைத் திருத்துதல்.

53. முதன்மைச் சட்டவாக்கத்தின் 103 ஆம் பிரிவானது, "திறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியின்" என்னுஞ் சொல்லமைப்பு எங்கெங்கு காணப்படுகிறதோ, அங்கங்கு அதற்குப் பதிலாக திறந்த பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழகக் கல்லூரியின் அல்லது உயர் கல்வி நிலையத்தின்" என்னுஞ் சொல்லமைப்பை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவைத் திருத்துதல்.

54. முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவானது, "திறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியின்" என்னுஞ் சொல்லமைப்பு எங்கெங்கு காணப்படுகிறதோ, அங்கங்கு அதற்குப் பதிலாக "திறந்த பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழகக் கல்லூரியின் அல்லது உயர் கல்வி நிலையத்தின்" என்னுஞ் சொல்லமைப்பை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**55.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 105 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 105 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) " விடயத்துக்கேற்றவாறு ஒரு பல்கலைக்கழகத்தின் அல்லது திறந்த பல்கலைக்கழகத்தின் நிதியாளர் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியின் பொருளாளர் " என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக " விடயத்துக்கேற்றவாறு ஒரு பல்கலைக்கழகத்தின் அல்லது திறந்த பல்கலைக்கழகத்தின் நிதியாளர் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியொன்றின் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றின் பொருளாளர் " என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) " திறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது அப்பல்கலைக்கழகக் கல்லூரியின் " என்னுஞ் சொல்லமைப்புக்குப் பதிலாக " திறந்த பல்கலைக்கழகத்தின், அப்பல்கலைக்கழகக் கல்லூரியின் அல்லது உயர் கல்வி நிலையத்தின் " என்னுஞ் சொல்லமைப்பை இடுவதன்மூலமும்.

**56.** முதன்மைச் சட்டவாக்கத்தின் XIV ஆம் பாகத்தில் காணப்படும் " **மாணவர் அவைகளும் சங்கங்களும்** " என்னுஞ் தலைப்புக்குப் பதிலாகப் பின்வரும் தலைப்பு இத்தால் இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் XIV ஆம் பாகத்தில் உள்ள தலைப்பை மாற்றீடு செய்தல்.

" **மாணவர் தொடர்புப் பேரவைகளும் மற்றைய சங்கங்களும்.** ".

**57.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 112 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 112 ஆம் பிரிவைத் மாற்றீடு செய்தல்.

" மாணவர் தொடர்புப் பேரவை.

112. ஒவ்வோர் உயர் கல்வி நிறுவனமும் கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பணியாட்டொகுதியினரையும் மாணவர்களையும் கொண்ட மாணவர் தொடர்புப் பேரவையொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்; அதில் அந்த உயர்கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்களாகவும் மாணவர்களாகவும் அப்போதைக்குள்ள ஆட்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டோர் அடங்கியிருத்தலும் வேண்டும். ".

**58.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவை நீக்குதல்.

**59.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 114 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 114 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

" வேறு ஒழுங்கமைப்புடனான அல்லது குழுவுடனான இணைப்பு.

114. (1) பிரிவு 115 என்பதன்கீழ் அங்கீகரிக்கப்படுகின்ற மாணவர் தொடர்புப் பேரவையொன்றானது அல்லது எதேனும் ஒன்றியமானது, சங்கமானது அல்லது வேறு கழகமானது எவ்வுயர் கல்வி நிறுவனத்துக்

குரியதாகவிருக்கின்றதோ, அவ்வுயர் கல்வி நிறுவனத்துக்கு வெளியே, எந்த ஒழுங்கமைப்புடனும் அல்லது எந்தக் குழுவுடனும் இணைப்பு எதனையும் வைத்திருத்தல் ஆகாது :

ஆயின், எவ்வாறாயினும், உயர் கல்வி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அலுவலரானவர், ஒழுங்கமைப்பு அல்லது குழு எதனுடனுமான இணைப்பானது மாணவர் தொடர்புப் பேரவையின் அல்லது ஒன்றியத்தின், சங்கத்தின், அல்லது வேறு கழகத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்லும் என அபிப்பிராயப்படும் விடயங்களில் அத்தகைய இணைப்புக்கென அவர் எழுத்திலான அங்கீகாரம் வழங்கலாம்.

(2) மாணவர் தொடர்புப் பேரவை அல்லது 115 ஆம் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சங்கம், சபை அல்லது வேறு கழகம் ஏதேனும் அரசியல் ஒழுங்கமைப்புடன் தொடர்பு வைத்திருத்தல் ஆகாது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

60. முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "அவற்றின் பதவி வகிப்போரை" என்பது தொடங்கி, அப்பந்தி முடியவுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "பதவி வகிப்போரின் கடமைகளையும் பணிகளையும் துணைவிதிகளின் மூலம் விதித்துரைக்கலாம்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 116 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

61. முதன்மைச் சட்டவாக்கத்தின் 116 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "மாணவர் அவை" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக "மாணவர் தொடர்புப் பேரவை" என்னும் சொல்லமைப்பை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் ஓரக்குறிப்பில் "மாணவர் அவை" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக "மாணவர் தொடர்புப் பேரவை" என்னும் சொல்லமைப்பை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 117 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

62. முதன்மைச் சட்டவாக்கத்தின் 117 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(1) அப்பிரிவின் (ii) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

"(ii) ஒவ்வொரு மாணவர் தொடர்புப் பேரவையினதும் கூட்டமைவு ;" ;

(2) அப்பிரிவின் (iii) ஆம் (iv) ஆம் பந்திகளை நீக்குவதன்மூலமும் ;

(3) "மாணவர் அவை" என்னும் சொல்லமைப்பு அப்பிரிவில் எங்கெங்கு காணப்படுகிறதோ அங்கெல்லாம் அதற்குப் பதிலாக "மாணவர் தொடர்புப் பேரவை" என்னும் சொல்லமைப்பை இடுவதன்மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன்மூலமும் :—

"மாணவர் தொடர்புப் பேரவையின் அமைப்பையும், கடமைகளையும், பணிகளையும் ஆணைக்குழு விதித்துரைத்தல்.".

63. முதன்மைச் சட்டவாக்கத்தின் 118 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 118 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்,

(அ) "ஏதேனும் மாணவர் அவை அல்லது ஒன்றியம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் ஒன்றியம்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) "பங்கமுண்டாக்கும் வகையில் நடந்துகொண்டால் அல்லது இச்சட்டத்தை" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "பங்கமுண்டாக்கும் வகையில் நடந்துகொண்டால் அல்லது அந் நிறுவனத்தின் முறையான நிருவாகத்தைத் தடைசெய்தால் அல்லது இச்சட்டத்தை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(இ) "அத்தகைய மாணவர் அவை ஒன்றியம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய ஒன்றியம்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் ஓரக்குறிப்பில் "ஒரு மாணவர் அவையை, ஒன்றியத்தை" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "ஓர் ஒன்றியத்தை" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்.

64. முதன்மைச் சட்டவாக்கத்தின் XVI ஆம் பாகத்தில் காணப்படும் "அரசாங்கக் குடிமனைகள் (ஆட்சி மீளப் பெறுதல்) சட்டத்தை ஏற்புடையதாக்கல்" என்னும் தலைப்புக்குப் பதிலாகப் பின்வரும் தலைப்பு இத்தால் இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் XVI ஆம் பாகத்தில் காணப்படும் தலைப்பை மாற்றீடு செய்தல்.

"அரசாங்கக் குடிமனைகள் (ஆட்சிமீளப் பெறுதல்) சட்டத்தையும் அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தையும் ஏற்புடையனவாக்கல்.".

65. முதன்மைச் சட்டவாக்கத்தின் 120 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் (ii) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 120 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(அ) "தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது விடயத்துக்கேற்றவாறு ஆணைக்குழுவின் செயலாளர் என அல்லது பல்கலைக்கழகமொன்றின் பதிவாளர் என அல்லது பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்றின்

செயலாளர் எனப் பொருள்படும் என்பதுடன் இது அத்தகைய பதவியில் பதில் கடமையாற்றும் ஆள் எவரையும் உள்ளடக்கும்; அத்துடன்".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 120அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

66. பின்வரும் புதிய பிரிவானது 120 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது, முதன்மைச் சட்டவாக்கத்தின் 120அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"பல்கலைக் கழகக் காணிகளுக்கு 1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தை ஏற்புடையதாக்குதல்.

120அ. (1) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 7 ஆம் இலக்க அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தின் ஏற்பாடுகள் (2) ஆம் உட்பிரிவில் தரப்பட்ட திரிபுகளுக்கு அமையப் பல்கலைக்கழகக் காணிகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தின் ஏற்பாடுகள் பல்கலைக்கழகக் காணிகளுக்கு ஏற்புடைத்தாகும்போது பின்வருமாறு திரிபுபடுத்தப்படுகின்றன :—

(i) அச்சட்டத்தில் "அரச காணிகள்" என்னும் சொற்கள் எங்கெங்கு காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் அவற்றுக்குப் பதிலாக "பல்கலைக்கழகக் காணிகள்" என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்;

(ii) அதன் 18 ஆம் பிரிவில்,

(அ) "தகுதிவாய்ந்த அதிகாரி" என்னும் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணம் இடப்படுதல் வேண்டும் :— "தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது விடயத்துக்கேற்றவாறு ஆணைக்குழுவின் செயலாளர் என அல்லது பல்கலைக்கழகமொன்றின் பதிவாளர் என அல்லது பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்றின் செயலாளர் எனப் பொருள்படும் என்பதுடன் இது அத்தகைய பதவியில் பதில் கடமையாற்றும் ஆள் எவரையும் உள்ளடக்கும்;"; அத்துடன்

(ஆ) "அரச காணிகள்" என்னும் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணம் இடப்படுதல் வேண்டும் :—

"பல்கலைக்கழகக் காணிகள்" என்பது எக்காணிகளுக்கு ஆணைக்குழு அல்லது உயர் கல்வி நிறுவனம் சட்டப்படி உரித்துடையதோ, அல்லது

எக்காணிகள் அவற்றின்மீதுள்ள அல்லது எக்கட்டடங்களுடனும் அவற்றுடன் சேர்ந்த அல்லது அவற்றுக்கான எல்லா உரிமைகளுடனும் அக்கறைகளுடனும் சிறப்புரிமைகளுடனும் ஆணைக்குழுவினால் அல்லது உயர் கல்வி நிறுவனத்தினால் விற்கப்படலாமோ அக்காணிகள் என்று பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 121 ஆம் பிரிவைத் திருத்துதல்.

67. முதன்மைச் சட்டவாக்கத்தின் 121 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) "ஆணைக்குழுவிற்கு, மேன்முறையீட்டுச் சபைக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆணைக்குழுவிற்கு, குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபைக்கு, மேன்முறையீட்டுச் சபைக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் ஓரக் குறிப்பில் உள்ள "ஆணைக்குழுவினதும், மேன்முறையீட்டுச் சபையினதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆணைக்குழுவினதும், குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையினதும், மேன்முறையீட்டுச் சபையினதும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவைத் திருத்துதல்.

68. முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "ஆணைக்குழுவினதும் மேன்முறையீட்டுச் சபையினதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆணைக்குழுவினதும், குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையினதும் மேன்முறையீட்டுச் சபையினதும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் ஓரக் குறிப்பில் உள்ள "ஆணைக்குழுவினதும், மேன்முறையீட்டுச் சபையினதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆணைக்குழுவினதும், குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையினதும், மேன்முறையீட்டுச் சபையினதும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 123 ஆம் பிரிவைத் திருத்துதல்.

69. முதன்மைச் சட்டவாக்கத்தின் 123 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "ஆணைக்குழுவும் மேன்முறையீட்டுச் சபையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆணைக்குழுவும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையும் மேன்முறையீட்டுச் சபையும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் ஓரக் குறிப்பில் உள்ள "ஆணைக்குழுவும், மேன்முறையீட்டுச் சபையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆணைக்குழுவும், குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையும், மேன்முறையீட்டுச் சபையும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவைத் திருத்துதல்.

70. முதன்மைச் சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவானது, "பல்கலைக் கழகக் கல்லூரிகளைப் பரிசீலனைசெய்யும் நோக்கத்துக்காகவும், அத்தகைய விடயங்களில் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை அளிப்பதற்காகவும்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "பல்கலைக் கழகங்களை, திறந்த பல்கலைக் கழகத்தினை அல்லது பல்கலைக் கழகக் கல்லூரிகளைப் பரிசீலனை செய்யும் நோக்கத்துக்காகவும், அத்தகைய விடயங்களில் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை அளிப்பதற்காகவும்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவைத் திருத்துதல்.

71. முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவு அப்பிரிவிலுள்ள "ஆணைக்குழு, மேன்முறையீட்டுச் சபை" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "ஆணைக்குழு, குறித்துரைக்கப்பட்ட அதிகார சபை, மேன்முறையீட்டுச் சபை" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 127 ஆம் பிரிவைத் திருத்துதல்.

72. முதன்மைச் சட்டவாக்கத்தின் 127 ஆம் பிரிவு அப்பிரிவிலுள்ள "ஆணைக்குழு, மேன்முறையீட்டுச் சபை" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "ஆணைக்குழு, குறித்துரைக்கப்பட்ட அதிகார சபை, மேன்முறையீட்டுச் சபை" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவைத் திருத்துதல்.

73. முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "திறந்த பல்கலைக்கழகம் அல்லது புத்த சாவகர் தரும பீடம்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "திறந்த பல்கலைக்கழகம், உயர் கல்வி நிலையம், பட்டம் வழங்கும் நிறுவகம் அல்லது புத்த சாவகர் தரும பீடம்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 134 ஆம் பிரிவை நீக்குதல்.

74. முதன்மைச் சட்டவாக்கத்தின் 134 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 137 ஆம் பிரிவைத் திருத்துதல்.

75. முதன்மைச் சட்டவாக்கத்தின் 137 ஆம் பிரிவு இத்தால் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலுள்ள, "மேன்முறையீட்டுச் சபையும், ஒரு பல்கலைக் கழகத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மேன்முறையீட்டுச் சபையும், குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையும், ஒரு பல்கலைக்கழகத்தின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் உள்ள, "மேன்முறையீட்டுச் சபையோடு அல்லது ஒரு பல்கலைக்கழகத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மேன்முறையீட்டுச் சபையோடு, குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையோடு அல்லது ஒரு பல்கலைக்கழகத்தின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்—

(அ) "மேன்முறையீட்டுச் சபையால், அல்லது ஒரு பல்கலைக் கழகத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மேன்முறையீட்டுச் சபையால், குறித்துரைக்கப்பட்ட அதிகார சபையால் அல்லது ஒரு பல்கலைக்கழகத்தின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) "மேன்முறையீட்டுச் சபையினால், அதிகார சபையினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மேன்முறையீட்டுச் சபையினால், குறித்துரைக்கப்பட்ட அதிகார சபையினால், அதிகாரசபையினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

76. முதன்மைச் சட்டவாக்கத்தின் 142 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 142 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை அதன் (3) ஆம் உட்பிரிவென மீள இலக்கமிடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:—

"(4) (186 ஆம் அத்தியாயமான) இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டம் நீக்கப்படும் தேதிக்கு முன்னர் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் அல்லது 1966 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க உயர்கல்விச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகத்தில்—

(i) ஓய்வூதியங்கள்மீதான குறிப்புக்களின்கீழ் ஓய்வூதியத்துக்கு உரித்துடையதென வெளிப்படுத்தப்பட்ட பதவியொன்றை பகிரங்க சேவையில் வகிக்கும்போது, அல்லது

(ii) உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதியத் திட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் ஓய்வூதியத்துக்குரித்துடையதென வெளிப்படுத்தப்பட்ட பதவியொன்றை உள்ளூராட்சிச்சேவையில் வகிக்கும்போது,

எவரேனும் ஆள், நியமிக்கப்பட்டுள்ளவிடத்தும், அத்தகைய ஆள்—

(அ) அத்தகைய கட்டளைச்சட்டத்தை நீக்கஞ்செய்து மாற்றீடு செய்த 1966 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க உயர்கல்விச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகத்தில் 99 ஆம் பிரிவின் பயனைக்கொண்டும் அத்துடன், 1966 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்கஞ்செய்து மாற்றீடு செய்த 1972 ஆம் ஆண்டின் (1) ஆம் இலக்க இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகத்தில் 81 ஆம் பிரிவின் பயனைக்கொண்டும் அத்தகைய பதவியைத் தொடர்ந்தும் வகித்துள்ளவிடத்தும், அத்துடன்

(ஆ) 1972 ஆம் ஆண்டின் (1) ஆம் இலக்கச் சட்டத்தினை நீக்கஞ் செய்து மாற்றீடு செய்த 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் பல்கலைக்கழகத்தில் 141 ஆம் பிரிவின் பயனைக்கொண்டு அத்தகைய பதவியைத் தொடர்ந்து வகித்துவருகின்றவிடத்தும் அல்லது வகித்துள்ள விடத்தும், அத்துடன்

(இ) அத்தகைய கட்டளைச்சட்டத்தின்கீழ் அல்லது சட்டங்களின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் சகாய நிதித் திட்டத்துக்கு உதவு தொகை செலுத்தாதிருந்துள்ளவிடத்தும்,

இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டில் முரணுகை எது எவ்வாறிருப்பினும், அத்தகைய பல்கலைக்கழகம் ஒவ்வொன்றிலும் எவரேனும் அத்தகைய ஆளினால் ஆற்றப்பட்ட சேவைகளின் மொத்தக் காலப்பகுதி, ஓய்வூதியம் பெறற்பாலதான சேவையாகக் கணிக்கப்படுதல் வேண்டும். அத்துடன், விடயத்துக்கேற்றுப்போல, ஓய்வூதியம் மீதான குறிப்புக்களின் அல்லது உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதியத்திட்ட ஒழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக அத்தகைய ஆள் ஓய்வூதியம் பெறற்பாலதான பதவியொன்றை வகிப்பதாக அல்லது வகித்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க, அத்தகைய எவரேனும் ஆளின் ஓய்வூதியம் தொடர்பாக திரட்டு நிதியத்துக்கு அத்தகைய ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினாலும் செலுத்தப்பட்ட எவையேனும் உதவுதொகைகள், அத்தகைய பதவி விடயத்துக்கேற்றுப்போல ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புகளின்கீழ் அல்லது உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதியத் திட்ட ஒழுங்குவிதிகளின்கீழ் ஓய்வூதியம் பெறற்பாலதான பதவி ஒன்றாக இருந்தாற்போன்று செல்லுபடியுள்ள வகையில் அளிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக—

“பல்கலைக்கழகம்” என்பது

(அ) இலங்கைப் பல்கலைக்கழகக் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக் கழகம் எனவும்;

(ஆ) 1966 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க உயர்கல்விச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் பல்கலைக் கழகம் எனவும்;

(இ) 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக் கழகம் எனவும்;

(ஈ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உயர்கல்வி நிறுவனம் எனவும் பொருள்படும்”.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 147 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 147 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) "துணைச்சட்டம்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம்:—

"பட்டம் வழங்கும் நிறுவகம்" என்பது 25அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நிறுவகம் என்று பொருள்படும் ;

(2) "உயர்கல்வி நிறுவனம்" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் :—

"உயர்கல்வி நிறுவனம்" என்பது, இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் ஒரு பல்கலைக்கழகம், வளாகம், திறந்த பல்கலைக்கழகம், பல்கலைக்கழகக் கல்லூரி, அல்லது உயர்கல்விக்கான நிலையம் எனப் பொருள்படும் ;

(3) "விதி" என்பதன் வரைவிலக்கணத்தில் அதன்கண் "மேன்முறையீட்டுச் சபை அல்லது ஓர் அதிகாரி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மேன்முறையீட்டுச் சபை, குறித்துரைக்கப்பட்ட அதிகாரி அல்லது ஓர் அதிகாரி" என்னும் சொற்களை இடுவதன் மூலம் ;

(4) "விதி" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம் :—

"குறித்துரைக்கப்பட்ட அதிகாரி" இச்சட்டத்தின் 70ஆ என்னும் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட அதிகாரி ஒருவராக நியமிக்கப்பட்ட ஆளொருவராக இருத்தல் வேண்டும் ;

(5) அப்பிரிவில் காணப்படும் "நிருவாகப் பணியாட்டொகுதி", "கல்வித்துறை சாராப் பணியாட்டொகுதி", "வேறு ஊழியர்" அத்துடன் "நியதிச்சட்டம்" ஆகியவற்றிற்கான வரைவிலக்கணங்களை விட்டுவிடுவதன்மூலமும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 180; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன் வரவிருக்கும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

213876

1988-10-07

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 1988 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

[1988, ஜூலை 15 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

1988, ஜூலை மாதம் 15 தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30 தபாற் செலவு : சதம் 75

ஏ 103593—2,900 (06/88)

213876

1988 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்)
சட்டம்.

1988-10-07
SRI LANKA

[1988, ஜூலை மாதம் 15 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஒ. 31/88
1941

## 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

1. இச்சட்டம், 1988 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடிய வாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் 25அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவு, அதிலுள்ள "இச்சட்டத்தின் 21, 22, 23, 24அ, 25 என்னும் பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்படும் நிறுவனமொன்றல்லாத ஏதேனும் நிறுவகத்தை" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "ஏதேனும் நிறுவனத்தை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 70இ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 70இ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் உள்ள "நிறுவகமொன்று தொடர்பில் 25அ என்னும் பிரிவின்கீழ் பட்டம் வழங்கும் நிறுவகக் கட்டளையொன்றை ஆக்குமுன் அத்தகைய நிறுவகம் தொடர்பில்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "நிறுவகமொன்று தொடர்பில் 25அ என்னும் பிரிவின் கீழ் பட்டம் வழங்கும் நிறுவகக் கட்டளையொன்றை ஆக்குமுன் அத்தகைய நிறுவனம் தொடர்பில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 147 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 147 ஆம் பிரிவு, அதிலுள்ள "பட்டம் வழங்கும் நிறுவகம்" என்னும் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

'"பட்டம் வழங்கும் நிறுவகம்" என்பது 25அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனம் என்று பொருள்படும் ;'.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

216619

7 MAR 198

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

---

*[1988, ஜூலை மாதம் 21 ஆந் தேதியன்று , அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1988 ஜூலை மாதம் 22 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 75 தபாற் செலவு : சதம் 75

216619

17 MAR 1989

1988 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

[1988, ஜூலை மாதம் 21 ஆம் தேதியன்று அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 13/88
1924

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்குவரும் தேதியும்.

1. இச்சட்டம், 1988 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடிய வாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் XIV ஆம் பாகத்திற்கான தலைப்பினைத் திருத்துதல்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் XIV ஆம் பாகத்தில் தோன்றுவதான "மாணவர்கள் தொடர்புப் பேரவைகளும் மற்றைய சங்கங்களும்" என்னும் தலைப்புக்குப் பதிலாகப் பின்வரும் தலைப்பு இத்தால் இடப்படுகின்றது :—

"பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் மற்றைய சங்கங்களும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 112 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 112 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கல்வித் துறை மாணவர் ஒன்றியம் முதலியன,

112. (1) ஒவ்வோர் உயர்கல்வி நிறுவனமும், பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் ஒன்றினைக் கொண்டிருந்தல் வேண்டும். அப்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் " அமைப்பு, கடமைகள், பணிகள் என்பன இச்சட்டத் திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு தல் வேண்டும் ";.

(2) உயர்கல்வி நிறுவனம் ஒன்றின் கல்வித்துறை ஒவ்வொன்றும் கல்வித்துறை மாணவர் ஒன்றியம் ஒன்றினைக் கொண்டிருந்தல் வேண்டும். அக்கல்வித்துறை மாணவர் ஒன்றியத்தின் அமைப்பு, கடமைகள், பணிகள் என்பன இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறாகுதல் வேண்டும்.".

2—ஏ 102754—2,920 (04/88)

(3) ஒவ்வோர் உயர்கல்வி நிறுவனத்தினதும் ஆளும் அதிகாரசபையானது, (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒன்றியங்களின் பதவி தாங்குநர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல்களை நடாத்துகின்ற விதம்பற்றியும், அத்தகைய பதவி தாங்குநர்களின் கடமைகள், பணிகள் பற்றியும் ஆணைவிதி மூலம் விதித்துரைத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 114 ஆம் பிரிவை நீக்கஞ் செய்தல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 114 ஆம் பிரிவு இத்தால் நீக்கம் செய்யப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஓர் உயர்கல்வி நிறுவனம், ஆணைக்குழுவின் ஒருப்பாட்டோடு," என்ற சொற்களுக்குப் பதிலாக "ஓர் உயர் கல்வி நிறுவனம்" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "நூற்றுப் பதினேழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சம்பந்தப்பட்ட உயர்கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபை" என்ற சொற்களுக்குப் பதிலாக "சம்பந்தப்பட்ட உயர்கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகார சபை" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 116 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 116 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவில் தோன்றுகின்ற "மாணவர் தொடர்புப் பேரவை" என்ற சொற்களுக்குப் பதிலாக, "பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் கல்வித்துறை மாணவர் ஒன்றியமும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவிற்கான ஓரக் குறிப்பில் "மாணவர் தொடர்புப் பேரவைக்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக, "பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கும் கல்வித்துறை மாணவர் ஒன்றியத்திற்கும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 117 ஆம் பிரிவை நீக்கஞ் செய்தல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 117 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்திற்கு அட்டவணையைச் **சேர்த்தல்.**

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் முடிவில் பின்வரும் அட்டவணை இத்தால் சேர்க்கப்படுகின்றது :—

" அட்டவணை

(பிரிவு 112)

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் துறை மாணவர் ஒன்றியமும்

1. (1) உயர்கல்வி நிறுவனம் ஒவ்வொன்றினதும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அந்நிறுவனத்தின் முழு மாணவர் சமுதாயத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துதல் வேண்டும்.

(2) உயர்கல்வி நிறுவனம் ஒவ்வொன்றினதும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஒவ்வொரு துறை மாணவர் ஒன்றியத்தினதும் எல்லா உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒன்றியம் பின்வரும் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தலும் வேண்டும் :—

(அ) தலைவர் ;

(ஆ) துணைத் தலைவர் ;

(இ) செயலாளர் ;

(ஈ) பதிப்பாசிரியர் ; அத்துடன்

(உ) கனிட்ட பொருளாளர்.

2. பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கடமைகளும் பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) பல்கலைக்கழக மாணவர்களிடையே கூட்டுறவு வாழ்க்கை உணர்வை வளர்த்தல் ;

(ஆ) ஆளும் அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகத்தில் மாணவர் சேமநலச் செயற்பாடு, பொழுதுபோக்கு வசதிகள், ஆத்மீக, மதச் செயற்பாடுகள், மாணவர்களுக்கு புத்திமதி வழங்குதல் என்பவற்றையும் உணவுகள், சிற்றுண்டிகள் என்பவற்றின் விநியோகத்தையும் ஒழுங்குசெய்தலும் மேற்பார்வைசெய்தலும் ;

(இ) மாணவர்களின் வாழ்க்கை மற்றும் தொழிற்பாட்டு நிலைமைகள் தொடர்பான அல்லது அவற்றுடன் சம்பந்தப்பட்ட கருமங்கள்பற்றி அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் அதிகாரிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட தொடர்பு வழிமுறைகளை ஏற்பாடுசெய்தல் ;

(ஈ) பல்கலைக்கழகத்தில் மாணவர் சேமநலச் செயற்பாடுகளைப் பொறுப்பேற்பதற்கென நியமிக்கப்படக்கூடிய வேறு ஏதேனும் குழுவில், அந்நோக்கத்திற்கென ஆளும் அதிகாரசபையினால் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க, பிரதிநிதித்துவம்பெறுதல் ;

(உ) ஒழுக்காறைப் பேணுவதற்குப் பல்கலைக்கழக அதிகாரிகளுக்குத் துணை புரிதல் ;

(ஊ) ஒழுக்காற்று விசாரணைகளில் குற்றஞ்சாட்டப்பட்ட மாணவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் ;

(எ) மாணவர்களிடையே பண்பாட்டு, இலக்கிய, அழகியல் உணர்வையும் செயற்பாடுகளையும் வளர்த்தலும் மாணவர்களின் சஞ்சிகைகளையும் பருவவிதழ்களையும் ஒழுங்கமைத்து வெளியிடுதலும் ;

(ஏ) நாட்டின் பிரசைகளது கலைகள், வாழ்க்கை, சமூக நலன் என்பவற்றில் ஓர் அக்கறையையும் புரிந்துணரும் சூழ்நிலையையும் வளர்த்தல் ;

(ஐ) மாணவர் சமுதாயத்தின் சமூக, ஒழுக்கநலனுக்கு உகந்த செயற்பாட்டை வளர்த்தலும் செழுமையான சமூக வாழ்க்கைக்கு உகந்த செயற்பாட்டை மேம்படுத்தலும் ;

(ஓ) இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள வேறு பல்கலைக்கழகங்களோடும் இதேபோன்ற ஒழுங்கமைப்புகளோடும் பண்பாட்டு, இலக்கிய, சமூக துறைகளில் ஒன்றோடொன்று செயற்படுவதனை ஒழுங்குபடுத்தலும் மேம்படுத்தலும் ;

(ஔ) பல்கலைக்கழகப் பணியாட்டொகுதியினரோடும் மாணவர்களோடும் ஒத்துழைத்து விரிவாக்கக் கற்கைநெறிகளையும் வயதுவந்தோர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களையும் ஒழுங்கு செய்வதிலும் நிறைவேற்றுவதிலும் ஒன்று சேர்தலும் ;

(ஔ) உயர் கல்வி நிறுவனத்தின் நற்பெயரைக் கட்டிக்காத்துப் பாதுகாத்தலும் ;

(க) பொதுமக்கள் அக்கறையுடைய கருமங்களை விவாதித்தல் ;

(ங) தேசிய நலனையும் தேசிய ஐக்கியத்தையும் முன்னெடுத்துச் செல்லுதல் ;

(ச) அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் ஆதனத்தைக் கட்டிக்காத்துப் பாதுகாத்தல் ;

(ஞ) கல்விசார் நலனை ஊக்குவித்து முன்னெடுத்துச் செல்வதற்கான நடபடிகளை எடுத்தல் ; அத்துடன்

(ட) ஆளும் அதிகாரசபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான ஏதையேனும் செயற்பாடுகளைப் பொறுப்பேற்றல்.

3. (அ) பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்குச் சிரேட்ட பொருளாளர் ஒருவர் இருத்தல் வேண்டும் ; அவர் அத்தகைய ஒன்றியத்தின் பதவி தாங்குநர்களால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட சிரேட்ட ஆசிரியரொருவராதல் வேண்டும்.

(ஆ) பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பதவி தாங்குநர் ஒருவர், துறைமாணவர் ஒன்றியமொன்றில் ஒருங்கியைபாகப் பதவி வகிக்கலாம்.

(இ) இச்சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட பதவிதாங்குநர்கள், ஒரு கல்வியாண்டின் முடிவில் பதவி வகிக்காதொழிதல் வேண்டும்.

(ஈ) பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திலுள்ள பதவியொன்று வெற்றானதாக வருமிடத்து, அப்பொழுது அத்தகைய ஒன்றியம், இயன்றளவு விரைவாக அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமான ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும் ; அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆள் அவருக்கு முன்பு பதவி வகித்தவரின் முடிவுறுதெஞ்சியுள்ள பதவிக்காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(உ) துறைமாணவர் ஒன்றியமொன்றிலுள்ள பதவியொன்று வெற்றானதாக வருமிடத்து, அந்தத் துறையின் மாணவர்கள், இயன்றளவு விரைவாக அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமான ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆள், அவருக்கு முன்பு பதவி வகித்தவரின் முடிவுறுதெஞ்சியுள்ள பதவிக்காலத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும்.

5. (1) பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமொன்று, பிரதான நிறைவேற்று அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட சமூக, பண்பாட்டு, சேமநலச் செயற்பாடுகளுக்காக சம்பந்தப்பட்ட உயர்கல்வி நிறுவனத்தின் அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலரின் அங்கீகாரத்துடன் நிதிகளைத் திரட்டலாம்.

(2) உயர்கல்வி நிறுவனமொன்றின் ஆளும் அதிகாரசபை, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் அல்லது துறை மாணவர் ஒன்றியமொன்றினால் நிதிகள் செலவழிக்கப்படுதல், அந்தந்த ஒன்றியங்களின் கணக்குகளை வைத்திருக்கும் முறை என்பன தொடர்பான விதிகளை ஆக்குதல் வேண்டும்.

5. உயர்கல்வி நிறுவனமொன்றின் ஆளும் அதிகாரசபை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினதும், துறை மாணவர் ஒன்றியத்தினதும் கூட்டங்களை நடாத்துதல், அத்தகைய கூட்ட நடவடிக்கைகளின் பதிவேடுகளைப் பேணும் முறை என்பன தொடர்பான விதிகளை ஆக்குதல் வேண்டும்.

6. (1) துறை மாணவர் ஒன்றியமொன்று, அத்தகைய துறையின் எல்லா மாணவர்களையும் பிரதிநிதித்துவம் செய்வதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒன்றியத்தின் பதவி தாங்குநர்கள், அத்தகைய துறையின் மாணவர்களால் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் அந்தக் கல்வியாண்டிற்குத் தேர்ந்தெடுக்கப்படுதலும் வேண்டும்.

(2) துறை மாணவர் ஒன்றியமொன்று பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) தலைவர் ;

(ஆ) துணைத்தலைவர் ;

(இ) செயலாளர் ;

(ஈ) பதிப்பாசிரியர் ;

(உ) கனிட்ட பொருளாளர் ; அத்துடன்

(ஊ) உயர்கல்வி நிறுவனமொவ்வொன்றினாலும் பின்வரும் முறையில் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு உறுப்பினர்கள் :—

(i) இருநூறு அல்லது அதற்குக் குறைவான பதிவுசெய்யப்பட்ட மாணவர்களைக் கொண்ட ஒரு துறைக்கு இரு உறுப்பினர்கள் ;

(ii) இருநூற்றொன்றிலிருந்து நானூறு வரையிலான பதிவுசெய்யப்பட்ட மாணவர்களைக்கொண்ட ஒரு துறைக்கு நான்கு உறுப்பினர்கள் ;

(iii) நானூற்றி ஒன்றிலிருந்து அறுநூறு வரையிலான பதிவு செய்யப்பட்ட மாணவர்களைக் கொண்ட ஒரு துறைக்கு ஆறு உறுப்பினர்கள் ; அத்துடன்

(iv) அறுநூறுக்கு மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட மாணவர்களைக் கொண்ட ஒரு துறைக்கு எட்டு உறுப்பினர்கள்.

(3) ஒவ்வொரு துறை மாணவர் ஒன்றியத்திற்கும் ஒரு சிரேட்ட பொருளாளர் இருக்கவேண்டும் ; சிரேட்ட ஆசிரியராகிய அவர், அத்தகைய ஒன்றியத்தின் பதவி தாங்குநர்களால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

7. துறை மாணவர் ஒன்றியமொன்றின் கடமைகளும் பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) துறை மாணவர் சமுதாயத்தின் கூட்டுவாழ்வையும் சேமநலத்தையும் மேம்படுத்தல் ;

(ஆ) அதன் மாணவர்களின் கல்விசார் அக்கறைகளை ஊக்குவிப்பதிலும் முன்னெடுத்துச் செல்வதிலுமான நடபடிகளை எடுத்தல் ;

(இ) துறையினதும் நிறுவனத்தினதும் நற்பெயரைக் காப்பீடுசெய்து பாதுகாத்தல் ;

(ஈ) துறை மாணவரிடையே பண்பாட்டு, விளையாட்டுத் துறைச் செயற்பாடுகளை வளர்த்தல் ;

(உ) துறையின் நிதிகளைச் செலவழித்தல், அத்துறையின் மாணவர் சமுதாயத்தின் பொதுச் சேமநலன் என்பன தொடர்பான கருமங்களில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கு விதப்புரைகள் செய்தல் ; அத்துடன்

(ஊ) துறையின் கல்விசார், சேமநலச் செயற்பாடுகள் என்பன தொடர்பான துறை மாணவர் ஒன்றியத்தின் எல்லா முடிபுகளும், அதன் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின் மூலம் எடுக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தல்.''

NATIONAL LIBRARY OF SRI LANKA NLSL

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 300 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

214257

1988-10-21
SRI LANKA

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1988 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

---

*[1988, செப்தெம்பர் மாதம் 15 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

*1988, செப்தெம்பர் மாதம் 16 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : சதம் 80** **தபாற் செலவு : சதம் 75**

ග 000657—3000 (09/88)

214257

1988 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள்
(திருத்தச்) சட்டம்

[illegible stamp] 1988-10-21

[1988 செப்தெம்பர் 15 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 55/88

1988 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள்
(திருத்தச்) சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1988 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 70இ என்னும் பிரிவு, அப்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் 70இ என்னும் பிரிவைத் திருத்துதல்.

"(3) பட்டம் வழங்கும் நிறுவகத்தின் மாணவர் ஒவ்வொருவரும் ஒரு சிறப்புப் பணிப்புத் தேதிக்கு முன்னர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தாலுஞ்சரி அல்லது பின்னர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தாலுஞ்சரி, அத்தகைய பட்டம் வழங்கும் நிறுவகத்தை ஏற்றங்கீகரிக்கும் 25அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய கல்விப் பிரிவுகளில் அந்தப் பட்டம் வழங்கும் நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைக்கு மாத்திரமே தோற்றுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும் எனப் பயன்படும் அத்தகைய பணிப்பை அமைச்சர், பட்டம் வழங்கும் நிறுவகமொன்றுக்கு வழங்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் பட்டம் வழங்கும் நிறுவகமொன்றுக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பணிப்பொன்று அத்தகைய தகவுடைமை பற்றிய பிரச்சினை தொடர்பாக இறுதியானதும் முற்றானதும் ஆதல் வேண்டுமென்பதுடன், சட்ட நீதிமன்றமொன்றிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

(5) மூன்றாம் உட்பிரிவின்கீழ் பட்டம் வழங்கும் நிறுவகமொன்றுக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பணிப்பொன்று—

(அ) அத்தகைய பட்டம் வழங்கும் நிறுவகத்திற்கும் அல்லது அதன் முகாமைச்சபைக்கும் அத்தகைய பட்டம் வழங்கும் நிறுவகத்தின் மாணவர்களுக்கும் ;

(ஆ) அத்தகைய பட்டம் வழங்கும் நிறுவகத்திற்கும் அல்லது அதன் முகாமைச்சபைக்கும் ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்திற்கும் ; அல்லது

(இ) அத்தகைய பட்டம் வழங்கும் நிறுவகத்தின் மாணவர்களுக்கும் ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்திற்கும்

இடையே உள்ள ஏதேனும் உடன்படிக்கையில் அல்லது ஏதேனும் வழக்கில் செய்யப்பட்ட இணக்கத் தீர்ப்பில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும், பயனுடையதாதல் வேண்டும்.".

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*

219393

1989-9-29
SRI LANKA இலங்கை

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1989 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

---

*[1989, மே மாதம் 05 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1989, மே மாதம் 05 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 75* *தபாற் செலவு : சதம் 75*

219393

# 1989 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

(1989, மே மாதம் 05 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

1989-9-29
SRI LANKA இலங்கை

ச. வ—மூ 9/89

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1989 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1978 ஆம் ஆண்டின், 16 ஆம் இலக்கச் சட்டத்தில் 70ஊ, 70எ, 70ஏ, 70ஐ, 70ஒ, 70ஓள, 70க, 70ங என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் 70உ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 70ஊ, 70எ, 70ஏ, 70ஐ, 70ஒ, 70ஓள, 70க, 70ங அத்துடன் 70ரு என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :

"பட்டம் வழங்கும் நிறுவகங்களின் பொறுப்பு முயற்சியை அரசாங்கத்திற்கு உரித்தாக்குவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்

70ஊ. (1) அமைச்சரானவர் பொதுநலன் கருதி பட்டம் வழங்கும் நிறுவகம் ஒன்றினால் கொண்டுநடாத்தப்படும் பொறுப்புமுயற்சியெதனையும் அரசாங்கத்திற்கு உரித்தாக்குவது அவசியமெனக் கருதுமிடத்து, கசெத்தில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய தேதியிலிருந்து அவ்வாறு உரித்தாக்கலாம்.

(2) பட்டம் வழங்கும் நிறுவகமொன்றினால் கொண்டு நடாத்தப்படும் பொறுப்புமுயற்சியானது (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் மூலம் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்படுமிடத்து, அரசாங்கமானது அத்தகைய கட்டளையில் விதித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து எல்லாப் பாரபத்தங்களினின்றும் விடுபட்டு அப்பொறுப்புமுயற்சிக்குப் பூரண உரித்துக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும், அத்தகைய கட்டளை அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் என்னும் பிரேரணையொன்றின் மூலம் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து மூப்பது நாட்களுக்குள்ளும் அத்துடன் பாராளுமன்றம் அமர்வில் இல்லாவிடில் அடுத்துவரும் அமர்வின் தொடக்கத்திலிருந்து ஐம்பது நாட்களுக்குள்ளும் பாராளுமன்றத்தில் இடப்படுதல் வேண்டும்.

(4) பட்டம் வழங்கும் நிறுவகமொன்றினால் கொண்டு நடாத்தப்படும் பொறுப்புமுயற்சியொன்று தொடர்பில், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்றை அங்கீகரிப்பதற்குப் பாராளுமன்றம் மறுக்கின்றவிடத்து, அப்பொறுப்புமுயற்சியானது. அத்

2—டீ 004044—3,135( 03/89)

நட்டஈடு.

70ஓ. (1) எந்த நிறுவகத்தின் பொறுப்பு முயற்சி 70ஊ என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றின்மூலம் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் நிறுவகத்தின் உரிமையாளர்கள், அத்தகைய உரித்தாக்கலுக்கான நியாயமான நட்ட ஈட்டுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) அமைச்சரானவர் பட்டம் வழங்கும் நிறுவகம் ஒன்றினால் கொண்டு நடாத்தப்படுவதும் 70ஊ என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றின்மூலம் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ளதுமான பொறுப்புமுயற்சி தொடர்பில் செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டின் மதிப்பீட்டு முறை தொடர்பாகவும் அத்தகைய நட்டஈடு கொடுக்கப்பட வேண்டிய வீதம் தொடர்பாகவும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டுமென்பதுடன், அது கசெற்றில் வெளியிடப்பட்டதன்பின்னர் இயன்றளவு விரைவாகப் பாராளுமன்றத்தின்முன்னர் அங்கீகாரத்திற்கெனக் கொணரப்படுதலும் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அதன் கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ், ஏதேனும் ஒழுங்குவிதியானது நீக்கப்படுகின்றதெனக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பானது கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும்.

(6) பட்டம் வழங்கும் நிறுவகத்தினால் கொண்டு நடாத்தப்படுவதும் 70ஊ என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றின் மூலம் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ளதுமான ஏதேனும் பொறுப்புமுயற்சி தொடர்பில் செய்யப்பட வேண்டிய எல்லாக் கொடுப்பனவுகளும் திரட்டு நிதியத்திற்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(7) இப்பிரிவில், ஒரு பட்டம் வழங்கும் நிறுவகத்தினால் கொண்டு நடாத்தப்படும் பொறுப்புமுயற்சி தொடர்பில் "உரிமையாளர்" என்பது பயன்படுத்தப்படும்போதெல்லாம், அது அப்பொறுப்புமுயற்சியின் சொந்தக்காரர் என அல்லது அப்பொறுப்புமுயற்சியின் நோக்கங்களுக்காக ஒப்பந்தங்களைச் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பெற்ற வேறெவரேனும் ஆள் எனப் பொருள்படும்.

தவறுகள்.

70ஔ. (அ) பிரிவு 70எ இன்கீழ் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரிக்கு 70உ என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றின்மூலம் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தின் உடைமையை ஒப்படைக்க மறுக்கின்ற அல்லது தவறுகின்ற; அல்லது

(ஆ) அத்தகைய எவரேனும் தகுதிவாய்ந்த அதிகாரியை அத்தகைய ஏதேனும் ஆதனத்தை உடைமையில் எடுப்பதினின்றும் தடுக்கின்ற அல்லது தடை செய்கின்ற அல்லது நேரடியாக அல்லது மறைமுகமாக வேறு எவரேனும் ஆளைக்கொண்டு தடுக்கின்ற அல்லது தடைசெய்கின்ற,

ஆள் எவரும் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

தகுதிவாய்ந்த அதிகாரியின் தத்துவங்கள்.

70க. அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, பட்டம் வழங்கும் நிறுவகம் ஒன்றினால் கொண்டு நடாத்தப்படும் பொறுப்புமுயற்சி ஒன்று 70உ என்னும் பிரிவின் கீழான கட்டளையொன்றின் மூலம் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்படுமிடத்து (அத்தகைய நிறுவகத்தின் பெயரில் பட்டங்கள், டிப்புளோமாக்கள், வேறு கல்விச் சிறப்புக்கள் என்பன வழங்குவதற்கான தத்துவம் உட்பட) அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று IXஅ என்னும் பாகத்தின் கீழ் அந்நிறுவனத்தால் பிரயோகிக்கப்படற்பாலனவான எல்லாத் தத்துவங்களும் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து அப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அப்பொறுப்பு முயற்சியை நிருவகித்து முகாமை செய்வதற்கு நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரியால் பிரயோகிக்கப்படலாம். அத்துடன் அந்நிறுவகம் அத்தகைய தேதியிலிருந்து அத்தகைய ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிகாதொழிதல் வேண்டும். அப்பாகத்தின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடனும் அத்துடன் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமையவும் அத்தகைய பொறுப்பு, முயற்சி ஒவ்வொன்றுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பொறுப்பு முயற்சியைக் கைமாற்றுதல்.

70ஙு. அமைச்சரானவர், பொதுமக்கள் நன்மைக்காக வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சி முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை 70ஙூ என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்றின் மூலம் ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்திற்குக் கைமாற்றலாம் என்பதுடன், அத்தகைய பொறுப்பு முயற்சியை நிருவகித்து முகாமை செய்வதற்கு நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி, அவ்வாறு கைமாற்றப்பட்ட பொறுப்பு முயற்சியிலிருந்து அல்லது அதன் பாகத்திலிருந்து அமைத்துருவாக்கப்பட்ட அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தினது ஏதேனும் துறையின் தலைவராகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் அவர், இச் சட்டத்தின் VII ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய துறையின் தலைவரொருவர் தேர்ந்தெடுக்கப்படும்வரை அத்தகையவராகப் பணிபுரிதலும் வேண்டும்.

பொருள்கோடல்.

70ஞ. பிரிவுகள் 70ஊ தொடக்கம் 70ங வரையும், பட்டம் வழங்கும் நிறுவகம் ஒன்று தொடர்பாக, "பொறுப்புமுயற்சி" என்பது, அத்தகைய நிறுவகம் தொடர்பில் 25அ என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒரு கட்டளையில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய கற்கைக் கிளைகளில் உயர்கல்வியை அபிவிருத்தி செய்வதற்கான பொறுப்புமுயற்சி எனப் பொருளாவதுடன் பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றது :—

(அ) அந்நிறுவகம் தொடர்பில் 70ஊ என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைத் தேதிக்கு நேர் முற்போந்த தேதியன்று அப்பொறுப்பு முயற்சியின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களும்;

(ஆ) அவ்வாதனத்தில் அல்லது பொறுப்புமுயற்சியில் அல்லது அவற்றிலிருந்து எழுகின்ற எல்லா உரிமைகள், தத்துவங்கள், சிறப்புரிமைகள், அக்கறைகள் என்பனவும் அத்துடன் அப்பொறுப்புமுயற்சியின் எல்லாப் பொறுப்புகளும்; அத்துடன்

(இ) அப்பொறுப்புமுயற்சி அல்லது அப்பொறுப்பு முயற்சியின் ஏதேனும் ஆதனம் தொடர்பாக அல்லது அதைச் சேர்ந்த எல்லாப் புத்தகங்கள், கணக்குகள் அத்துடன் ஆவணங்கள் என்பனவும்".

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 177 ; (வெளிநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

257856

07-7-

SRI LANKA

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

---

*(1995, ஜனவரி மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

*1995, ஜனவரி மாதம் 06 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தபாற் செலவு : ரூபா 1.00

(அ) அத்தகைய கட்டளையின் நேர்முந்திய திகதியன்று அத்தகைய நிறுவகத்தால் அல்லது கல்லூரியால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அத்துடன் அத்தகைய நிறுவகத்தின் அல்லது கல்லூரியின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட எல்லா அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமும் அத்தகைய கட்டளைத் திகதியன்று பயனுறும்படி, அத்தகைய கட்டளை மூலம் அத்தகைய நிறுவகம் அல்லது கல்லூரி எந்த உயர்கல்வி நிறுவனத்துடன் ஒன்றிணைக்கப்பட்டதோ அந்த உயர்கல்வி நிறுவனத்திற்கு, அத்தகைய கட்டளைக்கு நேர்முந்திய நாளன்று அத்தகைய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தோடிணைந்த எவையேனும் பாரபந்தங்களுக்கு அல்லது நம்பிக்கைப் பொறுப்புகளுக்கும் அத்தகைய உயர்கல்வி நிறுவகத்தினலும் அத்தகைய நிறுவகத்தின் அல்லது கல்லூரியின் ஆளும் அதிகார சபையினலும் உடன்பட்டுக்கொள்ளப்பட்டவாறான, அவை தொடர்பிலான அத்தகைய நட்டஈட்டுக் கொடுப்பனவிற்கும் அமைவாக கைமாற்றப்பட்டதாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய கட்டளைத் திகதிக்கு நேர்முந்திய திகதியன்று, அத்தகைய நிறுவகத்தின் அல்லது கல்லூரியின் எந்த எல்லா அலுவலர்களிலும் அத்துடன் சேவையாளர்களிலும் —

(i) எந்த உயர்கல்வி நிறுவனத்துடன் அத்தகைய நிறுவகம் அல்லது கல்லூரி ஒன்றிணைக்கப்பட்டதோ அந்த உயர்கல்வி நிறுவனத்தால் அந்த அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் தொழில் முனையப்பட்டு அதனை ஏற்றுக்கொண்டார்களோ அந்த அலுவலர்களும் சேவையாளர்களும் அந்த உயர்கல்வி நிறுவனத்தால் அத்தகைய கட்டளைத் திகதியின் நேர்முந்திய நாளன்று அவர்களால் துய்க்கப்பட்ட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் குறைவானதல்லாத சாதகமான நியதிகள் மீதும் நிபந்தனைகள் மீதும் தொழிலில் அமர்த்தப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ii) அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தால் தொழில் முனையப்படாதவர்களான அல்லது அத்தகைய தொழில் முனைவு எதனையும் ஏற்றுக்கொள்ளாதவர்களான எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும், ஆணைக்குழுவினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நட்டவீட்டுக் கொடுப்பனவுக்கும், பணிக்கொடைக் கொடுப்பனவுக்கும் உரித்துடையவராதலும் வேண்டும்; அத்துடன்

(இ) அத்தகைய நிறுவகத்தின் அல்லது கல்லூரியின் ஆளும் அதிகாரசபை அத்தகைய கட்டளைத் திகதியிலிருந்து, அத்தகைய நிறுவகம் அல்லது கல்லூரி தொடர்பாக எழுத்திலான சட்டம் எதனாலும் அத்தகைய ஆளும் அதிகார சபைக்கு அளிக்கப்பட்ட, அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது பணியை பிரயோகிக்காது அல்லது நிறைவேற்றாது ஒழிதலும்வேண்டும்.

(3) இப்பிரிவில் ஒரு நிறுவகம் அல்லது கல்லூரி தொடர்பாக "ஆளும் அதிகார சபை" என்பது எப்படிப் பெயரிடப்பட்டிருப்பினும் அத்தகைய நிறுவனத்தின் அல்லது கல்லூரியின் நிருவாகம் அத்துடன் முகாமை என்பன பொறுப்பாக்கப்பட்டு உருவமைக்கப்பட்ட பணிப்பாளர் சபை, முகாமைச் சபை, பாலக சபை அல்லது வேறேதேனும் சபை எனப் பொருள்படும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1) (அ) பல்கலைக்கழகமொன்றின் துணைவேந்தர், (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, அப்பல்கலைக்கழகத்தின் பேரவையினால் விதந்துரைக்கப்பட்ட மூன்று பெயர்களைக் கொண்ட ஒரு குழாத்திலிருந்து ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் மூன்றாண்டுக் காலப்பகுதிக்கு நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) ஆளெவரும், அதே பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக அடுத்தடுத்துவரும் இரு காலப்பகுதிகளுக்கு மேலாக நியமிக்கப்படுதலாகாது.

(இ) ஒரு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையின் பின்னர் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.".

**1995 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்.**

*[1995, ஜனவரி மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**ச.வ.—ஓ. 45/94**

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1994 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், அமைச்சர் கசெற்றில் வெளியிடும் கட்டளைமூலம் நியமிக்கும் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். இச்சட்டத்தின் வெவ்வேறு ஏற்பாடுகள் தொடர்பிலும் வெவ்வேறு திகதிகள் நியமிக்கப்படலாம். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தில் 24 ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

"நிறுவகத்தை அல்லது கல்லூரியை உயர் படிப்புக்கான நிறுவனமாக அல்லது நிலையமாக ஏற்றங்கீகரித்தல்.

24ஆ. (1) இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டில் [illegible] எது எவ்வாறிருப்பினும், அமைச்சரானவர் ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்தும், ஏதேனும் நிறுவகத்தின் அல்லது கல்லூரியின் ஆளும் அதிகார சபையின் அத்துடன் அத்தகைய நிறுவகம் அல்லது கல்லூரி எந்த உயர் கல்வி நிறுவனத்துடன் இணைக்கப்படவுள்ளதோ அந்த உயர் கல்வி நிறுவனத்தின் மூதவையினதும் பேரவையினதும் ஒருப்பாட்டுடனும், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையொன்றின் மூலம் அத்தகைய நிறுவகத்தை அல்லது கல்லூரியை, அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிப்புத் துறைகளில் உயர் கல்வியை ஏற்பாடு செய்யும், மேம்படுத்தும் அத்துடன் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன், உயர் படிப்பு நிறுவனமாக அல்லது நிலையமாக ஏற்றங்கீகரிக்கலாமென்பதுடன், அத்தகை கட்டளைமூலம் அத்தகைய நிறுவகத்தை அல்லது கல்லூரியை உயர் கல்வி நிறுவனமொன்றுடன் ஒன்றிணைத்தலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதன்மேல், அத்தகைய நிறுவகம் அல்லது கல்லூரி முதலில் கூறப்பட்ட கட்டளைத் திகதியிலிருந்து 24அ என்னும் பிரிவின்கீழ் கட்டளை ஒன்றின் மூலம் தாபிக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) ஒரு நிறுவகத்தை அல்லது கல்லூரியை உயர் படிப்புக்கானவொரு நிறுவனமாக அல்லது நிலையமாக ஏற்றங்கீகரித்து (1)ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்பட்டதன்மேல் —

முதன்மைச் சட்டவாக்கத்தின் 70ஙு என்னும் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 70ஙு என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) அப்பிரிவை அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவு என மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1)ஆம் உட்பிரிவில் "ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய துறையின் தலைவரொருவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய துறையின் தலைவரொருவர் தேர்ந்தெடுக்கப்படும்வரை, அல்லது பதில் துறைத்தலைவர் ஒருவர் நியமிக்கப்படும்வரை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்த்துக் கொள்வதன் மூலமும்;—

"(2) ஒராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் மூலம் ஓர் உயர்கல்வி நிறுவனத்திற்கு, 70ஙு என்னும் பிரிவினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் மூலம் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சி முழுவதும் அல்லது ஏதேனும் பாகம் கைமாற்றப்படுவது, எது எவ்வாறிருப்பினும், அத்தகைய பொறுப்பு முயற்சியை நிருவகிப்பதற்கும், முகாமை செய்வதற்குமென நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரியும் அத்துடன் அவரது பதவிக்கு அடுத்தமைவோரும் —

(அ) அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகார சபையின் பணிப்புகளுக்கு அமைவாகவும்; அத்துடன்

(ஆ) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய திகதிவரையும்,

ஒராம் உட்பிரிவின் கீழான கட்டளைக்கு திகதிக்கு நேர்முந்திய நாளன்று அந்தப் பொறுப்புமுயற்சியுடன் பதிவு செய்துள்ள மாணவர்கள் தொடர்பாக, (அத்தகைய பொறுப்பு முயற்சியால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் நிறுவகத்தின் பெயரில பட்டங்கள், டிப்புளோமாச் சான்றிதழ்கள், அத்துடன் வேறு கல்விசார் திறமைச் சித்திகள் உட்பட) 70க என்னும் பிரிவின்கீழ், அத்தகைய தகுதி வாய்ந்த அதிகாரியால் பிரயோகிக்கப்படற்பாலனவான எல்லாத் தத்துவங்களையும் தொடர்ந்தும் பிரயோகித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய மாணவர் ஒவ்வொருவரும் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் திகதிவரை, அத்தகைய பொறுப்பு முயற்சியின் மாணவர் ஒருவராக, அவர் துய்த்த வசதிகளைத் துய்க்கவும் வேண்டும்.

(3) பிரிவு 70 (ஙு) என்பதன் கீழான கட்டளையொன்றின் மூலம் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டவொரு பொறுப்பு முயற்சி முழுவதும் அல்லது அதன் ஏதேனும் பாகம் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின்மூலம் உயர் கல்வி நிறுவனமொன்றுக்குக் கைமாற்றப்படுமிடத்து, இச்சட்டத்திலுள்ளதெதுவும், (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளைத்

திகதிக்கு முந்திய நாளன்று, அந்தப் பொறுப்புமுயற்சியுடன் பதிவு செய்துகொண்ட மாணவர் எவருக்கும் அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தின் ஏதேனும் பட்டத்தை, டிப்புளோமாவை, சான்றிதழை அல்லது வேறு கல்விசார் திறமைச் சித்திகளை வழங்குவதற்கான ஏதேனும் உரிமையை அளிக்கின்றதாக வாசிக்கப்படுதலோ, பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது.

(4) இப்பிரிவின் நோக்கத்திற்காகவும், அத்துடன் இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டில் மூரணுகை எது எவ்வாறிருப்பினும் "பொறுப்புமுயற்சி" என்ற சொற்றொடர் சேவைகளின் வழங்கலின் பாட்டிற்கென 70ஏ என்னும் பிரிவின்கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின் அல்லது உடன்படிக்கையின் கீழான உரிமைகளையும் பொறுப்புக்களையும் உள்ளடக்குதலாகாது.".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1) ஆசிரியர் பதவிக்கான ஒவ்வொரு நியமனமும், முதலாவதாக மூன்றாண்டுகாலத் தகுதிகாண் காலப்பகுதிக்கானதாகவிருத்தல் வேண்டும் ; அத்தகைய ஆசிரியர் எந்த உயர் கல்வி நிறுவனத்துக்கு இணைந்தவராகவுள்ளாரோ அந்த உயர்கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகாரியினால், அத்தகைய காலப்பகுதி ஒரு தடவையில் ஓராண்டு காலத்துக்கென்றவாறு ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு மேலதிகக் காலப்பகுதிக்கு நீடிக்கப்படலாம் :

ஆயின், நியமனமானது —

(அ) ஆசிரியர் பதவிக்கானதாகவிருந்து, நியமிக்கப்பட்டவர் இன்னுமோர் உயர்கல்வி நிறுவனத்தில் அல்லது நியமிக்கப்பட்டவர் இணைந்தவராகவுள்ள உயர்கல்வி நிறுவனத்தின் வேறு ஒரு பகுதியில் உள்ள ஆசிரியர் பதவியில் முன்னர் உறுதிப்படுத்தப்பட்டவராகவுள்ளவிடத்து, அத்தகைய நியமனம், முதலாவதாக ஓராண்டுகால தகுதிகாண் காலப்பகுதிக்கானதாகவிருத்தல் வேண்டும் ;

(ஆ) ஆசிரியர் பதவிக்கானதாகவிருந்து, நியமிக்கப்பட்டவர் இன்னுமோர் உயர்கல்வி நிறுவனத்தில் உள்ள ஆசிரியர் பதவிக்குச் சமமாகவுள்ள ஏதேனும் பதவியில் முன்னர் உறுதிப்படுத்தப்பட்டவராகவுள்ளவிடத்து, அத்தகைய நியமனம் ஏதேனும் தகுதிகாண் காலப்பகுதிக்கு அமைந்ததாகவிருத்தலாகாது ; அத்துடன்

(இ) ஆசிரியர் பதவிக்கானதாகவிருந்து, நியமிக்கப்பட்டவர் இணைந்தவராகவுள்ள உயர்கல்வி நிறுவனத்தின் அதே பகுதியிலுள்ள வேறேதேனும் பதவியில் முன்னர் உறுதிப்படுத்தப்பட்டவராகவுள்ளவிடத்து, அத்தகைய நியமனம் ஏதேனும் தகுதிகாண் காலப்பகுதிக்கு அமைந்ததாகவிருத்தலாகாது.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவு, இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு, இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"ஆசிரியர் பதவி தவிர்ந்த ஒரு பதவிக்கான நியமனம்.

74. ஆசிரியர் பதவி தவிர்ந்ததான பதவியொன்றுக்கான நியமனம் ஒவ்வொன்றும், முதல் தடவையில், மூன்றுமாதங்கள் கொண்ட தகுதிகாண் காலப்பகுதியொன்றுக்கானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அதன் பின்னர், அத்தகைய நியமனமானது, ஆசிரியர் பதவி தவிர்ந்த வேறொரு பதவியிலிருந்து, ஆசிரியர் பதவி தவிர்ந்த வேறொரு பதவிக்குப் பதவி உயர்வு காரணமாக இருக்குமிடத்துத் தவிர, ஆணைக்குழுவின் அல்லது அத்தகைய நியமனம் எந்த உயர்கல்வி நிறுவனத்திற்குத் தொடர்புறுத்துகின்றதோ அந்த உயர்கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகார சபையின் உறுதிப்படுத்துகைக்கு அமைந்ததாதல் வேண்டும் :

ஆயின், ஆணைக்குழுவில் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றில் ஆசிரியர் தவிர்ந்த பதவியொன்றுக்கான எந்த ஆளின் நியமனம் உறுதிப்படுத்தப்பட்டு, பதவியுயர்வு வாயிலாக அல்லது 66அ என்னும் அல்லது 144 என்னும் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் தவிர வேறுவகையாக ஆணைக்குழுவில் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றின் ஆசிரியர் தவிர்ந்த வேறொரு பதவிக்கு அடுத்து நியமிக்கப்படுமிடத்து, அவரது அடுத்த நியமனம் முதல் தடவையிலே ஓராண்டு தகுதிகாண் காலப்பகுதிக்கானதாதல் வேண்டும் ; அத்துடன் அதன் பின்னர், விடயத்துக்கேற்றாற்போன்று ஆணைக்குழுவினுலான அல்லது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகார சபையினுலான உறுதிப்படுத்துகைக்கு அமைந்ததாதலும் வேண்டும்.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "பதவியேற்றங்கள் பற்றியும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகச் சார்த்தப்பட்ட பதவியேற்றங்கள் பற்றியும் அத்துடன் பதவிகளில், வெற்றிடங்கள் ஏற்பட்டபோது அத்தகைய பதவிகளுக்கு நியமனங்கள் அல்லது பதவியேற்றங்கள் செய்யப்படவில்லையென்ற சார்த்துரைகள் பற்றியும்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(2அ) (அ) (இப்பிரிவில் இதனகத்துப் பின்னர் "நியமத்தர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உதவுதொகை செலுத்துநர் ஒருவர் அத்தகைய உதவுதொகை செலுத்துநரின் இறப்பின்மேல்,

உதவுதொகை செலுத்துநரின் கணக்கில் வரவிலுள்ள பணங்கள் எந்த ஆளுக்குச் செலுத்தப்படுதல் வேண்டுமோ அந்த ஆளைப் பெயர்குறித்து நியமிக்கலாம்.

(ஆ) பெயர்குறித்து நியமிப்பவரின் மரணசாதனத்திற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், பந்தி (அ) என்பதன்கீழ் செய்யப்பட்ட பெயர் குறித்த நியமனம், பயன்கொண்டதாதல் வேண்டும்.

(இ) பந்தி (அ) என்பதன் கீழ் செய்யப்பட்ட நியமனமானது, நியமத்தவரின் சீவிய காலப்பகுதியில் நியமத்தரின் இறப்பின் மூலமாக, அல்லது சாட்சிக்காரர் ஒருவரின் முன்னிலையில் நியமித்தவரால் கையொப்பமிடப்பட்ட எழுத்திலான இல்லாதொழிப்பு அறிவித்தல் மூலமாக அல்லது நியமித்தவரினால் செய்யப்பட்ட ஏதேனும் பின்னரான பெயர்குறித்த நியமனத்தினால் இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் நியமித்தவரின் கையொப்பம் சாட்சிக்காரரால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஈ) சகாய நிதியத்தில் உதவுதொகை செலுத்துநரொருவரின் கணக்கில், வரவில் உள்ள பணங்கள் எவையும், நியமத்தர் ஆணைக்குழுவின் செயலாளரை அவரது ஆளடையாளம் பற்றித் திருப்திப்படுத்தினாலன்றி, அவருக்குச் செலுத்தப்படுதலாகாது.

(உ) உதவுதொகை செலுத்துநர் ஒருவரின் இறப்பின்மீது, அத்தகைய உதவுதொகை செலுத்துநரின் நியமத்தருக்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவரின் கணக்கில் வரவில் உள்ள எவையேனும் பணங்களைக் கையளிப்பது, அத்தகைய பணங்கள் தொடர்பில், ஆணைக்குழுவின் கடப்பாடுகளை முற்றாகப் பொறுப்பு விடுவிப்பதாதல் வேண்டும்.".

(2) அந்தப் பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்துவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(4) உதவுதொகை செலுத்துநர் ஒருவர், ஆணைக்குழுவின் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றில் சேவையாற்றுகையில் இறக்குமிடத்து, ஆணைக்குழுவின் செயலாளர், 94 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சகாய நிதியத்தில் அவரது கணக்கில் வரவில் இருக்கின்றதான மூழுத்தொகையையும், அதன்மீது திரண்டுள்ள வட்டியுடன் சேர்த்து, (2அ) என்னும் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட நியமத்தருக்கு, அல்லது நியமத்தர்களுக்கு

அல்லது வலிதான நியமித்தல் இல்லையெனின் அத்தகைய தொகைக்கு உரித்தாகவுள்ள ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு செலுத்துதல் வேண்டும்.".

9. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1,819 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2009 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க,
## பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

*(2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2009, ஒற்றோபர் மாதம் 09 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 3.50*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

## *2009 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்*

[*2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச. வ. ஓ. 49/2007*

## *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

***1.*** *இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2.*** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 48 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் பந்திகள் (ஆ), (இ) மற்றும் (ஈ) என்பவற்றை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-*

"(ஆ) *பீடத்தின் கற்கைத்துறையில் அடங்கியுள்ள எல்லா நிரந்தரமான சிரேட்ட பேராசிரியர்களும், பேராசிரியர் களும், இணைப் பேராசிரியர்களும், சிரேட்ட விரிவுரை யாளர்களும் மற்றும் விரிவுரையாளர்களும் ;*

(இ) *பீடத்தின் விரிவுரையாளர்களால் (தகுதிகாண்நிலை) அத்தகைய விரிவுரையாளர்களிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் ;*

(ஈ) *அத்தகைய பணியாட்டொகுதியின் உறுப்பினர் களிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களும், பந்திகள் (ஆ) மற்றும் (இ)என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டவர்கள் அல்லாதவர்களுமான, அறிவுறுத் தல்களை வழங்குகின்ற, பீடத்தைச் சார்ந்த நிரந்தர மான பணியாட்டொகுதி யின் இரண்டு உறுப்பினர்கள்;".*

2-PL 004221 - 1,190 (2009/07)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ii) ஆம் பந்தியை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(ii) காலத்துக்குக்காலம் ஆக்கப்பட்ட விதிகளால் ஆணைக் குழுவால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான சம்பளக்கோவையை அல்லது ஆகக்குறைந்த சம்பளப் புள்ளியைக்கொண்ட, ஆசிரியர் பதவி அல்லாத, ஒரு பதவிக்கான நியமனம் :

ஆயின், ஆணைக்குழுவானது மேற்குறித்த பதவிகளின் நியமனங்களுக்கான விதப்புரையை அனுப்பிவைக்குமாறு, அதன்சார்பாக ஆக்கப்பட்ட விதிகளினால் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப் பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்க அந்த அந்த உயர் கல்வி நிறுவனங்களைத் தேவைப்படுத்தலாம். அத்தகைய விதப்புரையைப் பெற்றதன்மீது ஆணைக் குழு அவசியமான நியமனங்களைச் செய்தல் வேண்டும் ; அத்துடன்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"ஆயின், நியமனமானது :-

(அ) ஆசிரியர் பதவியொன்றிற்கான நியமனமாக இருக்கின்றவிடத்தும் மற்றும் நியமிக்கப்பட்டவர் வேறோர் உயர்கல்வி நிறுவனத்தில் அல்லது நியமிக்கப்பட்டவர் சார்ந்திருக்கும் உயர்கல்வி நிறுவனத்தின் வேறோர் திணைக்களத்தில் ஆசிரியர் பதவியொன்றில் முன்னரே உறுதிப்படுத்தப்பட்டுள்ள வராக இருக்கின்றவிடத்தும், அத்தகைய நியமனம் முதற்கண் ஓராண்டு காலத்துக்கான தகுதிகாண் நிலையிலிருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) ஆசிரியர் பதவியொன்றிற்கான நியமனமாக இருக்கின்றவிடத்தும் மற்றும் நியமிக்கப்பட்டவர் வேறோர் உயர்கல்வி நிறுவனத்தில் அல்லது

நியமிக்கப்பட்டவர் சார்ந்திருக்கும் உயர்கல்வி நிறுவனத்தின் வேறோர் திணைக்களத்தில் ஆசிரியர் பதவிக்கு சமனான ஏதேனும் பதவியொன்றில் முன்னரே உறுதிப்படுத்தப்பட்டுள்ளவராக இருக்கின்ற விடத்தும், அத்தகைய நியமனம் முதற்கண் ஓராண்டு காலத்துக்கான தகுதிகாண் நிலையிலிருத்தல் வேண்டும்.".

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவு "ஆசிரியர் அல்லாத வேறு ஏதேனும் பதவிவகிப்பவர்" என்பதிலிருந்து "ஓய்வுபெற்றுள்ளவராகக் கருதப்படுதலும் வேண்டும்:" என்பது வரையான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுதல்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"ஆசிரியர் பதவியல்லாத வேறு ஏதேனும் பதவியை வகிப்பவர், அத்தகைய அலுவலரின் ஓய்வுபெறுவதற்கான விருப்பத்தெரிவு வயதிற்கு, அதாவது ஐம்பத்தைந்து வயதிற்கு, அப்பாலும் பதவியில் தொடர்ந்திருத்தலும் வேண்டுமென்பதுடன், ஐம்பத்தேழாம் வயதை எய்தும்வரையில் சேவையிலிருத்தலும் வேண்டும். அத்துடன், அதன்பின்னர் அவர் சேவையிலிருந்து தன்னிச்சையாக ஓய்வுபெற்றுள்ளவராகக் கருதப்படுதலும் வேண்டும்:".

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 147 ஆம் பிரிவு "ஆசிரியர்" என்னும் சொல்லுக்கான வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 147 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"ஆசிரியர்" என்பது ஒரு சிரேட்ட பேராசிரியர், பேராசிரியர், இணைப் பேராசிரியர், சிரேட்ட விரிவுரையாளர் தரம் I, சிரேட்ட விரிவுரையாளர் தரம் II, விரிவுரையாளர் மற்றும் விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) ஆகியவர்களும் மற்றும் எந்தப் பதவியை வகிப்பவர் ஓர் ஆசிரியரெனக் கட்டளைச் சட்டத்தால் வெளிப்படுத்தப்பட்டுள்ளாரோ அந்தப் பதவியெதனையும் வகிப்பவரும் எனப் பொருள்படும் ; அத்துடன்".

**7**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2016 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க,*
## பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

---

*(2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2016*, ஒற்றோபர் மாதம் *07* ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *10.00*** **தபாற் செலவு : ரூபா *10.00***

## *2016 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்*

[*2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.ஓ. 35/2013*

## *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன் றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப்பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் 75 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

***2.*** *(இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 75 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :-*

*"ஆசிரியர்கள் தவிர்ந்த ஆட்களின் ஓய்வுபெறுகை.*

*75. (1) காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டவாறான பகிரங்க அலுவல ரொருவரின் ஓய்வூதிய வயது ஆசிரியர் பதவி தவிர்ந்த ஏதேனும் பதவியை வகிப்பவரின் ஓய்வூதிய வயது தொடர்பில் பகிரங்க அலுவலரொருவருக்கு ஏற்புடையதான அதே திகதியிலிருந்து பயனுறும் வகையில் ஏற்புடையதாதல் வேண்டும்.*

*(2) (அ) ஆணைக்குழு அல்லது அத்தகைய ஏதேனும் பதவியை வகிப்பவர் எந்த உயர்கல்வி நிறுவனத்தைச் சேர்ந்துள் ளாரோ அந்த ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் ஆளுகின்ற அதிகார சபை அல்லது அத்தகைய ஆள் உயர்கல்வி நிறுவகமொன்றைச் சேர்ந்தவராகவிருக்கும் விடயத்தில், அத்தகைய நிறுவகம் எந்த உயர்கல்வி நிறுவனத்துடன் இணைந்துள்ளதோ அந்த உயர்கல்வி நிறுவனத்தின்*

2-PL 010093 -961 (2016/07)

ஆளுகின்ற அதிகாரசபை, துர்நடத்தை, வினைத்திறனின்மை அல்லது கடமை யிலான தவறுகை என்பவற்றுக்காக, ஆணைக்குழுவினாலான அல்லது நிறுவகத்தின் அத்தகைய ஆளுகின்ற அதிகாரசபையினாலான ஒரு விசாரணை முடிவுறாதிருக்கையில் அத்தகைய பதவியை வகிப்பவரை நிறுவகத்தின் விதப்புரைகளின் அடிப் படையின் மீது இடைநிறுத்தலாம் ; அல்லது

(ஆ) அத்தகைய பதவிவகிப்பவர் அத்தகைய விசாரணையின் பின்னர் குற்றவாளி யாக காணப்படுமிடத்து, அத்தகைய ஆள் எந்த உயர்கல்வி நிறுவகத்தைச் சேர்ந்துள்ளாரோ அந்த உயர்கல்வி நிறுவகத்தின் அல்லது அத்தகைய ஆள் ஓர் உயர்கல்வி நிறுவனத்தை சேர்ந்துள்ளவராக இருக்கும் விடயத்தில் அத்தகைய நிறுவகம் எந்த உயர்கல்வி நிறுவனத்துடன் இணைந்துள்ளதோ அந்த உயர்கல்வி நிறுவனத்தின் ஆளுகின்ற அதிகாரசபை விடயத்துக் கேற்ப ஆணைக்குழு, உயர்கல்வி நிறுவகத்தின் ஆளும் அதிகாரசபை என்பன ஆணைக்குழுவால் அல்லது இயைபான உயர்கல்வி நிறுவகத்தின் ஆளும் அதிகாரசபையால் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தின் மீது அத்தகைய பதவிவகிப்பவர் நீக்கப்படலாம் அல்லது அவரை வலுக்கட்டாயமாக ஓய்வு பெறச் செய்யலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 147 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 147 ஆம் பிரிவு, "ஆளுகின்ற அதிகாரசபை" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"உயர்கல்வி நிறுவகம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவின் கீழ் அல்லது 24ஆ என்னும் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட உயர்கற்கைக்கான ஒரு நிறுவகம் என்று பொருளாகும்.

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*